பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 318

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்
ஏழாவது பாராளுமன்றம்
(முதலாவது கூட்டத்தொடர்)

இடைக்கால அறிக்கை

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு

(08 ஒக்டோபர் 2013 தொடக்கம் 08 ஏப்பிரல் 2014 வரை)

குழுவின் தவிசாளர்
கௌரவ டியூ. குணசேகர அவர்களால்
2014, ஆகஸ்ட் 05ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.

இலங்கைப் பாராளுமன்றத்தினால் 2014 ஆகஸ்ட் 05 அச்சிடுவதற்குக் கட்டளையிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

அரசாங்க வெளியீட்டுப்பிரிவு, கொழும்பில் பெற்றுக்கொள்ளலாம்

விலை ரூபா: தபால் மூலம் ரூபா:

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு
ஏழாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர்

01. கௌரவ டியூ. குணசேகர (தவிசாளர்)
02. கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னி ஆராச்சி
03. கௌரவ ஏ.டி. சுசில் பிரேமஜயந்த
04. கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன
05. கௌரவ சந்திரசிறி கஜதீர
06. கௌரவ ஏ.பீ. ஜகத் புஷ்பகுமார
07. கௌரவ ரி.பி. ஏக்கநாயக்க
08. கௌரவ மஹிந்த அமரவீர
09. கௌரவ எஸ்.எம். சந்திரசேன
10. கௌரவ (கலாநிதி) மேர்வின் சில்வா
11. கௌரவ லசந்த அலகியவன்ன
12. கௌரவ சரண குணவர்தன
13. கௌரவ வீரகுமார திசாநாயக்க
14. கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல
15. கௌரவ கரு ஜயசூரிய
16. கௌரவ ரவி கருணாநாயக்க
17. கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்
18. கௌரவ சஜித் பிரேமதாஸ
19. கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி
20. கௌரவ அர்ஜுன ரணதுங்க
21. கௌரவ எம்.ரி. ஹஸன் அலி
22. கௌரவ அ. விநாயகமூர்த்தி
23. கௌரவ ஹரின் பெனான்டோ கௌரவ (வண.)
24. அதுரலியே ரதன தேரர்
25. கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்
26. கௌரவ நாமல் ராஜபக்ஷ
27. கௌரவ இரான் விக்கிரமரத்ன
28. கௌரவ (பேராசிரியர்) ராஜீவ விஜேசிங்க
29. கௌரவ ஈ. சரவணபவன்
30. கௌரவ சுஜீவ சேனசிங்க
31. கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் தொடர்பான உபகுழு1

01. கௌரவ ஏ.டி. சுசில் பிரேமஜயந்த (தவிசாளர்)
02. கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னி ஆராச்சி
03. கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன
04. கௌரவ சந்திரசிறி கஜதீர
05. கௌரவ ரி.பி. ஏக்கநாயக்க
06. கௌரவ மஹிந்த அமரவீர
07. கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல
08. கௌரவ ரவி கருணாநாயக்க
09. கௌரவ ஹரின் பெனான்டோ
10. கௌரவ சுஜீவ சேனசிங்க

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் தொடர்பான உபகுழு 2

01. கௌரவ கரு ஜயசூரிய (தவிசாளர்)
02. கௌரவ ஏ.பீ. ஜகத் புஷ்பகுமார
03. கௌரவ எஸ்.எம். சந்திரசேன
04. கௌரவ (கலாநிதி) மேர்வின் சில்வா
05. கௌரவ சரண குணவர்தன
06. கௌரவ வீரகுமார திசாநாயக்க
07. கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்
08. கௌரவ சஜித் பிரேமதாஸ
09. கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி
10. கௌரவ நாமல் ராஜபக்ஷ

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் தொடர்பான உபகுழு 3

01. கௌரவ லசந்த அலகியவன்ன (தவிசாளர்)
02. கௌரவ அர்ஜுன ரணதுங்க
03. கௌரவ எம்.ரி. ஹஸன் அலி
04. கௌரவ அ. விநாயகமூர்த்தி
05. கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்
06. கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்
07. கௌரவ இரான் விக்கிரமரத்ன
08. கௌரவ (பேராசிரியர்) ராஜீவ விஜேசிங்க
09. கௌரவ ஈ. சரவணபவன்
10. கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க

உள்ளடக்கம் **பக்கம்**

1. தவிசாளரின் குறிப்பு vi
2. நிகழ்வுகள் நிறைந்த கடந்த காலமொன்றின் முக்கிய விடயங்கள்..... vii
3. முன்னுரை..... viii
4. போதியளவு வெளிப்படைத்தன்மையற்ற பிரதான கொடுக்கல் வாங்கல்கள்..... x
5. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்..... xii
6. பொதுவான அவதானிப்புக்கள்..... xiv
7. பரிசீலிக்கப்பட்ட நிறுவனங்களின் நிதிநிலைமை..... xx
8. பாராளுமன்றத்திற்கு வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்..... xxv
9. 2011ஆம் ஆண்டில் வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்காத நிறுவனங்கள்..... xxv
10. 2012ஆம் ஆண்டில் வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்காத நிறுவனங்கள்..... xxv
11. கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயம்..... xxvii
12. தகுதியற்ற அபிப்பிராயம்..... xxviii
13. தகுதிவாய்ந்த அபிப்பிராயம்..... xxviii
14. உரிமை மறுப்பு அபிப்பிராயம்..... xxix
15. பாதகமான அபிப்பிராயம்..... xxix

16. பிரதான குழுவினால் பரீட்சிக்கப்பட்ட நிறுவனங்கள..... xxxiii

17. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை 1
18. கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் 3
19. தேசிய இடர்முகாமைத்துவ நிலையம் 5
20. அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனம்..... 6
21. தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை 9
22. இலங்கைக் கடற்றொழில் கூட்டுத்தாபனம் 12
23. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 17
24. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் 21
25. நகர அபிவிருத்தி அதிகார சபை 25

26. இலங்கை நியமங்கள் நிறுவகம் 31
27. இலங்கை அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடட் 34
28. மத்திய சுற்றாடல் அதிகாரசபை 36
29. கொழும்புப் பல்கலைக்கழகம் 40
30. புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம் 46
31. அரச ஈட்டு, முதலீட்டு வங்கி 46
32. எச்.டி.எப்.சி. வங்கி 50
33. தேசியக் கல்வி நிறுவகம் 54
34. இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகம் 57
35. வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா 60
36. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் 61
37. தேசிய சேமிப்பு வங்கி 63
38. நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை 66
39. இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 71
40. இலங்கை உள்ளூராட்சி நிறுவகம் 74
41. தேசிய போக்குவரத்து ஆணைக்குழு 78
42. கூட்டுறவு மொத்த விற்பனவுத்தாபனம் (CWE) 80
43. இலங்கை மின்சார சபை 82
44. வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா 84
45. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் 87
46. ஸ்ரீ லங்கா ரெலிகொம் 92

47. உபகுழு 1 இனால் பரீட்சிக்கப்பட்ட நிறுவனங்கள் 95

48. மானுடவியல், சமூக விஞ்ஞானம் ஆகிய உயர் கற்கைகளுக்கான தேசிய நிலையம் 97
49. இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம் 98
50. பாளி, பௌத்த பட்டப்பின்படிப்பு நிறுவகம் 100
51. இலங்கை வாழ்க்கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை 102
52. வாழ்க்கைத்தொழில் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் 106
53. மூன்றாம்நிலைத் தொலைக்கல்வி ஆணைக்குழு 107

54. உபகுழு 2 இனால் பரீட்சிக்கப்பட்ட நிறுவனங்கள் 109

55. தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை 111
56. தெங்கு பயிற்செய்கைச் சபை 113
57. இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் 114
58. சுகததாச தேசிய விளையாட்டுத்தொகுதி அதிகாரசபை 123
59. இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபை 127
60. தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம் 129

61. உபகுழு 3 இனால் பரீட்சிக்கப்பட்ட நிறுவனங்கள் 131

62. இலங்கை புடவைகள், ஆடைகள் நிறுவகம் 133
63. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் 136
64. இலங்கை மாநாட்டுப் பணியகம் 137
65. தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் 139
66. இலங்கைக் காப்புறுதிச் சபை 140
67. இலங்கைச் சமூக பாதுகாப்புச் சபை 142

68. சுட்டி 144

தவிசாளரின் குறிப்பு

இத்தால் பாராளுமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட இடைக்கால அறிக்கை 2013.10.08 ஆம் திகதி முதல் 2014.04.08 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் COPE மூலம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் முடிவுகளை உள்ளடக்கிக் காணப்படுகின்றது. அது உண்மையில் காலாண்டு ரீதியான அறிக்கைகளாக ஆற்றுப்படுத்த உத்தேசிக்கப்பட்டாலும் தொழில் நுட்பம் சார்ந்த பல காரணங்களினால் செயல்முறை சாத்தியமான விதத்தில் அதனை அவ்வாறு மேற்கொள்ள முடியவில்லை.

எனினும், குழு 2014 ஆம் ஆண்டு இறுதியளவில் சமர்ப்பிக்கவிருக்கும் இறுதி அறிக்கைக்கு முன்னதாக மற்றுமொரு இடைக்கால அறிக்கையை ஆற்றுப்படுத்த உத்தேசிக்கின்றது.

இந்த இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதன் மூலம் எதிர்வரும் வரவு-செலவுத்திட்டத்திற்கு முன்னர் ஆற்றுப்படுத்துவதற்குத் திட்ட மிடப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் நிமித்தம் காத்திருக்காது ஏற்கனவே ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பான COPE குழு முடிவுகளைக் கௌவர பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாசிக்கக்கூடிய ஒரு வாய்ப்புக் கிட்டும். இது உடனடித் தேவை எனும் பின்னூட்டல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கும் COPE குழுவினது அவதானிப்பு விடயங்களையும் சிபாரிகளையும் அனுசரித்து நடப்பதற்குத் தலைமைக் கணக்கீட்டு அதிகாரிகளையும் அதே நேரம் நிறுவனத் தலைவர்களையும் இயலவும் செய்யும்.

COPE குழுவின் செயல்நோக்கின் கீழ் வரும் அதிகமான நிறுவனங்களின் செயலாற்றுகையானது பாராட்டத்தக்க விதத்தில் மேம்பட்டுள்ளது என்பது அபிப்பிராயமாகும். ஒரு சில நிறுவனங்களைத் தவிர, ஏனைய சில நிறுவனங்கள் சரியான உரிய நேர காலத்திற்குத் தமது நிதிக் கூற்றுக்களைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்குத் தற்பொழுது பழக்கப்பட்டுள்ளன. பாராளுமன்றத்திற்கு வருடாந்த அறிக்கைகளை ஆற்றுப்படுத்தும் விடயமும் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது.

நடப்பெண் இல்லாமல் கூட்டத்தை நடத்தத் தவறிய ஒரு சந்தர்ப்பம் COPE குழுவுக்கு இல்லை என்ற விடயம் பாராட்டப்பட வேண்டியதாகும்.

COPE குழுவின் அலுவலர்கள் நல்கிய ஒத்துழைப்புக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களையும் நன்றியையும் உரித்தாக்க விரும்புவதோடு அரசாங்க சேவையில் பணியாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற COPE குழு செயலாளர் திரு எம்.என். பீரிஸ் அவர்களின் சேவையையும் மனமார்ந்து பாராட்டவும் விரும்புகின்றேன். பல பதவிகளை வகித்துக் குறிப்பாக COPE குழுவின் செயலாளராகப் பாராளுமன்றத்திற்கு அவர் 12 வருடங்கள் நல்கிய பங்களிப்பு விஷேடமானது என்பதை நினைவூட்டுவதில் மகிச்சியடைகின்றேன்.

COPE குழுவின் அலுவலர்களுக்குப் போதிய இடவசதிகளும் பயிற்சிகளும் வழங்கப்பட வேண்டும் எனக் கௌரவ சபாநாயகருக்கும் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்திற்கும் பரிந்துரை செய்கின்றேன்.

டியூ குணசேகர (பா.உ)
தவிசாளர்
பொது முயற்சிகள் பற்றிய குழு

நிகழ்வுகள் நிறைந்த கடந்த காலமொன்றின் முக்கிய விடயங்கள்

- ஏழாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடருக்கான அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் **முதலாவது கூட்டம்** 2010 யூன் 08ஆம் திகதி நடைபெற்றது.

- முதலாவது கூட்டத்தில் மேற்கொண்ட தீர்மானத்திற்கமைய, நுண்ணாய்வுச் செயற்பாட்டைத் துரிதப்படுத்த மூன்று உபகுழுக்கள் அமைக்கப்பட்டன.

- முதலாவது பரிசீலனை 2010 ஓகஸ்ட் 04ஆம் திகதி நடைபெற்றது.

- 229 அரச நிறுவனங்கள் பற்றிய குழுவின் **முதலாவது அறிக்கை 2011 டிசெம்பர் 01**ஆம் திகதி சபாபீடத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

- முதலாவது அறிக்கை தொடர்பான பின்னாய்வு முயற்சி என்ற வகையில், அறிக்கை பற்றித் தெளிவுபடுத்துவதற்கு அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களும் 2012 ஜனவரி 17ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு அழைக்கப்பட்டனர்.

- **2012 மே 08**ஆம் திகதி **முதலாவது அறிக்கை** பற்றிச் சபையில் **விவாதிக்கப்பட்டது**.

- 32 நிறுவனங்கள் பற்றிய இடைக்கால அறிக்கையொன்று **2012 ஒக்டோபர் 25**ஆம் திகதி சபாபீடத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

- குழுவின் பணிப்புரையின் பேரில், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களம் தனது வரலாற்றில் முதற்தடவையாக 2011.06.01ஆம் திகதி முதல் 2012.06.30ஆம் திகதி வரையான காலப் பகுதியில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்த பெற்றோலியப் பொருட்கள் தொடர்பில் ஒரு விஷேட செயலாற்றுகைக் கணக்காய்வை மேற்கொண்டது.

- **2013 யூன் 23**ஆம் திகதி 244 அரச நிறுவனங்கள் தொடர்பான முடிவுகள் அடங்கலாக **இரண்டாவது அறிக்கை** சபாபீடத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

- **2013 ஒக்டோபர் 10 மற்றும் 11**ஆம் திகதிகளில் **இரண்டாவது அறிக்கை** சபையில் **விவாதிக்கப்பட்டது.**

முன்னுரை

ஏழாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடருக்கான அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு 2013.10.08 தொடக்கம் 2014.04.08 வரையிலான காலப்பகுதியில் பரிசீலனை செய்யப்பட்ட 47 அரச நிறுவனங்கள் பற்றிய தனது இடைக்கால அறிக்கையை, இத்தால் சமர்ப்பிக்கின்றது.

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு என்பது 126ஆம் இலக்க நிலையியல் கட்டளையின் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட அரசாங்க நிதி மீதான பாராளுமன்றக் கட்டுப்பாட்டு அதிகாரத்தைப் பிரயோகிக்கின்ற அமைப்புக்களில் ஒரு அமைப்பாகும். இது பாராளுமன்றத்தின் முன்னிலையில் விதிக்கப்பட்ட ஏதாவது சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்கு உரித்தளிக்கப்பட்ட பொதுக்கூட்டுத்தாபனங்கள் அல்லது ஏதாவது பிற நிறுவனங்கள் என்பவற்றின் மீது கட்டுப்பாட்டைப் பிரயோகித்து அவற்றின் நிதிவிடயங்களை ஆராய்கின்றது.

கௌரவ டியூ குணசேகர அவர்கள் தலைமை வகிக்கும் பிரதான குழுவுக்கு மேலதிகமாக, முறையே கௌரவ ஏ.டீ. சுசில் பிரேமஜயந்த, கௌரவ கரு ஜயசூரிய, கௌரவ லசந்த அலகியவன்ன ஆகியோர் தலைமை வகிக்கும் வேறு மூன்று உப குழுக்களும் உள்ளன. பிரதான குழு 31 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அவர்கள் ஒவ்வொன்றிலும் 10 உறுப்பினர்களை கொண்ட மூன்று உபகுழுக்களில் ஒன்றையும் பிரதிநிதித்துவப்படுத்துவார்கள்.

இந்த அறிக்கை 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளையும் மற்றும் ஒவ்வொரு நிறுவனம் தொடர்பான செயலாற்றுகை அறிக்கைகளையும் மீளாய்வு செய்த பின்னர் பிரதான குழுவினாலும் மூன்று உப குழுக்களினாலும் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளையும் விதப்புரைகளையும் கொண்டுள்ளது.

ஒவ்வொரு குழுவினாலும் மேற்கொள்ளப்பட்ட பரிசீலனைகளின் எண்ணிக்கை கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்படுகிறது.

குழு	**பரிசீலனைகளின் எண்ணிக்கை**
பிரதான குழு	30
உபகுழு 1	6
உபகுழு 2	6
உபகுழு 3	6
மொத்தம்	48

பொதுவான அவதானிப்புக்களையும் சிபார்சுகளையும் அடுத்து, பிரதான குழுவினாலும் மூன்று உபகுழுக்களினாலும் பரிசீலனை செய்யப்பட்ட ஒவ்வொரு நிறுவனத்துடனும் தொடர்புடைய முடிவுகள் மற்றும் விதப்புரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2013 யூலை 23ஆம் திகதி தனது 2ஆம் அறிக்கையைச் சபாபீடத்தில் சமர்ப்பித்த பின்னர், ஒழுங்கீனங்கள் இடம்பெற்று நீண்ட நாட்களின் பின்னர் அறிக்கையிடுதல் பயனுறுதியற்றவை என்ற காரணத்தினால், அது எதிர்காலத்தில் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிக்க விரும்புகின்றது எனக் குழு கூறியது. ஆதலால், இதன் பிரகாரம், புதிதாக வெளிவந்த அறிக்கை இச்சபைக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றியது மாத்திரமன்றி, இது குழுவின் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத ஒரு நடவடிக்கையுமாகும்.

போதியளவு வெளிப்படைத்தன்மையற்ற பிரதான கொடுக்கல் வாங்கல்கள்.

இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் வெளிப்படைத்தன்மை பற்றி மேலும் கரிசனை செலுத்துவதற்குக் குறிப்பிடத்தக்க குறைந்தளவு பணப்பெறுமதியுடன் சம்பந்தப்பட்ட கீழ்வரும் கொடுக்கல் வாங்கல்கள் கண்டறியப்பட்டன.

(COPE பரிசோதனை செய்த திகதியில் உள்ள நிறுவனத்தின் நிலையின் அடிப்படையில் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.)

1. ஆய்வுகூடப் பரிசோதனைகளின் தாமதங்கள், பகுத்தறிவு ரீதியான தொடர்பாடலின்மை, தளம்பல் சந்தையில் காணப்படும் சவால்களை எதிர்நோக்கத் தயாரில்லாமை, மிகைக் கொடுப்பனவுகள், பெற்றோலியப் பொருட்கள் கொள்வனவுக்கான கொள்வனவு சார்ந்த கட்டளைகளைத் திட்டமிடுவதில் தாமதங்கள், சிக்கனமற்ற குறைந்த மற்றும் உயர்ந்த தரத்திலான ஒக்டேன் பெற்றோல் கலப்பு முதலியன போன்ற வினைத்திறனற்ற விடயங்களின் விளைவாக 2011.06.01 ஆம் திகதி முதல் 2012.06.30ஆம் திகதி வரையான காலப் பகுதியில் பெற்றோலியப் பொருட்களைக் கொள்வனவு செய்வது தொடர்பில் 8.3 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்ட ஒரு நட்டம் **இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு** ஏற்பட்டிருந்தது.

2. **இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்** ஒரு வெளிநாட்டுக் கம்பனிக்கு (ஐ.அ.இ கம்பனி) எரிபொருளைக் கொள்வனவு செய்யும் பொருட்டு அந்தக் கூறப் பட்ட கம்பனியுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் 54 அ.டொ. தவணைக்கட்டணம் இரண்டு தடவைகள் உள்ளீர்க்கப்பட்டதால் 2,060,842 அ.டொ. நிதியை மேலதிகமாகச் செலுத்தியிருந்தது.

3. WiMax தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய சேவையைத் தொடர்வதற்குத் தேவையான அலைவரிசையைப் பெற்றுக்கொள்ள **ஸ்ரீ லங்கா ரெலிகொம்** Sky network Ltd.இன் 75% பங்குகளை ரூபா.108 மில்லியன்களுக்குக் கொள்வனவு செய்திருந்தும் கூட, குறித்த தொழில்நுட்பம் வழக்கற்றுப்போன காரணத்தினால் போதிய ளவு வியாபார நடவடிக்கைகள் நடைபெறவில்லை என்ற காரணத்தின் அடிப்படையில் குறித்த கம்பனி சில வருடங்களின் பின்னர் மூடப்பட்டிருந்தது. 2006ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த குறித்த கம்பனி 2008ஆம் ஆண்டில் SLTயினால் கொள்வனவு செய்யப்படும் வரை அலைவரிசையொன்றினை வைத்திருந்ததைத் தவிர எந்த வியாபார நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாதிருந்ததினால் இந்தக் கொடுக்கல் வாங்கல் சந்தேகத்துக்கிடமானதாகத் தோன்றுகிறது.

   குறித்த கம்பனி செயற்படாமல் இருந்த காலப்பகுதியில் பணிப்பாளர் கட்டணமாக ரூபா.10,468,000 செலுத்தப்பட்டிருந்ததாகவும், இவ்வாறு கட்டணம்

செலுத்தப்பட்டவர் Sky network Ltd.இல் பணிப்பாளரொருவர் என்றும் வெளிப்படுத்தப்பட்டது.

4. கொழும்பு கிரிகொரி வீதியில் (Gregory Road) அமைந்துள்ள **அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் (SPC)** சொந்தமான காணி, ரூபா.50 மில்லியன்களுக்கு இலங்கை வங்கிக்கு ஈடு வைக்கப்பட்டு, பின்னர் ஈட்டை மீளப்பெறுதலுடன் தொடர்புடைய சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு, தனியார் கம்பனியொன்றுக்குக் கூட்டுத்தாபனத்தினால் ரூபா.243 மில்லியன்களுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. எனினும், இந்தக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக ரூபா.11.9 மில்லியன்கள் மாத்திரமே SPCஇற்குக் கிடைத்திருக்கிறது.

5. குறைந்த விலைமனுக்கோருனர்களின் நியாயப்படுத்தல்களைப் புறக்கணித்து ஒப்பந்தம் 6ஆவது உயர் விலைமனுக் கோருனருக்கு வழங்கப்பட்டிருந்தமையினால் தொம்பையில் அமுல்படுத்தப்பட்ட தனது திண்மக் கழிவு நீர் முகாமைத்துவக் கருத்திட்டத்தில் ஒப்பந்தக்காரருக்கு **மத்திய சுற்றாடல் அதிகாரசபை**யினால் ரூபா.19,483,222 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

மேலும், 88,648 கன மீற்றர் மண்ணை நீக்குவதற்காக ஒப்பந்தக்காரரிடமிருந்து ரூபா. 45 அறவிடாமல் ஒரு கன மீற்றிக்கு ரூபா. 295 செலுத்தியதால் அதிகார சபைக்கு ரூபா. 30,140,320 நட்டம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

6. ரதுபஸ்வெலயில் உள்ள கையுறை தயாரிக்கும் தொழிற்சாலைக்குச் சுற்றாடல் சான்றிதழ் வழங்கும் போது **மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால்** உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. குறித்த தொழிற்சாலை உரிமையாளரால் வழங்கப்பட்ட நீர் மாதிரிகளை மாத்திரம் பரிசோதிப்பதன் மூலம் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது.

7. **சமூக பாதுகாப்புச் சபையின்** தலைமையகம் அதற்காகப் பயன்படுத்தப்பட்ட கட்டிடத்திலிருந்து காலமுதிர்ச்சிக்கு முன் விட்டுச்சென்றதன் காரணத்தால், எஞ்சிய 07 மாதங்களுக்காக ரூபா 5,090,906ஐ வாடகையாக அது செலுத்த வேண்டியிருந்தது. பிறகு, தலைமையகத்தை அமைப்பதற்குப் போதிய இடவசதியுடன் கூடிய நிரந்தர இடமொன்று வழங்கப்படாமையினால், ராஜகிரியவில் ஒரு கட்டிடத்தை அரச விலை மதிப்பாளர் ரூபா 165 மில்லியன்களுக்கு மதிப்பிட்டிருந்தும் கூட, குறித்த நிறுவனம் ரூபா 195 மில்லியன்களுக்குக் கொள்வனவு செய்திருந்தது.

சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்.

கீழ்வரும் கொடுக்கல் வாங்கல்களின் வெளிப்படைத்தன்மை தொடர்பாக அதிக அக்கறை தேவைப்படாதபோதிலும், பணத்திற்கான பெறுமதியைக் கருத்திற்கொள்ளும் போது அவை பாரிய நட்டமொன்றையே அரசாங்கத்திக்கு ஏற்படுத்தியுள்ளன.

(COPE பரிசோதனை செய்த திகதியில் உள்ள நிறுவனத்தின் நிலையின் அடிப்படையில் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.)

1. பரிசீலனைத் திகதியன்று உள்ளவாறு, ஹெட்ஜின் கொடுக்கல் வாங்கல் மீது **இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன**த்தினால் அடைந்த நட்டம் 75.28 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அமைந்திருந்தது.

2. 2005ஆம் ஆண்டு நடைபெற்ற சார்க் போட்டிகளில் பயன்படுத்துவதற்காக **சுகததாச தேசிய விளையாட்டுத்தொகுதி அதிகாரசபை**யினால் ரூபா.44 மில்லியன்களுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட இலத்திரனியல் நேரக்கணிப்பு உபகரணம் 2010 ஆம் ஆண்டிலிருந்து செயற்படாமல் இருந்துள்ளது. மேலும், குறித்த மென்பொருள் இரண்டு வருடங்களுக்குப் பின்னர் வழக்கற்றுப்போகும் என்னும் காரணத்தினால் திருத்தியதற்குப் பிறகு இன்னும் இரண்டு வருடங்களுக்கு மாத்திரமே அதனைப் பயன்படுத்த முடியுமாக இருக்கும்.

3. **தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால்** ரூபா 1,287,440 செலவில் ஜயதிலக விளையாட்டரங்கில் 2011ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட கரப்பந்தாட்ட ஆடுகளம், விளையாட்டு மைதானத்தை மேம்படுத்த மேற்கொண்ட முடிவின் படி 07 மாதங்களிற்குப் பின்னர் அகற்றப்பட்டிருந்தது.

4. 2011ஆம் ஆண்டில் **இலங்கைக் கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்** உடன்படிக்கையொன்றை மேற்கொள்ளாது 06 எரிபொருள் தாங்கிகளை நிர்மாணிப்பதற்கு ஒப்பந்தக் காரரொருவருக்கு ரூபா.2,791,215ஐ முற்பணக் கட்டணமாகச் செலுத்தியிருந்தது. எனினும், எந்த நிர்மாணப்பணிகளும் மேற்கொள்ளப்படாது இருந்ததுடன் இதுவரை முற்பணத்திலிருந்து ரூபா.1மில்லியன் மாத்திரமே அறவிட முடிந்துள்ளது.

5. **இறப்பர் ஆராய்ச்சி சபை** ஆதனங்களின் உண்மையான பெறுமதிக்கான மதிப்பீட்டினை மேற்கொள்ளாது காப்புறுதிக் காப்பீடொன்றினைப் பெற்றதனால், சூளையின் செயற்பாட்டிற்காகத் தேர்ச்சியற்ற தொழிலாளி ஒருவரை அமர்த்தியமையினால் தொழிற்சாலையொன்றில் ஏற்பட்ட தீ காரணமாக அழிந்த, சுமார் ரூபா.7.5 மில்லியன்கள் பெறுமதியான சொத்துகளுக்கு எதிரான நஷ்டஈடாக ரூபா. 930,000ஐ மாத்திரமே பெற்றிருந்தது.

6. 18% சாதாரண வட்டியிலிருந்து விலகி **வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியானது (எச்.டி.எப்.சி. வங்கி)** தனக்கு நீண்டகால அடிப்படையில் நிதிகள்

தேவைப்பட்டிருந்த காரணத்தினால் இலங்கை மின்சார சபையின் 450 மில்லியன் ரூபா நிலையான வைப்பு தொடர்பில் 22.5% உயர் வட்டியைச் செலுத்தியிருந்தது. இருப்பினும் வங்கிக்கு இந்தக் கொடுக்கல் வாங்கலிலிருந்து 69 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டிருந்தது.

7. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் 11 போக்குவரத்து மோட்டார் வாகனங்கள் காணாமற்போனதன் காரணமாக ஏற்பட்ட 5,095,455 ரூபா நட்டத்தைப் பதிவழித்திருந்தது.

பொதுவான அவதானிப்புகள்

1. நியதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றுடன் இணங்காமை

பெரும்பாலான கணக்காய்வு முடிவுகள் உரிய சுற்றறிக்கைகள் தொடர்பான அறிவின்மை அல்லது பாராதீனம் என்பவற்றின் காரணமாக நியதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் மீறப்பட்டுள்ள சந்தர்ப்பங்களுடன் சம்பந்தப்பட்டுக் காணப்படுகின்றன. ஊழியர்களுடன் இருக்கும் முரண்பாட்டைத் தவிர்க்கும் நிமித்தம் வேண்டுமென்றே மீறப்பட்டுள்ள சில சந்தர்ப்பங்களையும் குழு சில சமயங்களில் அவதானித்தது.

அத்தகைய மீறல்கள் இடம்பெற்ற சந்தர்ப்பங்கள் பின்வருமாறு:

- படிகள், கடன்கள், ஊக்குவிப்புத் தொகைகள் முதலியவற்றின் முறையற்ற கொடுப்பனவுகள் முதலியன.
- எரிபொருள் செலவுகள் சார்ந்த கொடுப்பனவு
- செலுத்துநர் வரிக் கொடுப்பனவு
- கொள்வனவு நடபடிமுறையிலான ஒழுங்கீனங்கள்

உதாரணமாக, ஊழியர் நம்பிக்கை நிதியச் சபையானது திறைசேரியினது சுற்றறிக்கைகளுக்கு முரணாக 4.2% என்ற வீதத்தில் 74.8 மில்லியன் ரூபா தொகையான ஊக்குவிப்புக்களையும், 44.5 மில்லியன் ரூபா தொகையான மிகையூதியங்களையும் மற்றும் 338.9 மில்லியன் ரூபா தொகையான கடன்களையும் செலுத்தியுள்ளது. எனினும், நீண்டகாலமாக இந்தச் சிறப்பு உரிமைகளை ஊழியர்கள் அனுபவித்து வருவதால் இந்த விடயத்தை முறைப்படுத்தும் நிலையில் இல்லை என முகாமைத்துவம் குறிப்பிட்டிருந்தது.

நிறுவனங்கள் பொதுவாகச் சுற்றறிக்கைகளிலுள்ள உள்ளடக்கங்களின் தெளிவின்மையின் காரணமாகத் திறைசேரியினது சுற்றறிக்கைகளுக்கு முரணாக ஒரு சில தீர்மானங்களை எடுத்திருந்த பல சந்தர்ப்பங்கள் காணப்பட்டமையும் குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

2. ஆட்சேர்ப்புத் திட்டங்கள் மற்றும் சம்பள அளவுத்திட்டங்களைத் திருத்தல்

முன்னைய COPE அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு, தேவைப்படுகின்ற தகைமைகளுடன் சம்பள அளவுத்திட்டத்தின் ஒவ்வாத்தன்மை காரணமாகக் குறிப்பிடத்தக்களவு உயர் பதவிகள் நிரப்பப்படாமல் இருப்பதினால் சம்பள அளவுத்திட்டங்கள் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டங்களை மீளாய்வு செய்வதன் முக்கியத்துவம் பற்றிக் குழு வலியுறுத்துகிறது. திருப்திகரமான தகைமைகளைக் கொண்ட ஆளணி ஆட்சேர்ப்புக்கு நடுத்தர அல்லது சிறிய அளவிலான அரச நிறுவனங்களுக்கு வாய்ப்பளிப்பதற்காக, சாத்தியமானவிடத்து, கோரப்படும் உயர் தகைமைகளைக் குறைக்குமாறும் சிபாரிசு செய்யப்படுகிறது.

3. மூலதனப் பற்றாக்குறை காரணமாகக் கடன் பெறுதல்

மிஹின் லங்கா போன்ற குறித்த சில நிறுவனங்கள் மூலதனப் பற்றாக்குறை காரணமாகவும் திறைசேரியிலிருந்து உரிய காலவரையறைக்குள் நிதிகள் கிடைக்காமையாலும் தமது வியாபாரத்தில் உரிய முதலீடுகளைச் செய்வதிலிருந்து தவறியிருந்தன. இந்நிலைமை ஏற்கனவே இருக்கின்ற விடயங்களை மேலும் மோசமான நிலைக்குத்தள்ளி அந்த நிறுவனங்களை அதிக வட்டிக்குக் கடன் பெறும் நிலைமைக்கு வழிவகுத்துள்ளது.

4. மிகை பணியாட்டொகுதி

மிகை பணியாட்டொகுதி காரணமாகக் குறித்த சில நிறுவனங்களின் நிருவாகச் செலவு குறிப்பிடத்தக்களவு அதிகமாக இருந்து வந்துள்ளது. எடுத்துக்காட்டாக ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் தவிசாளரால் குறிப்பிடப்பட்டது போன்று சுமார் 8000 ஆட்களைக் கொண்ட பணியாட்டொகுதியொன்று உள்ளது. ஆனால், உண்மையிலே தேவைப்படுவது சுமார் 6000 ஆகும். இந்நிலைமை நிறுவனத்தின் இலாபமீட்டும் தன்மையைக் குறைவடையச் செய்துள்ளது.

5. முந்திய முகாமைத்துவத்தின் கீழ் இடம்பெற்ற ஒழுங்கீனங்கள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்வதில் உள்ள அசமந்தப்போக்கு

முந்திய முகாமைத்துவத்தின் கீழ் இடம்பெற்ற குறித்த சில ஒழுங்கீனங்கள் தொடர்பாக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாதிருந்த பல சந்தர்ப்பங்களைக் குழு அவதானித்தது. அவ்வாறான ஒழுங்கீனங்கள் மீண்டும் இடம்பெறாமல் இருப்பதை உறுதி செய்வது மாத்திரமன்றி ஒழுக்காற்று நடவடிக்கைகள், தழுவல் அங்கீகாரம், அல்லது ஏதாவது இழப்புக்கள் இருப்பின் அவற்றை ஈடுசெய்தல் அல்லது அறவிடுதல் போன்ற வழிகள் மூலம், இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பாகச் சீர்செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்வதும் நிறுவனமொன்றின் தற்போதுள்ள முகாமைத்துவத்தின் பொறுப்பு என்று வலியுறுத்தப்படுகிறது. திறைசேரி இவ்விடயம் தொடர்பாக ஒரு உபாயத்தை வகுத்தல் வேண்டும்.

6. பணிப்பாளர் சபையில் திறைசேரிப் பிரதிநிதியின் குறைந்த வகிபாகம்

சபையில் திறைசேரிப் பிரதிநிதியின் தலையீட்டின் போதாக்குறை காரணமாகப் பல ஒழுங்கீனங்கள் இடம்பெற்றிருந்தன. திறைசேரி ஒழுங்குவிதிகள் உரிய முறையில் பின்பற்றப்படுவதை உறுதி செய்வதன் பொருட்டு அந்தத்தச் சபைகளில் திறைசேரிப் பிரதிநிதி பிரசன்னமாகுவது கட்டாயமாகும். மேலும், காலங்கடந்த ஒழுங்குவிதிகளை நியாயப் படுத்துவதற்குத் திறைசேரியை வழிநடத்துவதும் திறைசேரிப் பிரதிநிதி ஒருவரின் பொறுப்பொன்றாக இருத்தல் வேண்டும்.

7. அரச நிதித் திட்டங்கள் தொடர்பில் பொதுமக்களிடத்தில் நம்பிக்கையை நிலைநிறுத்துவதின் தேவை

விவசாயிகள் ஓய்வூதியம், சமூகப் பாதுகாப்பு நன்மைகள் போன்ற குறித்த சில திட்டங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் காரணமாக பல்வேறு ஓய்வூதிய மற்றும் காப்புறுதித் திட்டங்கள் மீது பொதுமக்கள் பெருமளவில் நம்பிக்கை இழந்துள்ளனர் என்பதே குழுவின் கருத்தாகும். சமூக பாதுகாப்புச் சபையின் கீழ் அமுல்படுத்தப்படும் ஓய்வூதியத் திட்டங்களில் சுமார் 400,000 அங்கத்தவர்கள் இருந்தாலும் கூட மொத்தத் தொகையின் 75% முனைப்பற்ற அங்கத்தவர்கள் என்று அவதானிக்கப்பட்டது. அண்மைக்காலத்தில் அமுல்படுத்தப்பட்ட குறித்த சில திட்டங்களில் அங்கத்தவர்கள் இணைவதும் வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளது.

நிதி நிறுவனமொன்றின் இருப்பு பெருமளவில் நம்பிக்கை மீது தங்கியுள்ளதோடு பொதுமக்கள் நம்பிக்கையை நிலைநிறுத்த ஒரு முறையியல் இருத்தல் வேண்டும். அவ்வாறான புதுத் திட்டங்களை அமுல்படுத்த முன்னர் தகுந்த கணிப்பாய்வொன்றை மேற்கொள்ள வேண்டும்.

8. ஏனைய நிறுவனங்களிலிருந்து வரவேண்டிய நிலுவைத்தொகைகள்

ஏனைய நிறுவனங்களிலிருந்து அதிகளவு நிதிகள் வரவேண்டி இருந்தமை, நிறுவனத்தின் போதிய பின்னூட்டலின்மையால் இவற்றில் சில நிதித் தொகைகள் நீண்டகாலமாக நிலுவையாகவிருந்துள்ளமை என்பவற்றைக் குழு அவதானித்தது. கீழ்க்காணும் அட்டவணை ஒரு சில நிறுவனங்களின் பல விதமான நிலுவைத் தொகைகளைச் சுட்டிக்காட்டுகின்றது.

நிறுவனம்	நிலுவைத் தொகை	நிலுவைத் தொகையைச் செலுத்தவேண்டிய நிறுவனம்	தற்போதைய நிலை
தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை	ரூ.20 மில்லியன்	வரையறுக்கப்பட்ட பி.சீ.சீ. லங்கா (BCC)	கம்பனி மூடப்படும் நிலையில் உள்ளது.
தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை	ரூ.67 மில்லியன்	பல்வேறு தரகர்கள்	பெரும்பாலான தரகர்கள் இல்லை.
நகர அபிவிருத்தி அதிகார சபை	ரு.137 மில்லியன்	நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழுள்ள பல்வேறு வாடிவீடுகள்	ரூபாய் .66 மில்லியனை மீட்கவும் எஞ்சிய நிலுவைப் பணத்தைப் பதிவழிக்கவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

	ரூ.84 மில்லியன்	விளையாட்டுத் துறை அமைச்சு	பதிவழிக்கப் படவுள்ளது.
கூட்டுறவு மொத்த விற்பனவுத் தாபனம் (CWE)	ரூ.41 மில்லியன்	லங்கா சதொச	அத்தொகைக்குச் சமனான பங்குகளை விநியோகிக்க லங்கா சதொச உடன் பட்டுள்ளது .
	ரூ.22 மில்லியன்	இலங்கை இராணுவம்	பதிவழிக்கப் பட்டுள்ளது.
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்	சுமார் ரூ.4.4 பில்லியன்	வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா	தற்போதைய நிலை அறிக்கையிடப் படவேண்டும்.
இலங்கை மாநாட்டுப் பணியகம்	ரூ.17.5 மில்லியன்	இலங்கைச் சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை	தொகையைச் செலுத்த உடன் பட்டுள்ளது.

இந்த நிலைமை நாட்டின் ஒரு சில பாரிய நிறுவனங்களினது உற்பத்தித் திறன் மற்றும் செயலாற்றுகை என்பவற்றில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அத்தகைய நிலுவைத் தொகைகளைத் தீர்ப்பனவு செய்வது தொடர்பில் ஒரு கொள்கை ரீதியான தீர்மானத்தை அத்தகைய நடவடிக்கை அவசியம் எனக் கருதப்படுகின்ற போது நேரடியாகத் திறைசேரி ஊடாக மேற்கொள்வது பொருத்தமானதாக அமையும் என்பது குழுவின் அபிப்பிராயமாகும்.

அதற்கிணங்க, கடன் வழங்கிய நிறுவனங்களின் கணக்குகளுக்குக் கடன் பட்ட நிறுவனங்களின் கணக்குகளிலிருந்து திறைசேரியினூடாக நேரடியாக நிதிகளை மாற்றக்கூடிய சாத்தியம் இருக்கின்றதா என்பது பற்றி ஆராய்ந்து பார்க்குமாறு குழு திறைசேரியின் செயலாளருக்கு அறிவித்துள்ளது.

9. நிறுவனத் தலைவர்களின் நியமனம்

ஒரு சில முறைகேடுகளுக்கு நேரடியாகப் பொறுப்புக்கூறக் கூடிய ஒரு சில நிறுவனத் தலைவர்கள் இருந்த சந்தர்ப்பங்களைக் குழு அவதானித்தது. அத்தகைய முறைகேடான ஒரு குற்றத்திற்குக் குற்றவாளியாக ஒரு முறை கணிக்கப்பட்டுள்ள நபர்களை நியமிப்பதற்கு அல்லது மீளநியமிப்பதற்கு அனுமதியை வழங்கக் கூடாது என உயர் பதவிகளுக்கான பாராளுமன்றக் குழுவுக்கு இந்தக் குழு சிபாரிசு செய்கின்றது.

10. கணக்கீட்டு நியமங்கள் செயல்முறையிலுள்ள பலவீனங்கள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அறிக்கையிடப்பட்டவாறு அதிகமான இறுதிக் கணக்குகள் கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்படாத காரணத்தினால் நிராகரிக்கப்பட வேண்டியிருந்தன. புதிய கணக்கீட்டு நியமங்கள் தொடர்பில் ஒரு சில கணக்காளர்களின் அறிவு திருப்தியான ஒரு மட்டத்திலில்லை என்பது பற்றியும் அறிக்கையிடப்பட்டது. இந்த நிலைமை ஒரு சில நிறுவனங்களினால் பாராளுமன்றத்தில் வருடாந்த அறிக்கைகளை ஆற்றுப்படுத்தும் நடபடிமுறையில் தாமதங்களை ஏற்படுத்தியுள்ளது.

அரச துறைக்கு அதிக தகுதிவாய்ந்த கணக்காளர்கள் ஆட்சேர்த்துக் கொள்ளப் படுதல் வேண்டும் எனவும் கணக்காளர்களுக்கு மேலும் ஒரு கொடுப்பனவு வழங்கப்படுவதற்கும் குழு சிபாரிசு செய்கின்றது.

11. உள்ளகக் கணக்காய்வை வலுப்படுத்தல்

வலிமையான ஒரு உள்ளகக் கணக்காய்வானது ஒரு நிறுவனத்தின் நல்லாட்சியில் முக்கியமான ஒரு பங்கை வகிக்கின்றது.

எனினும், வளங்களின் பற்றாக்குறை காரணமாக ஒரு சில நிறுவனங்களின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகள் தமது கடமைகளை நிறைவேற்றுவதில் பிரச்சனைகளை எதிர்நோக்கியிருந்தன. குறித்த உரிய நிறுவனங்கள் இந்தப் பிரிவுக்குப் போதிய ஆளணியை வழங்குவதற்கும் கணக்கீடும் கணக்காய்வும் பற்றிய தமது அறிவை மேம்படுத்துவதற்கு அவர்களுக்குப் போதிய பயிற்சி வசதிகளை வழங்குவதற்கும் உடனடி நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

12. நிறுவனங்களால் செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் மீதான திறைசேரியின் கட்டுப்பாடு

சில நிறுவனங்கள் தாம் விரும்பியவாறு கொடுப்பனவுகள் தொடர்பான திட்டங்களை உருவாக்குகின்றன. அத்தகைய சந்தர்ப்பங்களில் சபையில் திறைசேரியினது பிரதிநிதி ஒருவர் இருக்கின்ற போதிலும் அத்தகைய திட்டங்களுக்குப் பணிப்பாளர்கள் சபையினது அனுமதி பெறப்பட்டிருந்த காரணத்தினால் திறைசேரியின் தலையீடு மிகவும் அதிருப்தி நிலையில் காணப்பட்டமை போன்ற விடயங்களைக் குழு அவதானித்தது. இத்தகைய முறையற்ற கொடுப்பனவுகள் கடும் சம்பள முரண்பாடுகளுக்குக் காரணமாக அமைந்தன.

13. கருத்திட்டச் செயற்படுத்துகையிலுள்ள பலவீனம்

அதிகமான கருத்திட்டங்களின் தோல்விக்குப் பின்னால் இருந்த காரணம் மேற்பார்வையில்லாத பலவீனமான திட்டமிடல் மற்றும் முகாமைத்துவ வினைத்திறனின்மைகள் என்பதைக் குழு அவதானித்தது. இதன் விளைவாகக் கணிசமான

பண நட்டம் அவதானிக்கப்பட்டது. சரியான முற்சாத்தியவள ஆய்வு அறிக்கையொன்று இருந்திருந்தால் அத்தகைய நட்டங்களைத் தவிர்த்துக்கொள்ள முடிந்திருக்கும்.

உதாரணமாக, மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்ட பல கருத்திட்டங்கள் நிதிப் பற்றாக்குறை, பொருத்தமான காணிகள் கிடையாமை, தேவையான தொழில்நுட்பங்கள் இல்லாமை முதலியன போன்ற காரணங்களினால் பரிசீலனைத் திகதியிலும் நிறைவு பெறாமல் இருந்தன.

பரிசீலிக்கப்பட்ட நிறுவனங்களின் நிதிநிலைமை

மூலோபாய வணிக பொறுப்பு முயற்சிகள் மற்றும் வரையறுக்கப்பட்ட பொறுப்புகள் கம்பனிகள்

இல	நிறுவனம்	வரிக்கு முந்திய இலாபம்/(நட்டம்) (ரூபா)		
		2013	2012	2011
01	ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை	15,621,131,000	12,313,596,974	11,549,008,187
02	அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனம்	111,199,959	47,662,968	42,316,969
03	தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை	49,790,222	29,421,086	235,610,403
04	இலங்கைக் கடற்றொழில் கூட்டுத்தாபனம்	(75,841,048)	(41,763,563)	(68,969,869)
05	இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்	(6,351,269,000)*	(95,345,712,000)*	(92,015,138,000)*
06	நகர அபிவிருத்தி அதிகார சபை	நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வில்லை	நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வில்லை	302,111,149*
07	இலங்கை நியமங்கள் நிறுவகம்	89,298,019	62,784,097	101,032,276
08	இலங்கை அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடட்	73,074,000	57,429,000	17,457,000
09	அரச ஈட்டு, முதலீட்டு வங்கி	346,400,852	430,264,728	688,577,768
10	எச்.டி.எப்.சி. வங்கி	231,374,299	125,852,185	320,655,684
11	தேசிய சேமிப்பு வங்கி	2,669,243,000*	6,392,291,000*	9,411,069,000*

12	இலங்கைக் கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்	நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வில்லை	(258,826,672)	(190,648,226)
13	இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்	13,797,179,000*	10,241,202,000*	9,640,366,000*
14	கூட்டுறவு மொத்த விற்பனவுத்தாபனம் (CWE)	நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வில்லை	நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வில்லை	(313,605,785)
15	இலங்கை மின்சார சபை	21,488,398,000*	(54,562,452,000) *	(14,971,115,000)*
16	வரையறுக்கப் பட்ட மிஹின் லங்கா	(3,284,417,728)	(1,968,508,818)	(940,489,121)
17	இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்	நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வில்லை	நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வில்லை	(52,413,476)
18	ஸ்ரீ லங்கா ரெலிகொம்	7,365,000,000*	5,851,000,000*	6,162,000,000*

*வரிக்கு முந்திய திரண்ட இலாபம்/(நட்டம்)

மூலம்: கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களம்

இலாப நோக்கற்ற தாபனங்கள் மற்றும் வேறு நிறுவனங்கள்

இல	நிறுவனம்	வரிக்கு முந்திய மிகை /(பற்றாக்குறை) (ரூபா)		
		2013	2012	2011
01	கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம்	69,829,343	22,628,443	59,318,986
02	தேசிய இடர் முகாமைத்துவ நிலையம்	(9,860,860)	(8,142,118)	(12,999,882)
03	தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்	(253,277,000)	(73,709,597)	(48,751,575)
04	மத்திய சுற்றாடல் அதிகாரசபை	(28,610,437)	(30,635,316)	6,305,261
05	கொழும்புப் பல்கலைக்கழகம்	154,316,852	33,033,435	69,382,819
06	புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம்	623,986,493	691,122,409	618,549,416
07	தேசியக் கல்வி நிறுவகம்	36,496,150	14,654,153	41,078,115
08	இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகம்	(18,154,195)	(24,064,637)	(150,923,949)
09	இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்	312,505,966*	258,895,523*	598,382,192*
10	தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை	30,381,322	(9,681,156)	(13,850,530)
11	தெங்கு பயிற் செய்கைச் சபை	37,409,932	(2,207,368)	186,511,249
12	நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை	33,104,000	6,766,000	13,821,000
13	இலங்கை உள்ளூராட்சி நிறுவகம்	நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வில்லை	(3,467,357)	2,882,054

14	மானுடவியல், சமூக விஞ்ஞானம் ஆகிய உயர் கற்கைகளுக்கான தேசிய நிலையம்	166,709	223,210	(508,628)
15	இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம்	11,615,789	(10,184,520)	(62,152,897)
16	பாளி, பௌத்த பட்டப்பின்படிப்பு நிறுவகம்	(3,467,632)	(2,709,969)	680,658
17	தேசிய போக்குவரத்து ஆணைக்குழு	(190,119,332)	(8,189,317)	192,801,311
18	இலங்கை வாழ்க்கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை	(49,225,894)	16,030,859	(18,333,666)
19	வாழ்க்கைத் தொழில் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்	3,123,062	(7,977,301)	(6,844,278)
20	மூன்றாம்நிலைத் தொலைக்கல்வி ஆணைக்குழு	(4,846,384)	55,217	399,044
21	சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபை	நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வில்லை	(81,984,071)	(73,498,464)
22	இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபை	(84,950,480)	(68,557,639)	18,547,965
23	தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம்	4,482,528	(4,597,886)	(1,247,870)
24	இலங்கை புடவைகள், ஆடைகள் நிறுவகம்	41,840,234	6,209,102	13,935,340

25	இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம்	6,238,009	476,209,102	551,545,914
26	இலங்கை மாநாட்டுப் பணியகம்	67,751,969	21,704,200	8,049,504
27	இலங்கைக் காப்புறுதிச் சபை	148,207	238,211	10,930
28	இலங்கை சமூக பாதுகாப்புச் சபை	9,471,426	(18,535,954)	(15,297,054)
29	தேசியக் கட்டிட ஆராய்ச்சி நிறுவகம்	11,227,959	21,461,664	15,406,704

*வரிக்கு முந்திய திரண்ட இலாபம்/(நட்டம்)

மூலம்: கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களம்

பாராளுமன்றத்திற்கு வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

சம்பந்தப்பட்ட நிதியாண்டு முடிவடைந்தன் பின்னர் 150 நாட்களினுள் அனைத்து அரச பொறுப்புமுயற்சிகளும் தமது வருடாந்த அறிக்கைகளைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்குத் தேவைப்படுத்தப்படுகிறது. 2014.06.30ஆம் திகதியன்று உள்ள பதிவுகளுக்கேற்ப முறையே 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பிக்காத நிறுவனங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. 2013.10.08ஆம் திகதி முதல் 2014.04.08ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மாத்திரம் விசாரணை செய்யப்பட்ட நிறுவனங்களின் அடிப்படையில் பட்டியல் தயாரிக்கப்பட்டது.

2011ஆம் ஆண்டில் வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்காத நிறுவனங்கள் (30.06.2014இல் உள்ளவாறு)

- இலங்கைக் கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்
- இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
- கூட்டுறவு மொத்த விற்பனவுத்தாபனம் (CWE)
- இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்
- அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனம்
- சுகததாச தேசிய விளையாட்டுத்தொகுதி அதிகாரசபை

2012ஆம் ஆண்டில் வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்காத நிறுவனங்கள் (30.06.2014இல் உள்ளவாறு)

- மத்திய சுற்றாடல் அதிகாரசபை
- இலங்கை மின்சார சபை
- இலங்கைக் கடற்றொழில் கூட்டுத்தாபனம்
- இலங்கைக் கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்
- இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
- நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை
- கூட்டுறவு மொத்த விற்பனவுத்தாபனம் (CWE)
- தேசிய இடர்முகாமைத்துவ நிலையம்
- ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை
- புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம்
- கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம்

- மானுடவியல், சமூக விஞ்ஞானம் ஆகிய உயர் கற்கைகளுக்கான தேசிய நிலையம்
- தேசியக் கல்வி நிறுவகம்
- தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை
- தேசிய போக்குவரத்து ஆணைக்குழு
- தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
- பாளி, பௌத்த பட்டப்பின்படிப்பு நிறுவகம்
- இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகம்
- இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபை
- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
- இலங்கை உள்ளூராட்சி நிறுவகம்
- இலங்கை மாநாட்டுப் பணியகம்
- இலங்கை புடவைகள், ஆடைகள் நிறுவகம்
- இலங்கை நியமங்கள் நிறுவகம்
- இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்
- இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம்
- அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனம்
- சுகததாச தேசிய விளையாட்டுத்தொகுதி அதிகாரசபை
- மூன்றாம்நிலைத் தொலைக்கல்வி ஆணைக்குழு
- இலங்கை அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடட்
- கொழும்புப் பல்கலைக்கழகம்
- வாழ்க்கைத்தொழில் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்
- நகர அபிவிருத்தி அதிகார சபை
- இலங்கை வாழ்க்கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட நிதி தொடர்பான கணக்காய்வானது உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கும் (ISSAI) மற்றும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கும் அமைவானதாகக் காணப்படுகின்றது. அத்தகைய நியமங்கள் நிதிக் கூற்றுக்கள் பொருண்மை பிறழ்கூற்றுக்கள் இன்றியதாக இருக்கின்றனவா என்பது பற்றிய நியாயமான ஒரு உத்தரவாதத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையில் சம்பிரதாயத் தேவைப்பாடுகள் மற்றும் திட்டம் என்பவற்றை அனுசரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதி கணக்காய்வு விடயத்தை நிறைவேற்ற வேண்டும் எனத் தேவைப்படுத்துகின்றன. பொதுத் தொழில்முயற்சிகளின் கணக்காய்வு நோக்கெல்லையை நிர்ணயிக்கின்றபோது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு ஒரு பொறுப்பு அடிப்படைக் கணக்காய்வு அணுகுமுறை பின்பற்றப்படுகின்றது. இங்கு பொறுப்பு என்பது ஒரு பிரதான காரணியாகக் கருதப்படுகின்றது.

பொதுத் தொழில்முயற்சிகள் வருடாந்தம் அந்த முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று, ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிக் குறித்த ஆண்டு இறுதியிலுள்ள நிதிநிலை தொடர்பான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கின்றன. கணக்காய்வாளர் தலைமை அதிபதி அந்த நிதிக்கூற்றுக்கள் அந்த நிறுவனங்களின் உண்மையான விவகாரங்கள் நிலையைப் பிரதிபலிக்கின்றனவா என்பது பற்றிய ஒரு சுயாதீன உத்தரவாதத்தைப் பாராளுமன்றத்திற்கு வழங்குவார். இந்த உத்தரவாதமானது நிதிக் கூற்றுக்கள் மீதான ஒரு வெளிப்படுத்தல் அமைப்பில் வழங்கப்படுகின்றது. இந்த அபிப்பிராயமானது நிதிக்கூற்றுக்கள் நிதிநிலை, பொதுத் தொழில்முயற்சிகளின் செயலாற்றுகை என்பவற்றை நியாயமான விதத்தில் பிரதிபலிக்கின்றனவா அல்லது இல்லையா, தற்பொழுதிருக்கின்ற உரிய சர்வதேச நியமங்கள் நிரலில் அவை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களை அல்லது இலங்கைத் தனியார் துறைக் கணக்கீட்டு நியமங்களை இல்லையெனில் நிதி அறிக்கையிடல் தொடர்பான நியமங்களை அனுசரிக்கின்றனவா அல்லது இல்லையா என்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் முடிவைச் சற்று எடுத்துரைப்பதாக அமையும்.

நான்கு வகைக் கணக்காய்வு அபிப்பிராயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவை தகுதியற்ற, தகுதிவாய்ந்த, பாதகமான மற்றும் உரிமைமறுப்பு ஆகியன சார்ந்த அபிப்பிராயங்களாகும். இந்த அபிப்பிராயங்கள் பொருள் நிச்சயமற்ற, முகாமைத்துவ முரண்பாடு அல்லது பணிவரையறை ஆகிய சந்தர்ப்பங்கள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. நோக்கெல்லை வரையறை நிகழ்வானது தேவை சார்ந்த அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்கும் அதே நேரம் முரண்பாடு சார்ந்த நிகழ்வானது ஒரு பாதகமான கணக்காய்வு அபிப்பிராயத்தை வெளிப் படுத்துவதற்கும் வழிவகுக்கும்.

தகுதியற்ற அபிப்பிராயம்

தகுதியற்ற ஒரு கணக்காய்வு அபிப்பிராயமானது ஒரு பொதுத் தொழில்முயற்சியின் நிதிக் கூற்றுக்களில் கணிசமான மீறல்கள்களையோ அல்லது பிறழ்கூற்றுக்களையோ கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் காண்பதற்கு முடியவில்லை என்பதைச் சுட்டிக்காட்டும். இந்த அபிப்பிராயத்திற்கான ஒரு பிரதியீட்டு பெயர் இருக்குமாயின் அது தெளிவான ஒரு அபிப்பிராயத்தையே கருதும். கணக்காய்வாளர் தலைமை அதிபதி இந்த அபிப்பிராயத்தை இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் அல்லது இலங்கைத் தனியார் துறைக் கணக்கீட்டு நியமங்கள் இல்லையெனில் நிதி சார் அறிக்கையிடல் தொடர்பான நியமங்கள் என்பவற்றுக்கு இணங்க நிதி சார்ந்த தகவல்களைப் பதிவதற்கான பொதுத் தொழில்முயற்சிகளுக்கு இருக்கின்ற ஆற்றலைக் குறிப்பிட்டு வெளியிடுவார். இதுவே ஒரு தொழில்முயற்சியினால் பெறக்கூடிய ஒரு மிகச்சிறந்த கணக்காய்வு அபிப்பிராயமாகும்.

தகுதிவாய்ந்த அபிப்பிராயம்

ஒரு தகுதிவாய்ந்த கணக்காய்வு அபிப்பிராயம் ஒரு பொதுத் தொழில் முயற்சியின் நிதிக் கூற்றுக்களில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பிரச்சினைக்குரிய விடயங்கள் அவதானிக்கப்பட்டன என்பதைச் சுட்டிக்காட்டும். இந்த விடயங்கள் ஒரு பொதுத் தொழில்முயற்சியின் விவகாரங்கள் பற்றிய ஒரு தெளிவான அபிப்பிராயத்தை வெளியிடுவதிலிருந்து கணக்காய்வாளர் தலைமை அதிபதியைத் தடுப்பதாக அமைகின்றன. தகுதி வாய்ந்த கணக்காய்வு அபிப்பிராயம் எப்பொழுதும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விஷேட தகைமைகளைக் கொண்டிருக்கும். இத்தகைய தகைமையானது அறிக்கையிடும் கணக்கீட்டு நியமங்களிலிருந்து வரும் வித்தியாசங்களைப் பிரதிபலிக்கலாம். இது தொழில்முயற்சிகள் நியமங்களைச் சரியான முறையில் பிரயோகிக்கவில்லை என்பதையும் மற்றும் நிதிக் கூற்றுக்கள் நியம கணக்கீட்டுக் கோட்பாடுகளை அனுசரிப்பதாக இல்லை என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது. நோக்கெல்லையின் வரையறை மற்றுமொரு தகைமையாகும். இந்த நோக்கெல்லை வரையறையானது நிதிக் கூற்றுக்களுடன் சம்பந்தமான ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிரிவுகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கருத்துத் தெரிவிக்க முடியாது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. இந்தத் தகைமை, ஆவண ரீதியான சான்றுகள் இல்லாததால் கணக்காய்வாளர் தலைமை அதிபதி மூலம் மீளாய்வு செய்யப்படாத நிதி வரையறையில் மாத்திரம் சம்பந்தப்படுகின்றது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி:
(அ) பிறழ்கூற்றுக்களானவை தனித்தனியாக அல்லது மொத்தத்தில் பொருண்மை வாய்ந்தவை. ஆனால் நிதிக் கூற்றுக்களுக்கு பரவலாகவில்லை என்ற முடிவைக் காணக்கூடிய பொருத்தமான மற்றும் போதியளவான காணக்காய்வுச் சான்றைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி கொண்டிருக்கின்ற போது, அல்லது
(ஆ) கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையாக அமைகின்ற ஆனாலும் நிதிக் கூற்றுக்களில் கண்டுபிடிக்கப்படாத பிறழ்கூற்றுக்கள் ஏதுமிருந்தால், அவை பொருண்மையாகவிருக்கும் ஆனால் பரந்ததாகவில்லை என்பதற்கு சாத்தியமான

விளைவுகளை உள்ளடக்குகின்ற போதிய பொருத்தமான கணக்காய்வுச் சான்றைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பெற்றுக்கொள்ள இயலாது என்றிருக்கின்ற போது தகுதியான ஒரு கணக்காய்வு அபிப்பிராயத்தை வெளியிடுவார்.

உரிமைமறுப்பு அபிப்பிராயம்

கணக்காய்வாளர் அதிபதி தனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையான போதிய பொருத்தமான கணக்காய்வுச் சான்றைப் பெற்றுக்கொள்ள இயலாது மற்றும் நிதிக் கூற்றுக்களில் கண்டுபிடிக்கப்படாத ஏதாவது பிறழ்கூற்றுக்கள் இருந்தால், அவை பொருண்மையானவை மற்றும் பரவலானவை என்ற சாத்தியமான முடிவுகளுக்கு வருகின்ற நேரங்களில் உரிமைமறுப்புக் கணக்காய்வு அபிப்பிராயத்தை வெளியிடுவார். கணக்காய்வாளர் தலைமை அதிபதி அரிதான சந்தர்ப்பங்களில், நிச்சயமற்ற விடயங்களின் சாத்தியமான தொடர்புகளின் காரணமாக நிதிக் கூற்றுக்கள் மீதான ஒரு அபிப்பிராயத்தை வெளியிடுவதற்குச் சாத்தியமற்றது மற்றும் அந்த நிச்சயமற்ற விடயங்கள் நிதிக் கூற்றுக்கள் மீது சாத்தியமான ஒட்டுமொத்த தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்ற ஒவ்வொரு தனித்தனியான நிச்சயமற்ற விடயங்கள் தொடர்பிலும் போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொண்ட பின்னரும் அவை பல தரப்பட்ட நிச்சயமற்ற விடயங்களில் சம்பந்தப்படுகின்றன எனும் முடிவுக்கு வருகின்ற போதும் ஒரு உரிமைமறுப்புக் கணக்காய்வு அபிப்பிராயத்தை வெளியிடுவார்.

பாதகமான அபிப்பிராயம்

ஒரு பாதகமான கணக்காய்வு அபிப்பிராயம் என்பது கணிசமானளவிலான இரண்டு சாத்தியமற்ற கண்ககாய்வு அறிக்கைகளில் ஒன்றாகும். அதுதான் ஒரு பொதுத் தொழில்முயற்சி பெறக்கூடிய மிகவும் மோசமான கணக்காய்வு அறிக்கையாகும். ஒரு பாதகமான கணக்காய்வு அபிப்பிராயம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் கணிசமான பொருண்மையான பிறழ்கூற்றுக்களைக் கண்டுள்ளார் என்பதைச் சுட்டிக்காட்டும். இத்தகைய பிறழ்கூற்றுக்கள் பொதுவாக நிதி அறிக்கையிடல் சார்ந்த நியமங்களை அனுசரிக்காத மற்றும் செவ்வையற்ற அல்லது நம்பத்தகாத நிதிக்கூற்றுக்களைக் கருதும். வங்கிகளும் கடன் வழங்கும் தரப்புகளும் பாதகமான கணக்காய்வு அபிப்பிராயங்கள் முன்வைக்கப்பட்டுள்ள பொதுத் தொழில்முயற்சிகளைப் பொதுவாக தவிர்த்துக் கொள்கின்றன. பிறழ்கூற்றுக்களானவை தனித்தனியாக அல்லது மொத்தத்தில் பொருண்மை வாய்ந்தவை அல்லது நிதிக் கூற்றுக்களுக்கு பரவலானவை என்ற முடிவை எட்டக் கூடிய போதியளவு பொருத்தமான காணக்காய்வுச் சான்றுகளைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பெற்றுக்கொண்டார் என்ற போது ஒரு பாதகமான கணக்காய்வு அபிப்பிராயத்தை வெளியிடுவார். கணக்காய்வாளர் தலைமை அதிபயின் மூலம் நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் வெளியிடப்படுகின்ற ஒரு பாதகமான கணக்காய்வு அபிப்பிராயம் மிகவும் அரிதாகக் காணப்படும். அதே நேரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அந்தப் பிறழ்கூற்றுக்களைச் சீர்செய்து புதிய நிதிக் கூற்றுக்களை வழங்குவதற்குப் பொதுத் தொழில்முய்றசிகளுக்கு வாய்ப்பை அளிக்கின்றார். இந்த அபிப்பிராயத்தில், கணக்காய்வாளர் தலைமை அதிபதி,

தனது கணக்காய்வு அறிக்கையில் விவரிக்கப்பட்ட கணிசமான விடயங்கள் அதாவது நிதிக் கூற்றுக்கள் நிதி சார்ந்த அறிக்கையிடல் தொடர்பான நியமங்களுக்கு இணங்கக் குறித்த ஆண்டிற்கான நிதி நிலை, நிதி சார்ந்த செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல்கள் என்பவற்றினது உண்மையான நியாயமான ஒரு கண்ணோட்டத்தை நிதிக் கூற்றுக்கள் பிரதிபலிப்பதாகவில்லை என்ற தனது அபிப்பிராயத்தைக் குறிப்பிடுகின்றார்.

இந்த அறிக்கையில் கருத்திற்கொள்ளப்பட்ட 46 நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 2012 நிதிசார் அறிக்கைகள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற வேறுபட்ட கருத்துக்களின் சதவீத ஒப்பீடு ஒன்றைக் கீழேயுள்ள வரைபடம் காட்டுகிறது.



கீழே தரப்பட்டுள்ள அட்டவணை ஒவ்வொரு நிறுவனத்தினதும் 2012ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் வழங்கப்பட்ட அபிப்பிராயத்தைக் காட்டுகிறது.

இல.	நிறுவனம்	அபிப்பிராயத்தின் தன்மை
01	ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை	தகுதிவாய்ந்தது
02	கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம்	தகுதிவாய்ந்தது
03	தேசிய இடர்முகாமைத்துவ நிலையம்	தகுதிவாய்ந்தது
04	அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனம்	தகுதிவாய்ந்தது

05	தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை	தகுதிவாய்ந்தது
06	இலங்கைக் கடற்றொழில் கூட்டுத்தாபனம்	உரிமை மறுப்பு
07	இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்	தகுதிவாய்ந்தது
08	தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்	தகுதிவாய்ந்தது
09	நகர அபிவிருத்தி அதிகார சபை	-
10	இலங்கை நியமங்கள் நிறுவகம்	தகுதிவாய்ந்தது
11	இலங்கை அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடட்	தகுதிவாய்ந்தது
12	மத்திய சுற்றாடல் அதிகாரசபை	தகுதிவாய்ந்தது
13	கொழும்புப் பல்கலைக்கழகம்	தகுதிவாய்ந்தது
14	புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம்	தகுதிவாய்ந்தது
15	அரச ஈட்டு, முதலீட்டு வங்கி	தகுதிவாய்ந்தது
16	எச்.டி.எப்.சி. வங்கி	தகுதியற்றது
17	தேசியக் கல்வி நிறுவகம்	தகுதிவாய்ந்தது
18	இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகம்	தகுதிவாய்ந்தது
19	இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்	தகுதிவாய்ந்தது
20	தேசிய சேமிப்பு வங்கி	தகுதியற்றது
21	தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை	தகுதிவாய்ந்தது
22	தெங்கு பயிற்செய்கைச் சபை	தகுதிவாய்ந்தது
23	இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்	உரிமை மறுப்பு
24	நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை	தகுதிவாய்ந்தது
25	இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்	தகுதிவாய்ந்தது
26	இலங்கை உள்ளூராட்சி நிறுவகம்	தகுதிவாய்ந்தது
27	மானுடவியல், சமூக விஞ்ஞானம் ஆகிய உயர் கற்கைகளுக்கான தேசிய நிலையம்	தகுதியற்றது
28	இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம்	தகுதிவாய்ந்தது
29	பாளி, பௌத்த பட்டப்பின்படிப்பு நிறுவகம்	தகுதிவாய்ந்தது

30	தேசிய போக்குவரத்து ஆணைக்குழு	தகுதியற்றது
31	இலங்கை வாழ்க்கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை	தகுதிவாய்ந்தது
32	வாழ்க்கைத்தொழில் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்	தகுதிவாய்ந்தது
33	மூன்றாம்நிலைத் தொலைக்கல்வி ஆணைக்குழு	தகுதிவாய்ந்தது
34	கூட்டுறவு மொத்த விற்பனவுத்தாபனம் (CWE)	-
35	சுகததாச தேசிய விளையாட்டுத்தொகுதி அதிகாரசபை	தகுதிவாய்ந்தது
36	இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபை	தகுதிவாய்ந்தது
37	தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம்	தகுதிவாய்ந்தது
38	இலங்கை மின்சார சபை	தகுதிவாய்ந்தது
39	வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா	தகுதியற்றது
40	இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்	-
41	ஸ்ரீ லங்கா ரெலிகொம்	தகுதியற்றது
42	இலங்கை புடவைகள், ஆடைகள் நிறுவகம்	தகுதிவாய்ந்தது
43	இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம்	தகுதிவாய்ந்தது
44	இலங்கை மாநாட்டுப் பணியகம்	தகுதிவாய்ந்தது
45	இலங்கைக் காப்புறுதிச் சபை	தகுதியற்றது
46	இலங்கை சமூக பாதுகாப்பு சபை	தகுதிவாய்ந்தது
47	தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம்	தகுதிவாய்ந்தது

பிரதான குழுவினால்

பரீட்சிக்கப்பட்ட நிறுவனங்கள்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை ***நிதி திட்டமிடல் அமைச்சு***	**2013 ஒக்டோபர் 08**
1.	ஊக்குவிப்புக் கொடுப்பனவு, மிகை ஊதியம் ஆகியவற்றின் முறையற்ற கொடுப்பனவு மற்றும் 4.2% வீத வட்டிக்கு வழங்கப்பட்ட பணியாட் தொகுதிக் கடன்கள் என்பன முன்னைய COPE கூட்டத்தில் பணிக்கப்பட்டதற்கு ஏற்ப ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கவில்லை.	நீண்டகாலத்துக்குத் தொழிலாளர் களினால் அனுபவிக்கப்பட்டு வந்த சிறப்புரிமைகளை இடைநிறுத்துதல் தொழிலாளர்களிடையே குழப்பங்களை ஏற்படுத்தும் என CAO/AO கூறியதால் விடயத்தை ஒழுங்குபடுத்துவதிலுள்ள இடர்பாட்டை விளக்கி அமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலம் தெரிவிக்குமாறு குழு பணித்தது.
2.	எல்கடுவ பிளான்டேஷன் லிமிடட் மற்றும் வனிக் இன்கோபரேஷன் கம்பனி ஆகியவற்றில் மேற்கொள்ளப் பட்ட முதலீடுகளின் வட்டி முறையே ரூபா. 10,291,556 மற்றும் ரூபா. 15,574,073 ஆகியவற்றை அறவிடு தலின் தற்போதையநிலை தொடர் பாகக் குழு விசாரித்தது.	எல்கடுவ பிளான்டேஷன் லிமிடட் நிதிப் பிரச்சினைகள் காரணமாக நிலுவையிலுள்ள வட்டிகளை செலுத் தித்தீர்க்க நிவாரண காலப்பகுதி ஒன்றைக் கோரியதோடு வனிக் இன்கோபரேஷன் கலைக்கப்படு வதற்கான நடவடிக்கைகள் வழக் கொன்றின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் CAO/AO கூறினார்.
3.	2012.12.31இல் உள்ளவாறு பெறுமதி யான உரிமை கோரப்படாத மரணக் கொடைகள், திருப்பிக் கொடுக்கப்பட்ட மரணக்கொடைகள், மீள்நிதியளிக் கப்பட்ட மரணக்கொடைகள் என்பன முறையே ரூபா. 7,573,890, ரூபா. 13,905,162 மற்றும் ரூபா. 5,149,573 தொடர்பான நீண்ட காலம் நிலுவை யாகக் காணப்படும், சீராக அதிகரிக்கும் நிலுவைகளைச் செலுத்தித்தீர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	நலன் பெறுனர்களினால் வழங்கப்பட்ட தவறான தனிப்பட்ட தகவல்கள் மற்றும் பிழையான கணக்கு இலக்கங் களினால் திரண்ட அந்நிலுவைகளைச் செலுத்தித் தீர்க்கச் சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படுள்ளதென CAO/AO கூறினார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
4.	22/99ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு முரணாக உத்தி யோகபூர்வப் போக்குவரத்து வசதிகள் பெறத் தகைமையற்ற அதிகாரிகளுக் கான தனிப்பட்ட போக்குவரத்து எரிபொருள் செலவீனமாக ரூபா. 2,317,396 மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் கொடுப்பனவுகள் 2008ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க PED சுற்றறிக்கைக்கு அமைவாக மேற்கொள் ளப்பட்டிருப்பதனால் முறைகேடுகள் இடம்பெறவில்லை என்ற நிலைப் பாட்டை CAO/AO கொண்டிருந்தார்.	2008ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க PED சுற்றறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதன் பிரகாரம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வ போக்குவரத்து உரித்துடையதாக இருப்பினும், 22/99ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நிபந் தனைகள் திருப்தி செய்யப்பட்டிருக்க வேண்டும் எனக் கணக்காய்வாளர் தலைமையதிபதி கூறினார். குழு, அக் கொடுப்பனவுகள் தொடர்பாகக் காப்பு அங்கீகாரத்தைப் பெறப் பணித்த தோடு, ஐயப்பாடுகளைக் களைய அனைத்துச் சுற்றறிக்கைகளையும் மீளாய்வு செய்வதற்கான தேவையை யும் வலியுறுத்தியது.
5.	நிறுவனம், தொழிலாளர்களின் சார்பில் ரூபா. 15, 286,378 தொகையை PAYE வரியாகச் செலுத்தியுள்ளது.	நிறுவனத்துக்கு நிறுவனம் மாற்றம் பெறாத PAYE வரியைச் செலுத்துதல் தொடர்பில் பொதுத் திறைசேரி காத்திரமான தீர்மானமொன்றை மேற் கொள்ள வேண்டும்.
6.	ரூபா. 348,673,030 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பான பௌதீக உறுதிப்படுத்துகை மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வுக்கு அங்கீகரிக்கப்பட்ட பிரதியொன்றைச் சமர்ப் பிக்க CAO/AO இணங்கினார்.
7.	அனுமதிக்கப்பட்ட 21 நாட் களுக்குப் பதிலாக முறைகேடாக 42 நாட்கள் விடுமுறை வழங்கிய அதிகாரிகளுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருக் கின்றது.	இந்த ஐயப்பாடான விடயம் தொடர்பாகக் கணக்காய்வாளர் தலைமையதிபதியுடன் கலந்து ரையாடல் ஒன்றை மேற்கொண்ட பின்னர் விடயத்தை நெறிப்படுத்துமாறு CAO/AOவுக் குப் பணிக்கப்பட்டது.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	**COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்**
8.	தற்போது கலைக்கப்படும் இரு கம்பனிகளில் முறையே ரூபா. 25,227,568 மற்றும் ரூபா. 4,066,314 பெறுமதியான இரு முதலீடுகள் தொடர்பாக முதலீடு செய்யப்பட்ட பணத்தையோ அல்லது வருமா னத்தையோ சபையால் மீளப்பெற்றுக் கொள்ள முடியாமல் போயுள்ளது.	இவ்விரு கம்பனிகளுக்கும் எதிராக இரண்டு நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் உள்ளனவென CAO/AO கூறினார். குழு, பின்வரும் விடயங்களை உள்ளடக்கிய அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு CAO/AOவிடம் பணித்தது. வரலாற்று ரீதியான பகுப்பாய்வைக் கொண்ட முதலீட்டுக் கொள்கை, தகுதி மட்டமும் தொழில்நுட்ப மட்டமும், ETF தொழிற்படு உறுப்பினர்களினதும் பங்களிப்பாளர்களினதும் பகுப்பாய் வொன்று.
	கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் **தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சு**	**2013 ஒக்டோபர் 22**
1.	2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளுக் கான வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.	விடயம் தொடர்பாகக் கவனம் செலுத்த CAO/AO பணிக்கப்பட்டதோடு, கணக்காய்வாளர் தலைமையதிபதியின் திணைக்களத்திலிருந்து ஏதேனும் தாமதம் ஏற்பட்டிருப்பின், கணக்கு களை விரைவாகக் கையளிப்பதற்குக் கணக்காய்வாளர் தலைமையதிபதி இணக்கம் தெரிவித்தார்.
2.	நிரப்பப்படவேண்டிய 56 வெற்றி டங்கள் இருந்திருக்கின்றன.	தகைமையுடைய நபர்கள் இன்மை யாலும், நிலவும் சம்பள அளவுத் திட்டத்தின் காரணமாகவும் அவ்வெற்றிடங்களை நிரப்ப முடியாதுள்ளதாக CAO/AO கூறினார். இது தொடர்பாக நிரல் அமைச்சு

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		அமைச்சரவைப் பத்திரமொன்றைச் சமர்ப்பிப்பதற்கான சாத்தியப்பாடு உள்ளதாகக் குழு சுட்டிக்காட்டியது.
3.	2012 டிசம்பர் 31ஆம் திகதி உள்ளவாறு உடன்படிக்கைகளை மீறிய 18 அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 4,069,011ஐ அறவிடுவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், 2012ஆம் ஆண்டு ரூபா. 3,789,640க்கான ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட்ட பெண் அதிகாரி ஒருவரும் உடன்படிக்கையை மீறி வெளிநாட்டுக்குச் சென்றுள்ளார்.	அப்பிணைகளில் பல 20 வருடங் களுக்கும் மேலானவை எனவும் அறவிடவேண்டிய தொகை ஏறத்தாழ ரூபா.4 மில்லியன் எனவும் குழுவுக்குத் தெரிவிக்கப்பட்டது. ரூபா.3.7 மில்லி யனை மீளப்பெற்றுக் கொள்ளுதல் தொடர்பாக, பரிசோதனைத் திகதியில் உள்ளவாறு மீளப்பெற்றுக் கொள்ள வேண்டிய தொகை ஏறத்தாழ ரூபா.2.2 மில்லியன் எனவும், பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி மாதாந்தம் ரூபா.50,000 என்ற தவணைக்கட்டண முறையில் நிலுவைகளைச் செலுத்து மாறு அவர் அறிவித்துள்ளதாகவும் கூறப்பட்டது. அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் பிணையாளர்களின் மீது சட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப் படும்.
4.	ரூபா. 338,016 பெறுமதியான மதிப்பிழந்த காசோலைகளின் தற்போதைய நிலைமை தொடர்பாக விசாரிக்கப்பட்டது.	அவை மிகப்பழைய திரும்பிய காசோலைகள் எனவும் அவற்றில் பதிவின் போதான வழுக்கள் காணப்படுகின்றதாகவும் கணக்கு களின் இணக்கப்பாட்டின் பின் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலுவைகளைப் பதிவழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப் படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. நிலுவைகளைப் பதிவழிக்க அனுமதி பெறத் திறைசேரிக்குத் தெளிவான விளக்கமொன்றை அளிப்பதற்கான தேவைப்பாடு வலியுறுத்தப்பட்டது.
5.	நிறுவனம் ஊழியர் சேமலாப நிதியத்துக்கும் ஊழியர் நம்பிக்கைப்	அந்த மேல் விதிப்பு வரியைச் செலுத்தத் திறைசேரியிடமிருந்து பணம் பெறப்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	பொறுப்பு நிதியத்துக்கும் முறையே ரூபா. 4,217,373 மற்றும் ரூபா.506,084 கொடுப்பனவுகளில் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக மேல் விதிப்பு வரி செலுத்த வேண்டியேற்பட்டுள்ளது.	பட்டிருக்கவில்லை என்பதால் ITI நிலுவையிலுள்ள தொகையைச் சுய மாகத் திரட்டப்பட்ட நிதியிலிருந்து செலுத்தத் தீர்மானித்ததோடு முழுத் தொகையும் 2013 நவம்பர் மாத மளவில் செலுத்தித் தீர்க்கப்படும்.
6.	மூல ஆவணத்தின் ஒழுங்கற்ற பேணுகை மற்றும் முன்னைய கணினி மயப்படுத்தப்பட்ட முறைமை 'Sage'இலிருந்து புதிய 'DMS' முறைமைக்குத் தகவல்களை மாற்றும் போது ஏற்பட்ட முரண்பாடுகள் ஆகியவற்றின் காரணமாக 5 வருடங் களுக்கும் மேற்பட்ட கடன்கள் ரூபா.5,093,824 இனங்காண முடியவில்லை.	அது 2000ஆம் ஆண்டு நடைபெற்ற தெனவும் கணினிக் காப்பிலிருந்து தகவல்களை மீளப்பெற்றுக் கொள் வதில் அவர்களுக்குச் சிக்கல்கள் காணப்பட்டதாகவும் AO கூறினார். இணக்கப்பாட்டு நடைமுறைகளைத் துரிதப்படுத்தவும் ஆறுமாத காலப் பகுதியினுள் குழுவுக்கு அறிக்கை யொன்றைச் சமர்ப்பிக்கவும் பணிக்கப் பட்டது.
7.	2011ஆம் ஆண்டின் கள ஆய்வுச் சபையினால் இனங்காணப்பட்ட ரூபா.1,092,428 பற்றாக்குறை, 2012ஆம் ஆண்டின் கள ஆய்வுச் சபையினால் திருத்தியமைக்கப்பட்டதா என விசாரிக்கப்பட்டது.	ஒரு பிரிவிலிருந்து மற்றொரு பிரிவுக்கு மாற்றப்படும் போது இனங்காண முடியாத சில மேலதிகமான விடயங்கள் காணப்பட்டதாகவும் 2012 நில அளவைச் சபைக்கு இணைவாக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் இரண்டு மாத காலப்பகுதியினுள் நிறைவேற்றப்படலாம் எனவும் கூறப்பட்டது.
	தேசிய இடர்முகாமைத்துவ நிலையம் **அனர்த்த முகாமைத்துவ அமைச்சு**	**2013 ஒக்டோபர் 23**
1.	பீக்வெல் மண்சரிவு தணிப்புக் கருத்திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட ரூபா.5,350,000இல் ரூபா.1,500,000 மட்டுமே 2011ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்றதோடு கருத்திட்டம் தொடங்கப்பட்டிருக்கவில்லை. அக்	பீக்வெல்ல மண்சரிவு தணிப்புக் கருத்திட்டத்தை வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறுப்பேற்றுள்ளதால், நிலையம், கிடைக்கப்பெற்ற நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி மழைநீர் முகாமைத்துவக் கருத்திட்டத்தை ஆரம்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	கருத்திட்டத்துக்குப் பதிலாக மழைநீர் முகாமைத்துவக் கருத்திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டிருக்கின்றது.	பித்ததாகவும் அது ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் கூறப் பட்டது.
2.	ரூபா.27.77 மில்லியன் பெறுமதி யான 13 கருத்திட்டங்களும் 2011ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாக நிலையம் சுட்டிக்காட்டியிருப்பினும் அத்திட்டங் கள் மீளாய்வுக்குட்பட்ட ஆண்டு வரையிலும் கூட உண்மையில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என் பதைக் குழு அவதானித்தது.	அடுத்த ஆண்டு மே மாதத்துக்கு முன்னர் அக்கருத்திட்டங்கப் பூர்த்தி செய்வதற்கான செயற்பாடுகளை மேற் கொள்ள CAO/AO உறுதியளித்தார்.
3.	நெதர்லாந்து அரசாங்கத்தினால் கருத் திட்டமொன்றுக்கு வழங்கப்பட்ட ரூபா. 3,729 மில்லியன் பெறுமதியான சொத்துக்களில் ரூபா. 1,641 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் மட்டுமே கணக்கில் இடப்பட்டுள்ளன.	வேறுபாட்டை உறுதிப்படுத்தியபின் 2013ஆம் ஆண்டுக்கான கணக்குகளில் உண்மைப் பெறுமதியைக் காட்டு வதற்கு இணக்கம் காணப்பட்டது.
4.	2010ஆம் ஆண்டில் அனர்த்த தணிப்புக் கருத்திட்டங்களுக்காக ரூபா.76 மில்லி யன் மாவட்டச் செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருப்பதோடு, ரூபா.23.98 மில்லியன் பெறுமதியான 15 கருத் திட்டங்கள் மீளாய்வுக்குட்பட்ட ஆண்டிலும் கூடப் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	கருத்திட்டங்கள் பொருத்தமற்ற வானிலை காரணமாக 2010ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட முடியாமல் போனதுடன், அவை 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் பூர்த்திசெய்யப் பட்டிருந்தன.
	அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனம் **நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு**	**2013 ஒக்டோபர் 24**
1.	2013 ஒக்டோபரில் உள்ளவாறு பதவியணியில் பல வெற்றிடங்கள் காணப்படுவதையும் பணியாட்	கூட்டுத்தாபனம் சுய நிதியீட்ட நிறுவனம் என்பதாலும் பணியாட் தொகுதியினரின் சம்பளங்கள்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	தொகுதியினர் அமய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப் பட்டுள்ளதையும் மேலும் சில மேலதிகப் பணியாளர்கள் காணப் படுவதையும் குழு அவதானித்தது.	அவர்களினால் திரட்டப்பட்ட நிதியிலி ருந்து செலுத்தப்படுவதனாலும் அவர்களின் வருமானம் குறைவாக விருக்கும் காலப்பகுதியில் சம்பளங் களைச் செலுத்துவதில் சிக்கல்கள் காணப்படுவதால் கூட்டுத்தாபனம் நிரந்தரமான பணியாட்தொகுதி யினரை நியமிப்பதை வரையறுத்துள்ள தென CAO/AO கூறினார். மேலும் அவர், பல கருத்திட்டங்கள் காணப்படும் வேளையில் தேவையான பணியாட்தொகுதியினரை அமய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்துள்ளதாகவும் கருத்திட்டங்கள் நிறைவடைந்த பின் கூட்டுத்தாபனத்தினால் அவர்களின் நியமனங்கள் முடிவுறுத்தப்படலாம் எனவும் கூறினார்.
2.	கூட்டுத்தாபனத்தின் நிதிக் கொடுக்கல் வாங்கல்களை பரிசோதித்த போது மொத்த வருமான எல்லை இறுதியில் குறைவடைந்துள்ளமையை குழு அவதானித்தது.	அமைச்சரவை அனுமதித்த கருத் திட்டங்களுக்கு மேலதிகமாக கூட்டுத் தாபனம் பிற நிறுவனங்களுடன் போட்டி விலையினைப் பெற்றுக் கொள்ளப் போட்டி விலை மனுக் கோரலுக்குச் செல்ல வேண்டியிருப் பதால் மொத்த வருமான எல்லை குறைவடைந்துள்ளதாக CAO/AO கூறினார்.
3.	கூட்டுத்தாபனத்தில் நல்ல அனுபவம் வாய்ந்த பொறியியலாளர்களும் தொழினுட்ப வல்லுனர்களும் இருக்கின்றனராயினும் 2010ஆம் ஆண்டு ரூபா.4,000,000 பெறுமதியான மின் பிறப்பாக்கியொன்று திருத்த பணிகளுக்காக தனியார் தரப்பினர் ஒருவருக்குக் கையளிக்கப் பட்டிருந்ததையும் இது தொடர்பான விலை மனு 2012 செப்டெம்பரில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததையும் குழு அவதானித்தது. கூட்டுத்தாபனம்,	கணினி முறைமையில் ஏற்பட்ட தவறு காரணமாகவே தாமதம் ஏற்பட்டதெனவும் எவ்வித முறைகேடும் இடம்பெறவில்லை எனவும் கூட்டுத்தாபனம் கணினி முறைமையை திருத்தியமைக்க ஏற்கனவே நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் CAO/AO கூறினார். மேலும், சம்பந்தப்பட்ட வெளித் தரப்பினருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	அதன் பின்னர் எவ்வித தொடர் செயல் நடவடிக்கைகளையும் மேற் கொண்டிருக்கவில்லை.	பட்டிருப்பதாகவும் CAO/AO கூறினார்.
4.	2010ஆம் ஆண்டு முதல் கூட்டுத்தாபனம் உழைப்பை வழங்க ஒப்பந்தக்காரர் ஒருவரின் சேவைகளை பெற்றுக் கொண்டுள்ளமையையும் ஒப்பந்தக்காரருடனான ஒப்பந்தத்துக்கு முரணாக கூட்டுத்தாபனம் ஒப்பந்தக்காரரிடமிருந்து சம்பந்தப்பட்ட ஆவணங்களை பெற்றுக் கொள்ளாமல் 2012ஆம் ஆண்டில் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிக்கு ரூபா.22,196,834 தொகையை ஒப்பந்தக்காரருக்கு மீளளிப்பு செய்துள்ளமையையும் குழு அவதானித்தது.	தவறை ஏற்றுக்கொண்ட CAO/AO, கூட்டுத்தாபனம் ஏற்கனவே தவறைத் திருத்தியமைத்துள்ளதாகக் கூறினார்.
5.	பணியாற்றொகுதியினரின் நிலுவையிலுள்ள ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிக் கொடுப்பனவு தொடர்பான தற்போதைய நிலைமை பற்றி குழு விசாரித்தது.	தற்போது கூட்டுத்தாபனம் பணத்தை மாதாந்தம் செலுத்துவதாகவும் எனவே, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி தொடர்பாக நிலுவைகள் இல்லை எனவும் CAO/AO கூறினார். மேலும் அவர், இந்நிலுவைகள் அனைத்தும் பற்றாக்குறையான நிதிப் பாய்ச் சலினால் ஏற்படுவதாகவும் கூட்டுத் தாபனம் நல்ல தொழிற்படு மூலதனத்தைக் கொண்டிருப்பின் கூட்டுத்தாபனத்தைச் சுமுகமாக நடத்திச் சென்றிருக்கலாம் எனவும் கூறினார். அத்தகைய பிரச்சினைகளை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பது தொடர்பான பிரேரணையைச் சமர்ப்பிக்குமாறு CAO/AOவைப் பணித்தது. அதன் பின்னர் இது தொடர்பாக COPE தனது பரிந்துரைகளை அரசாங்கத்துக்கு வழங்க முடியும் எனவும் கூறப்பட்டது.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு	**2013 ஒக்டோபர் 25**
1.	நிறுவனம், சில முக்கிய கருத்திட் டங்களை அமுல்ப்படுத்த அத் துறையில் தொழில்சார் தகைமையுடை யோரின் சேவையைப் பெறுவதற்கான தேவைப்பாட்டின் காரணமாக சட்டத் திலுள்ள ஏற்பாடுகளை மீறிப் பணிப் பாளர் சபைக்கு நியமனங்களை மேற்கொண்டுள்ளது.	சட்டத்தை மீறிப் பணிப்பாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு களை நியாயப்படுத்த முடியாது என்ற கருத்தைக் குழு கொண்டிருந்ததோடு, தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற் காகச் சட்டத்தைத் திருத்த முடியாது என்பதால், மேலதிக உறுப்பினர்களை ஆலோசகர் தரத்துக்கு நியமிப்பதன் மூலம் விடயத்தை ஒழுங்குபடுத்து வதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து ஆராயுமாறு CAO/AOவிடம் பணித்தது.
2.	பதினாறு பண்ணைகள் தொடர்ந்தும் நட்டத்தில் இயங்கிக் கொண்டிருப் பதோடு 2012ஆம் ஆண்டில் மட்டும் அது ரூபா.141,229,674ஆகக் காணப் பட்டது.	குறைந்த உற்பத்தியை வழங்கும் கால்நடைகளை மாற்றியதன் விளை வாக அப்பண்ணைகளில் முன்னர் சராசரியாக நாளொன்றுக்கு 2 லீற்றர் களாகக் காணப்பட்ட பால் உற்பத் தியை 15 முதல் 16 லீற்றர்களுக்கு அதிகரித்துள்ளதாக CAO/AO கூறினார்.
3.	வெளித்தரப்பினர் அத்துமீறி உட்பிர வேசித்துள்ள ரிதியாகம பண்ணையின் காணிகள் தொடர்பான பிரச்சினையின் தற்போதைய நிலைமை கலந் துரையாடப்பட்டது.	காணிகளில் குடியிருப்பாளர்களைத் தேசிய கால்நடைவளர்ப்பு அபிவிருத்தி சபையினால் (NLDB) கொள்வனவு செய்யக் கூடிய சோளம், புல் போன்ற விலங்குத் தீனிகளைப் பயிரிடச் செய்ய லாம் அல்லது அவர்களுக்கு மாற் றீட்டுக் காணிகளை வழங்கலாம் எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக CAO/AO கூறினார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
4.	உலர்த்துவதற்காக வழங்கப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டிருக்காத சோள இருப்பு ஒன்று தொடர்பாகத் தனியார் கம்பனி ஒன்றிடமிருந்து பெற வேண்டிய ரூபா.11,947,220ஐ மீளப்பெற்றுக் கொள்ளுதலின் தற்போதைய நிலைமை பற்றிக் கலந்துரையாடப்பட்டது.	பண மோசடிக்காகக் கைது செய்யப்பட்டுக் குற்றம் சாட்டப்பட்டவர் பின்னர் பிணையில் விடுவிக்கப் பட்டதாக CAO/AO கூறியதோடு மேலும் சட்ட நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.
5.	முன்னைய முகாமைத்துவத்தினால் முறைகேடாகக் குத்தகைக்கு விடப் பட்ட ஹாராகமப் பண்ணையிலுள்ள கற்சுரங்கம் தொடர்பான வழக்கின் தற்போதைய நிலைமை கலந் துரையாடப்பட்டது.	குத்தகைக்காரருக்கு நிறுவனம் பொறுப்புக் கூற நேரிடும் என்னும் அடிப்படையில் மாதாந்த வாடகை யைக் கூட ஏற்றுக் கொள்வதைக் கால்நடை வளர்ப்பு அபிவிருத்திச் சபை நிறுத்திக் கொண்டுள்ளது என CAO/AO கூறியதும் அவர்கள் காணியைப் பயன் படுத்தும் காலப்பகுதியில் கால்நடை வளர்ப்பு அபிவிருத்திச்சபை ஏதேனும் நட்டத்தைத் தவிர்க்க முன்னேற்பாடாக வாடகையை நீதிமன்றத்தில் அல்லது விசேட கணக்கில் வைப்பிலிட நீதி மன்றத்தில் அனுமதி பெறுமாறு குழு CAO/AO விடம் கோரியது.
6.	அப்போது தொடர்பு கொள்ள முடியாத நிலையில் காணப்பட்ட பல்வேறு தரகர் களிடமிருந்து ரூபா.67 மில்லியன் அறவிடவேண்டியிருந்ததைக் குழு அவதானித்தது.	மீளப் பெற்றுக்கொள்ள முடியாத நிலுவைகளைப் பதிவழிக்க முடியுமா என அறிய, இந்த விடயம் தொடர்பாகத் திறைசேரியுடன் கலந்துரையாடுமாறு குழு CAO/AOவைக் கோரியது.
7.	2012.12.31இல் உள்ளவாறு 2002ஆம் ஆண்டில் கமக்காரர் நம்பிக்கை நிதியத்திலிருந்து பெறப்பட்ட கடன் தொடர்பான நிலுவையிலுள்ள கடன் தொகை மற்றும் அது தொடர்பான திரண்ட வட்டி என்பன முறையே ரூபா.100,112,700 மற்றும்	2013.10.23 அன்று செலுத்தப்பட்ட இறுதித் தவணைக்கட்டணத்துடன் ரூபா.4.2 மில்லியன் தொகை ஏற்கனவே செலுத்தித் தீர்க்கப் பட்டுள்ளதாக CAO/AO கூறியதோடு இவ்விடயம் தொடர்பான தேவையான

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	ரூபா.88,475,763ஆக இருப்பதோடு 2012 ஒக்டோபரின் பின்னர் தவணைக் கட்டணம் செலுத்தப்பட்டிருக்க வில்லை.	தகவல்களைக் கணக்காய்வுக்காக வழங்கவும் இணக்கம் தெரிவித்தார்.
8.	குத்தகைக் கொள்வனவின் அடிப் படையில் 03 டபிள் கெப் மோட்டார் வாகனங்களைக் கொள்வனவு செய்யப் பொதுத் தொழில் முயற்சிகள் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ள போதிலும் 2012ஆம் ஆண்டில் ஆரம்ப மதிப்பீட்டை விட ரூபா.700,000 மேலதிகமாகச் செலுத்திப் பதிவு செய்யப்பட்ட வாகனமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.	நிறுவனத்துக்குத் தேவைப்பட்ட குறித்த வகையான வாகனம் களனியிலுள்ள ஒரு இடத்தைத்தவிர வேறெந்த இடத்திலும் கிடைக்கவில்லை என CAO/AO கூறினார். இருப்பினும், 2011ஆம் ஆண்டில் ஆரம்ப விலையாக இருந்த ரூபா.3,150,000 விற்பனையா ளரினால் 2012ஆம் ஆண்டில் ரூபா.3,850,000ஆக அதிகரிக்கப் பட்டது. இந்தத் தவறை ஏற்றுக் கொண்ட CAO/AO, அச்சமயத்தில் வாகனமொன்று இன்றியமை யாததாகத் தேவைப்பட்டதினால் அதனைக் கொள்வனவு செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டதாகக் கூறினார்.
9.	மெல்சிறிபுர பண்ணையில் புதிய உணவு விடுதி, சமையலறை, மலசலகூட முறைமை ஆகியவற்றை நிர்மாணிக்கும் போது கொள்வனவுக் குழுவின் அனுமதி பெற்றுக் கொள்ளாமை, சில நிறுவுகைகளுக்காக ஒப்பந்தக்காரருக்கு இரட்டைக் கொடுப் பனவு மேற்கொண்டமை, பணியை நிறைவேற்றும் முன்னர் இறுதிக் கொடுப்பனவையும் செலுத்தியமை போன்ற பல முறைகேடுகள் அறிக்கையிடப்பட்டுள்ளன.	குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை ஒன்றை நடாத்தி, நான்கு வார காலப்பகுதியினுள் கணக்காய் வாளர் தலைமையதிபதிக்கு ஒரு பிரதியுடன் கூடிய அறிக்கை யொன்றைக் குழுவுக்குச் சமர்ப்பிக்கு மாறு குழு CAO/AOவைப் பணித்தது.
10.	கடுமையான நிதிப் பிரச்சனையின் காரணமாக நிலுவையிலுள்ள தொகையைச் செலுத்தித் தீர்க்க முடியாத நிலையிலுள்ள மஹாவலி கால்நடைக் கம்பனிக்கு	வளர்ப்புப் பறவைகளின் வழங்கலை இடைநிறுத்தினால் அதே அமைச்சின் நோக்கெல்லையின் கீழ்வரும் கம்பனி, மேலும் சிக்கலுக்குள்ளாக்கப்படலாம் என்பதை CAO/AO சுட்டிக் காட்டினார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	ரூபா.5,752,594 பெறுமதியான வளர்ப்புப் பறவைகள் கடன் அடிப் படையில் வழங்கப்பட்டிருக்கின்றன.	குழு, கால்நடை வளர்ப்பு அபிவிருத்திச் சபையின் மீதான சுமையைக் குறைக்க இவ்விடயம் தொடர்பாக உடனடி யாகக் கவனம் செலுத்துமாறு CAO/AOவைப் பணித்தது.
11.	CAO/AOவின் படி, பெண் கன்றுகளுக்கான பராமரிப்புச் செல விலேயே பராமரிக்கப்பட வேண்டிய ஆண் கன்றுகளின் படிப்படியான அதிகரிப்பு இக்கைத்தொழிலுக்குப் பார தூரமான சுமையை ஏற்படுத்தி யுள்ளதோடு, கலாசார மற்றும் சமய விடயங்கள் இப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதை மேலும் சிரமத்துக்குள் ளாக்கியுள்ளது.	நிலவும் கொள்கைகளைத் திருத்தி யமைக்க வேண்டியதன் தேவையைப் புரிந்து கொண்ட குழு, இது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரமொன்றைச் சமர்ப்பிக்குமாறு CAO/AOவிடம் கேட்டுக்கொண்டது.
	இலங்கைக் கடற்றொழில் கூட்டுத்தாபனம் **கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு**	**2013 நவம்பர் 05**
1.	2011 மற்றும் 2012ஆம் ஆண்டு களுக்கான வருடாந்த அறிக்கைகள் ஏன் பாராளுமன்றத்தில் இன்னும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை எனக் குழு விசாரித்தது.	2011ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அமைச்சரவைக்கு அங்கீ காரத்துக்காக அனுப்பப்பட்டுள்ள தெனவும் 2012ஆம் ஆண்டுக்கான கணக்காய்வுக் கருத்துரை இன்னும் பெறப்பட்டிருக்கவில்லை எனவும் CAO/AO கூறினார். விரைவில் இரு அறிக்கைகளையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள் வதாக உறுதியளித்தார்.
2.	2013ஆம் ஆண்டு வரையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்குச் செலுத்தவேண்டிய நிலுவை வரிகளைச் செலுத்தாமை காரணமாகத் தண்டத்	பெறுமதிசேர் வரியின் நிலுவையாக CFC ரூபா.21 மில்லியனை மாத்திரமே செலுத்த வேண்டியுள்ளதாக CAO/AO கூறினார். அவர்களால் செலுத்தப்பட்ட

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	**COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்**
	தொகை வட்டி ரூபா.1,843,905 வரையில் திரண்டுள்ளமையைக் குழு அவதானித்தது. 31 ஒக்டோபர் 2013இல் செலுத்தவேண்டிய வருமானவரி. ரூபா. பொருளாதார சேவைகள் கட்டணம் 35,695,513 பெறுமதி சேர் வரி 47,609,350 PAYE வரி 72,550 பாதுகாப்பு அறவீடு 7,450 மொத்தம் ரூபா. **83,384,863**	நிலுவைகள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஏடுகளில் இற்றைப் படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் ரூபா.72,550 PAYE வரி நிலுவையை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் பதிவழிக்குமாறு அவர்களால் கோரப்பட்ட 2004ஆம் ஆண்டிலிருந்து முன் கொண்டு வரப்பட்ட தண்டக் கட்டணங்கள் எனவும் கூறினார். CFC பொருளாதார சேவைக் கட்டணங்களை மாத்திரமே செலுத்த வேண்டியுள்ளது. கலந்து ரையாடலின் பின், இவ்விடயம் தொடர்பாக அனைத்துத் தேவையான மூல ஆவணங்களையும் உள்ளடக்கிய காலப் பகுப்பாய்வுடன் கூடிய விபரமான அறிக்கையொன்றைக் குழுவுக்கும் கணக்காய்வாளர் தலைமை யதிபதிக்கும் சமர்ப்பிக்குமாறு CAO/AOவைக் குழு பணித்தது.
3.	தனியார் கம்பனி ஒன்றுக்கு வழங்கப் பட்ட காணியின் உடைமையைப் பெற்றுக்கொள்ள CFC நடவடிக்கை களை மேற்கொண்டிருந்ததா எனக் குழு விசாரித்தது.	CFC காணியைத் தனியார் கம்பனிக்குக் கையளித்திருப்பினும், இக்காணி உண்மையில் கடற்றொழில் துறைமுகக் கூட்டுத்தாபனத்துக்குரியதாகும். எனவே, தனியார் கம்பனிக்கெதிராக வழக்கொன்றைத் தாக்கல் செய்யுமாறு கடற்றொழில் துறைமுகக் கூட்டுத் தாபனத்தைக் கேட்டுக் கொள்ளுமாறும் CFCயினால் மேற்கொள்ளப்பட்ட முந்திய மாற்றீட்டு நடவடிக்கையை இரத்துச் செய்ய நீதிமன்றக் கட்டளை யொன்றைப் பெற்றுக்கொள்ளுமாறும் CFCக்குச் சட்ட ஆலோசனை வழங்கப் பட்டது. அதற்கமைய அவர்கள் சட்ட ஆலோசனையை மேற்கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
4.	குழு, கடன் நிலுவைகளை மீளப் பெற்றுக்கொள்வது தொடர்பான முன் னேற்றங்கள் குறித்து விசாரித்தது.	நிலுவையிலுள்ள கடன் தொகையை ரூபா. 167 மில்லியன் வரையில் குறைக்கக் கூடியதாக இருந்துள்ள தெனவும் இதில் ரூபா. 57 மில்லியன் பல்வேறு அரச நிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய நிலுவைகள் எனவும் எஞ்சிய தொகை 7-15 வருட காலப்பகுதியிலிருந்து முன் கொண்டு வரப்பட்ட நீண்ட கால நிலுவையாகும் எனவும் CAO/AO கூறினார். மேலும், சுகாதார அமைச்சிடமிருந்து பாரிய தொகை நிலுவையாக இருந்த போதிலும் அவர்கள் தொடர்ந்தும் ரூபா. 20 மில்லியன் பெறுமதியான மீனை வைத்தியசாலைகளுக்கு வழங்கி வந்துள்ளனர் என CAO/AO சுட்டிக்காட்டினார். நிலுவைகளை மீளப் பெற்றுக்கொள்ளல் தொடர்பான நீண்ட கலந்துரையாடலின் பின், ஒரு அரசாங்க நிறுவனத்திலிருந்து மற் றொரு அரசாங்க நிறுவனத்துக்கான நிலுவைகளைச் செலுத்தித் தீர்க்க நேரடியாகத் திறைசேரியினூடாக மேற்கொள்வதற்கான கொள்கைத் தீர்மானமொன்றை மேற்கொள் வதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து ஆராயுமாறு திறைசேரியின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவிப்பதாகத் தவிசாளர் கூறினார்.
5.	அமைச்சின் 05 வாகனங்களுக்கான ரூபா. 339,405 பெறுமதியான எரி பொருளை வழங்க CFC அமைச்சின் அனுமதியைப் பெற்றிருக்கவில்லை என்பதையும் 2012ஆம் ஆண்டில் அமைச்சுக்குச் சொந்தமான 03 மோட் டார் வாகனங்களுக்கு எரிபொருள் வழங்கலுக்காக ரூபா. 628,202 செலுத்தப்பட்டுள்ளமையையும் குழு அவதானித்தது.	CFC நாடுமுழுவதும் மீன் சில்லறை விற்பனை நிலையங்களைத் தாபித் ததினால் அவ்விற்பனை நிலையங் களின் வைபவங்கள் மற்றும் பிற நிகழ்ச்சிகளுக்கு ஊடகத் துறையினர் பங்கேற்க வேண்டி ஏற்பட்டதாகவும் அமைச்சிடமிருந்து அச்செயற்பாடு களுக்கான ஏற்பாடுகளைப் பெற்றிருக் காததன் காரணத்தினால் அதற்கான கொடுப்பனவுகளையும் CFC பொறுப்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		பேற்க வேண்டி ஏற்பட்டது எனவும் CAO/AO கூறினார்.
6.	06 மிகை குளிராக்கி டிரக் வண்டி களைக் கொள்வனவு செய்வதற்காகக் கிடைக்கப்பெற்ற ரூபா.36.62 மில்லியன் ஏற்பாடு, கூட்டுத்தா பனத்தின் மீண்டுவரும் செலவீ னத்தைத் தீர்க்கக் கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சிலிருந்து பெற்றுக்கொண்ட கடனைச் செலுத்தப் பயன்படுத்தப்பட்டது ஏன் எனக் குழு விசாரித்தது.	ரூபா. 36.62 மில்லியன் ஏற்பாடு பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டு மென்பதால் அது அமைச்சில் வைக்கப்பட்டிருப் பதாக AO கூறினார். மேற்கூறிய ஏற்பாட்டிலிருந்து ரூபா. 6.6 மில்லியன் மிகை குளிரூட்டி டிரக் வண்டிகளுக்கான முற்பணமாகச் செலுத்தப்பட்டிருக்கின்றது. எஞ்சிய ரூபா. 30 மில்லியன் அமைச்சினால் CFCஇன் அனுமதியின்றி விசேட தேவையொன்றுக்காகக் கூட்டுத்தா பனத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடனைச் செலுத்தித் தீர்க்கப் பயன் படுத்தப்பட்டுள்ளது. அமைச்சு எவ்வாறு CFCக்குக் கடன் ஒன்றை வழங்கியுள்ளது என்பது பற்றியும் அக்கொடுக்கல் வாங்கல் எவ்வாறு கணக்கிலிடப்பட்டுள்ளது என்பது குறித்தும் கேள்வி எழும்புவதாகக் கணக்காய்வாளர் தலைமையதிபதி சுட்டிக்காட்டினார்.
7.	முகாமைத்துவ சேவைகள் திணைக் களம் மற்றும் சம்பள, பதவியணி ஆணைக்குழுவிடம் அனுமதி பெறாமல் பொறியியல் துறையிலுள்ள அதிகாரி ஒருவருக்கு ரூபா.180,000 கொடுப் னவு செலுத்தியுள்ளமையைக் குழு அவதானித்ததோடு அவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ள முன் னர் திறைசேரியின் அனுமதியைப் பெற அதன் தேவைப்பாட்டைக் குறிப்பிட்டுத் திறைசேரிக்கு எழுத்து மூலம் அறிவிக்குமாறு CAO/AOவிடம் பணித்தது.	குழு, ஏதேனும் விதிவிலக்குகளுக்கான தேவையில் கவனம் செலுத்தி அவற்றைத் திறைசேரிக்கு அறிக்கை யிடுவது பணிப்பாளர் சபையிலுள்ள திறைசேரி பிரதிநிதியின் கடப்பாடு என்பதை வலியுறுத்தியது. திறைசேரி அவ்விடயங்கள் தொடர்பாக அனைத்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களிலும் பிரயோகிக்கக் கூடியதான தீர்மானங் களை மேற்கொள்ள முயலவேண்டும்.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
8.		முன்னைய அமைச்சரவைத் தீர்மானத் திற்கமைய CFCயின் இறக்குமதி களுக்குத் தீர்வை விலக்கப்பட்டி ருக்கின்ற போதிலும் அது அமுல்ப்படுத் தப்பட்டிருக்கவில்லை என CAO/AO இறக்குமதிகள் மீது தீர்வைகள் அறவிடுதல் தொடர்பான அரசாங்கத் தின் கொள்கைகள் குறித்து விளக்க மளித்துக் கூறினார். அவர், கூட்டுத் தாபனம் ரூபா. 20 மில்லியன் பெறும தியான "தலபத்" மீனை மாதாந்தம் அரசாங்க வைத்தியசாலைகளுக்கு மாத்திரம் வழங்குவதனால் "தலபத்" மீது விதிக்கப்பட்டுள்ள தீர்வையை யாவது விலக்குவதன் முக்கியத் துவத்தை வலியுறுத்தினார்.
9.	வடபகுதியில் மீன்பிடிப் படகுகளுக் கான திருத்தப்பணிகள், பராமரிப்பு ஆகியவற்றுக்கு எவ்வித வசதிகளையும் CFC வழங்கவில்லை என்பதைக் குழு அவதானித்ததோடு அப்பகுதி மக்களின் திறன்களை அபிவிருத்தி செய்யும் முகமாகத் தனியார் துறையுடன் இணைந்த வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிலையங்களைத் தாபிக்குமாறு CFCயிடம் பரிந்துரைத்தது.	இவ்விடயம் கடற்றொழில் துறைமுகக் கூட்டுத்தாபனத்தின் நோக்கெல்லை யின் கீழ் வருவதால் இவ்விடயத்தில் கவனம் செலுத்த அவர்களைப் பணிக்க வேண்டுமென CAO/AO கூறினார்.
10.		மீனிலிருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதற் கான நடவடிக்கைகளை மேற்கொள்ளு மாறு CFCயிடம் குழு பரிந்துரைத்தது.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	**COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்**
	இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் **பெற்றோலியத்துறை அமைச்சு**	**2013 டிசம்பர் 02**
1.	2010ஆம் ஆண்டு முதல் கூட்டுத் தாபனம் வருடாந்த அறிக்கையைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்க வில்லை என்பதைக் குழு அவதானித்தது.	IFRS திருத்தங்களுக்காகப் பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்த CPCஇன் துணை நிறுவனமான CPSTLஇன் கணக்குகள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை என்பதையும் திரட்டிய கணக்குகளைத் தயாரித்தல் தாமதப்படுத்தப்பட்டி ருப்பதாகவும் CAO/AO சுட்டிக் காட்டியதோடு 2012ஆம் ஆண்டுக்கான அனைத்து நிதிக்கூற்றுக்களையும் முடிவுறுத்த உறுதியளித்தார். மேற் கூறியபடி செய்யுமாறும் 2013ஆம் ஆண்டுக்கான கணக்குகளை விரை வாகக் கணக்காய்வாளர் தலைமை யதிபதியிடம் சமர்ப்பிக்குமாறும் CAO/AOவைக் குழு பணித்தது.
2.	ஹெஜிங் கொடுக்கல் வாங்கல் மற்றும் ஏற்பட்ட நட்டம் ஆகியவற்றின் தற்போதைய நிலை தொடர்பாகக் குழு விசாரித்தது. மேலும், CPC ஸ்டேன்டட் சார்டட் வங்கியுடன் செய்துகொண்ட பணத்தைச் செலுத்தித் தீர்ப்பதற்கான ஒப்பந்தப்படி, CPC 60 மில்லியன் அமெரிக்க டொலர்களை வங்கிக்குச் செலுத்தவேண்டும் என் பதைக் குழு வெளிப்படுத்தியது. CPC ஹெஜிங் கொடுக்கல் வாங்கலிலிருந்து 1.3 மில்லியன் அமெரிக்க டொலர் களை மாத்திரமே பெற்றுக்கொண் டுள்ள அதேவேளை, சட்ட மற்றும் பிற செலவீனங்களுக்காக இருந்து 15.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள்	2013.09.30இல் உள்ளவாறு ஹெஜிங் கொடுக்கல் வாங்கலினால் CPCக்கு ஏற்பட்ட மொத்த நட்டம் 75.28 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும் என CAO/AO கூறினார். சிட்டி வங்கி கொடுக்கல் வாங்கல் தொடர் பாக நீதிமன்றம் CPCக்குச் சார்பாகத் தீர்ப்பளித்ததோடு டொயிஷ் வங்கிக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாகத் தீர்ப்பு இன்னும் வழங்கப்படவில்லை. குழுவின் பணிப்புரைக்கு ஏற்ப, 2011.06.01 முதல் 2012.06.30 வரையி லான காலப்பகுதியில் பெற்றோலிய உற்பத்திகளின் கொள்வனவு தொடர் பில் கணக்காய்வாளர் தலைமைய திபதியினால் விசேட கணக்காய்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	செலவழிக்கப்பட்டுள்ளன.	வொன்று மேற்கொள்ளப்பட்டமை யைக் குழு அவதானித்தது. நட்டம் ரூபா.8.3 பில்லியன்களாக இருந்துள் ளமையை அவர்கள் கண்டறிந் துள்ளனர். கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளில் பல அப்போது நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் எனினும், உட்கட்டமைப்பு வசதிகள் இன்மையால் சில குறைபாடுகளைச் சரிப்படுத்த முடியாதுள்ளதாகவும் CAO/AO கூறினார். விசேட கணக்காய்வு அறிக்கை தொடர்பாக CPCயிடமிருந்து கிடைக்கப்பெற்ற சில பதில்களை ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளதாகவும் அத்தகைய கண்டறிதல்கள் குறித்து CPCக்குக் கணக்காய்வு ஏற்கனவே அறிவித்துள்ளதாகவும் கணக்காய் வாளர் தலைமையதிபதி சுட்டிக் காட்டினார். குழு, அத்தகைய குறை பாடுகளைக் குறித்துக்காட்டிக் குழுவுக்கு அறிக்கை யொன்றைச் சமர்ப்பிக்குமாறு கணக் காய்வாளர் தலைமையதிபதியைப் பணித்தது.
3.	CPC நாட்டுக்குத் தரக்குறைவான எரிபொருளை வழங்கிய விநியோகத்தர் களைக் கரும் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா எனக் குழு விசாரித்தது.	CPC தற்காலிகமாக அவர்களின் வழங்கலை நிறுத்தியுள்ளதாகவும் நடுவர் தீர்ப்பின் பின்னர் அவர்களின் தரப்பில் தவறு நிகழ்ந்திருக்கவில்லை எனக் கண்டறியப்பட்டால் கூட்டுத் தாபனம் அவர்களைக் கேள்வி மனுக்களைக் கோர அனுமதிக்கும் என CAO/AO கூறினார். மேலும், CPC எரிபொருளின் விபரக் குறிப்பீடு களைத் தொடர்ந்தும் சரிபார்க்கு மெனவும் ஒப்பந்தங்களின்படி வழங்குனர்கள் வழங்கிய மாசடைந்த எரிபொருளைப் பதிலீடு செய்ய வேண்டுமெனவும் CAO/AO கூறினார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
4.	எதிர்மறையான தேறிய சொத்து நிலைமையைக் குழு அவதானித் ததோடு கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய CPC நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.	ஹெஜிங் கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்ட நட்டத்தினாலும் CPCயினால் எரிபொருள் மானிய விலையில் வழங்கப்பட்டமையினாலும் கடந்த பல வருடங்களாக CPC நட்டம் ஈட்டியுள் ளது என CAO/AO கூறினார். மேலும் விசாரித்தபோது CPC தற்பொழுதும் ஸ்ரீலங்கன் எயர்லைன்சுக்கும் மிஹின் லங்கா லிமிட்டடுக்கும் எரிபொருளைக் கடனாக வழங்கவேண்டியுள்ளதென CAO/AO கூறினார்.
5.	புதிய சேவைகள் நிலையங்களைத் தாபிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள பிரமாணங்கள் தொடர்பாகக் குழுவினால் எழுப்பப்பட்ட கேள்வி யொன்றுக்கு மறுமொழியளிக்கும் முகமாக, மொரட்டுவப் பல்கலைக் கழகத்தினால் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையினால் அனுமதிக் கப்பட்ட வழிகாட்டல் குறிப்புகள் புதிய இட அமைவுக்கான அனுமதி வழங்கப் பட்டதும் பயன்படுத்தப்படுமென CAO/AO கூறினார். அத்துடன், பணிப்பாளர் சபையானது பரிந்துரைக் கப்பட்ட வழிமுறைகளிலிருந்து விலகி விஷேட காரணங்களின் அடிப் படையில் அங்கீகாரம் வழங்குவதற் கான அதிகாரத்தைக் கொண்டுள்ளது.	குழு, மொரட்டுவப் பல்கலைக்கழகத் தினால் தயாரிக்கப்பட்ட பிரமாணங் களைச் சமர்ப்பிக்குமாறு CAO/AOவைப் பணித்தது.
6.	முன்னைய உடன்படிக்கையில் காணப் பட்ட அதே விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் இரண்டாவது முறையாகவும் எரி பொருள் கொள்வனவு செய்வதற்கு இ.பெ.கூ. வெளி நாட்டுக் கம்பனி யொன்றுடன் (ஐக்கிய அரவு	பின்வரும் அறிக்கைகளைக் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு CAO/AO வைக் குழு பணித்தது; மேற்படி கொள்வனவு பற்றிய முதலாவது மற்றும் இரண்டாவது உடன்படிக்கைகள். உள்ளக விசாரணையொன்றை நடாத்தி

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	எமிரேட்ஸ்) உடன்படிக்கையொன்று செய்திருந்தமையும், இரண்டாவது உடன்படிக்கையில் ஐக்கிய அமெரிக்க டொலர் 54ஐக் காப்பீட்டுக் கட்டணமாக இரண்டு முறை உள்ளடக்கியதன் விளைவாக ஐ.அ.டொ.2,060,842ஐ மேலதிகமாக இ.பெ.கூ செலுத்தியிருந்ததையும் குழு அவதானித்தது. மேலதிகக் கொடுப்பனவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கெதிராக ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததா எனக் குழு விசாரித்தது. மேலதிகக் கொடுப்பனவு வழங்குநரிடமிருந்து வர வேண்டிய நிலுவைகளிலிருந்து ஏற்கனவே மீள அறவிடப்பட்டுள்ளதாகவும், மத்தியஸ்தமொன்று சிங்கப்பூரில் இடம்பெற்று அதன் தீர்வானது நிலுவையில் இருந்ததாகவும் CAO/AO கூறினார்.	இத்தவறுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களைக் கண்டறிதல். மத்தியஸ்த சபையின் தீர்ப்பு. அரசாங்கத்திலிருந்து அரசாங்கத்துக்கு என்ற அடிப்படையில் எரிபொருள் கொள்வனவைப்பற்றிக் கலந்துரையாடிய குழு, அவ்வாறான உடன்படிக்கைகளைக் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு CAO/AO வைப் பணித்தது.
7.	2011 மற்றும் 2012 ஆகிய வருடங்களுக்குரிய தாமதக் கட்டணமாக முறையே ஐ.அ.டொ 795,393.71 மற்றும் ஐ.அ.டொ 726,867.31 தொகையை வழங்குநர்கள் கோரியிருந்ததைக் குழு அவதானித்தது.	இவ்விடயமானது சிலவேளைகளில் தமது கட்டுப்பாட்டிற்கு அப்பால் காணப்பட்டதாகக் கூறிய CAO/AO தாமதத்தைக் குறைப்பதற்கான ஒவ்வொரு முயற்சியும் எடுக்கப்பட்டதாகவும் கூறினார். 2012ஆம் ஆண்டில் தாமதக்கட்டணக் கொடுப்பனவானது தமது கணக்கீடுகளுக்கிணங்க ஐ.அ.டொ 844,796 வரை குறைக்கப்பட்டிருந்ததாகவும் CAO/AO மேலும் கூறினார்.
8.	இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய செயலாற்றுகை தொடர்பாகக் குழு விசாரித்தது.	இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தமது இழப்புக்களை 2012ஆம் ஆண்டில் குறைப்பதற்கு ஆற்றலுடை

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		யதாக இருந்ததாகவும், 2013 செப்டெம்பர் மாதத்திலுள்ளவாறு ஐ.அ.டொ 2 மில்லியன் இலாபத்தைக் காட்டுவதற்கு இயலுமாக இருந்த தாகவும் ஆயினும் இழப்புக் காப்பீடு தொடர்பான (ஹெட்ஜிங்) கொடுக்கல் வாங்கல் சீராக்கங்கள் காரணமாக இது இழப்பாக மாற்றமடைந்திருந்ததாகவும் CAO/AO கூறினார். இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (இ.பெ.கூ) 2014ஆம் ஆண்டில் இலாபத்தை ஈட்டுவதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொள்ளுமென அவர் மேலும் உறுதியளித்தார்.
9.	கள்ளத்தனமாகப் பணத்தைப் பெற்று பவுசர்(வாகன) உரிமையாளர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கியிருந்த சில இ.பெ.கூ. உத்தியோகத்தர்கள் தொடர்பாக இலத்திரனியல் ஊட கங்களில் அறிக்கையிடப்பட்ட சம்பவம் ஒன்று பற்றிக் குழு விசாரித்தது.	இவ்விடயத்தை அவர்கள் அறிந் தவுடன் அதற்குப் பொறுப்பாகச் செயற்பட்ட இரண்டு உத்தியோகத் தர்களை உடனடியாக இடை நிறுத்தியதாக CAO/AO கூறினார்.
	தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் **இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு**	**2013 டிசம்பர் 03**
1.	ரூபா 6,873,642/- பெறுமதியான 144 கடன் நிலுவைகளைப் பதிவழிப்புச் செய்வதற்கான திறைசேரி அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.	மேற்படி பதிவழிப்புத் தொகைகளுக் கான தழுவல் அங்கீகாரத்தைக் கேட்டு மன்றானது திறைசேரிக்கு ஏற்கனவே எழுதியுள்ளது.
2.	2012.12.31ஆம் திகதியளவில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு	காணி மீட்பு ஆணைக்குழு உத்தியோகத்தர்களுடன்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	உரித்தில்லாத காணிகளில் நிர்மாணங்கள் மற்றும் கட்டிடத் திருத்த வேலைகள் தொடர்பாக ரூபா 261.3 மில்லியன் தொகையொன்று செலவளிக்கப்பட்டிருந்தது.	கலந்துரையாடி மேற்படி காணிகளுக்கான உறுதிகளைப் பெற்றுக் கொள்வதற்குக் குழுவொன்றை நியமிக்குமாறு பணிக்கப்பட்டது.
3.	2012ஆம் ஆண்டில் விலைமனுக் கோராது ரூபா 684,295/= பெறுமதியான கொள்வனவுகள் மேற் கொள்ளப்பட்ட 05 சந்தர்ப்பங்கள் இடம்பெற்றிருந்தன.	இளைஞர் விளையாட்டு விழா மற்றும் அக்காலகட்டத்தில் நடாத்தப்பட்ட ஏனைய நிகழ்வுகளுக்கான அவசர தேவைகளுக்கு அப்பணம் செவிடப் பட்டிருந்ததாக CAO/AO கூறியதால், அவ்வாறான நிலைமையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமானது குறைந்தது CAO மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றி ருக்கவேண்டும் என்ற அபிப்பிரா யத்தைக் குழு தெரிவித்தது.
4.	இளைஞர் நிலையமொன்றை நிர் மாணிப்பதற்காக 2000ஆம் ஆண்டு யூலை மாதத்தில் ரூபா 3,330,000 செலவில் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பேருவளையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த காணிக் காக ரூபா 3,398,200/= தொகை யொன்று செலவளிக்கப்பட்டிருந்தும் அபிவிருத்திப்பணியானது பரிசீலனைத் திகதிவரை இடம்பெற்றிருக்கவில்லை.	இளைஞர் விடுதியொன்றை நிர்மாணிப் பதற்குத் திட்டமிடப்பட்டு அதன் மதிப்பீடு திறைசேரியின் அங்கீகாரத் தைப் பெறுவதற்காக அவர்களால் அனுப்பப்பட்டிருந்தும் புதிய நிர் மாணங்களில் ஈடுபட வேண்டாமெனத் திறைசேரி அவர்களுக்கு அறிவித்திருந் ததாக CAO/AO கூறினார். எனவே தே.இ.சே. மன்றமானது எதிர் காலத்தில் அவர்களுக்கு நிதிகள் கிடைக்கும் வேளையில் அப்பணத்தைப் பொருத்த மான கருத்திட்டமொன்றில் முதலீடு செய்வதற்குத் தீர்மானித்திருந்தது.
5.	தே.இ.சே.ம. பத்திரிகை விளம்பர மொன்றை வெளியிட ரூபா 588,000/= ஐயும், உ/த பரீட்சையில் சித்தியடை	மன்றத்திற்கு அவ்வேளையில் அவ்வா றான தேவைகளுக்கு நிதியைப் பயன் படுத்தவேண்டியிருந்ததுடன், இக்கருத்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	யாத மாணவர்களுக்கு வெற்றிகரமற்ற கருத்திட்டமொன்றை நடைமுறைப் படுத்திய ஆலோசகர் ஒருவருக்கு ரூபா 71,460/= ஐயும் செலவளித்திருந்தது.	திட்டமானது உண்மையில் பயனுள்ளதாக இருந்ததா என்பதை அறிய இலங்கைத் தேசிய மனிதவள அபிவிருத்தி மன்றம் ஆய்வொன்றை நடாத்தியிருந்தது.
6.	2011.05.01ஆம் திகதி இடம் பெற்றிருந்த இளம் தலைவர்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமொன்றுக்கு 3500 உணவுப் பொட்டலங்களை வழங்குவதற்காக ரூபா 332,500/- தொகையொன்று செலவளிக்கப் பட்டிருந்த போதும், நிகழ்ச்சித்திட்டத் திற்கான நிகழ்ச்சி நிரல் மற்றும் நிகழ்ச் சித்திட்டத்திற்கு இளம் தலைவர்களைச் சமூகமளிக்குமாறு அழைக்கும் கடிதம் என்பன காணப்படவில்லை. மேலும் ஒரு வளவாளர் கூடப் பங்குபெற வில்லை என்பதுவும் அறிக்கை யிடப்பட்டது.	விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் பற்றிய அனைத்துத் தகவல்களையும் கணக் காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்குமாறு CAO/AO வைக் குழு பணித்தது.
7.	2011 ஜனவரி மாதத்தில் நாவலப்பிட்டி ஜயதிலக விளையாட்டரங்கில் கரப்பந்தாட்டக் கூடமொன்றை நிர் மாணிப்பதற்கு ரூபா 1,287,440/- தொகையொன்று செலவு செய்யப் பட்டிருந்தும், 07 மாதங்களின் பின்னர் அது அகற்றப்பட்டிருந்தமை அவ தானிக்கப்பட்டது. ரூபா 361,000/- பெறுமதியான மீள்பயன்படுத்தக் கூடிய பொருட்கள் குறைபயன் பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்த அதே வேளை ரூபா 926,440/- பயனற்ற செலவீனமொன்று ஏற்பட்டுமிருந்தது.	இளைஞர் சமூக சம்மேளனத்தின் வேண்டுகோளுக்கிணங்க இளைஞர் விளையாட்டு விழாவுக்குக் கரப்பந் தாட்டக் கூடம் நிர்மாணிக்கப் பட்டதுடன், குறுகிய காலத்தின் பின்னர் ஜயதிலக விளையாட்டு மைதானத்தைச் சர்வதேச தரத்திற்கு மேம்படுத்த வேண்டுமெனத் தீர் மானிக்கப்பட்டது. எனவே கரப்பந் தாட்டக் கூடத்தை அகற்றவேண்டியேற் பட்டதுடன், அகற்றப்பட்ட பொருட்கள் தொடர்பாக மாவட்டச் செயலாளருடன் தே.இ.சே.ம. கலந்துரையாடியது. அப்பொருட்களைப் புதிய கரப் பந்தாட்டக் கூடமொன்றை அமைப் பதற்குப் பயன்படுத்தலாம் அல்லது

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		இளைஞர் சமூக சம்மேளனங்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கலாம்.
8.	இலங்கை இளைஞர் சமூக சம் மேளனத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்ட வீட்டுத் தோட்ட விவசாயம் பற்றிய கருத்திட்ட அறிக்கையொன்றின் அடிப்படையில் கருத்திட்டமொன்றை நடைமுறைப் படுத்துவதற்காக 2009ஆம் ஆண்டு கொரிய யுனெஸ்கோ ஆணைக் குழுவிடமிருந்து பெறப்பட்ட ரூபா 1,143,155/- உத்தேசக்கருத்திட் டத்திற்குப் பயன்படுத்தப்படாமலிருந் தது.	அவ்வாறான தொகையொன்றைப் பெற்றுக்கொள்வதென்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல என்பதால், கௌரவ அமைச்சரிடம் கலந்து ரையாடி, இவ்விடயத்தில் பேரவை நேரடியாக ஈடுபட்டுக் கருவித் தொகுதிகளை விநியோகிப்பதற்கு நிதியை விடுவித்துக் கருத்திட்டத்தை அவர்கள் நடைமுறைப்படுத்தியதாக அறிவிக்கும் அறிக்கையொன்றை யுனெஸ்கோவுக்கு அனுப்பி வைக்க முடியுமா என்பதை ஆராயுமாறு குழு பணித்தது. இல்லையேல், எதிர் காலத்தில் அவ்வாறான கருத்திட்டங் களுக்கு யுனெஸ்கோ நிதியை விடுவிக்காது.
9.	நிரல் அமைச்சுக்கு உரித்தானதும் ரூபா 1,200,000/- பெறுமதியானதுமான லேண்ட்ரோவர் ஜீப் வண்டியொன்றை 2006 செப்டெம்பர் மாதத்தில் ஏலத்தில் விடுவதற்காக தே.இ.சே. மன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தபோதிலும், அமைச்சின் அங்கீகாரமின்றித் தொடர்ந்தும் வைக்கப்பட்டு மன்றத் தால் பாவனைக்கும் எடுக்கப்பட் டிருந்தது. அதேவேளையில் ரூபா 200,000 பெறுமதியான வாகனத்தின் கியர் பெட்டியானது தவறான இடத்தில் வைக்கப்பட்டும் இயந்திரம் மோட்டார் இயந்திர நுட்பப்பிரிவுக்கு அனுப்பப்பட்டும் காணப்பட்டன.	விசாரணையொன்றின் பின்னர் இவ்விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரின் சம்பளத்திலிருந்து பெறுமதியை மீளப்பெறும் நடவடிக் கையை மன்றம் எடுத்திருந்தது. அதனைத்தொடர்ந்து சிறிது காலத்தின் பின்னர் இயந் திரத்தை அவர் திருப்பிக் கொடுத்திருந்தார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	நகர அபிவிருத்தி அதிகார சபை **பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு**	**2013 டிசம்பர் 04**
1.	2012ஆம் ஆண்டுக்கான நிதிசார் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை யதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.	அவர்கள் நிதிசார் கூற்றுக்களை இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் மற்றும் சர்வதேச நிதிசார் அறிக்கை நியமங்கள் ஆகியவற்றுக்கிணங்கத் தயாரித்திருந்ததாகக் கூறிய CAO/AO அவற்றை மூன்று வாரங்களினுள் கண்காகய்வுக்குச் சமர்ப்பிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.
2.	2013 – 2017 வரையிலான காலப் பகுதிக்குத் தயாரிக்கப்பட்ட கூட்டிணைத்திட்டத்தில் சில குறை பாடுகள் காணப்பட்டதைக் குழு அவதானித்தது. முன்னைய மூன்று வருடங்களுக்கான நிதிசார் விளைவுகள், தாபனக்கட்டமைப்பு மற்றும் இலக்குகளின் நிதிசார் பெறுமதிகள் என்பன அதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.	திருத்தப்பட்ட கூட்டிணைத் திட்ட மானது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப் பட்டிருந்ததாக CAO/AO கூறினார்.
3.	2013 ஆகஸ்ட் 30ஆம் திகதி யிலுள்ளவாறு 197 வெற்றிடங்கள் இருந்ததையும் 92 தொழில்நுட்ப தரம்சாராப் பணியாட்கள் மேலதி கமாகக் காணப்பட்டதையும் குழு அவதானித்தது.	2010ஆம் ஆண்டின் பின்னர் ந.அ.அ. எந்தவிதமான பணியாட்களையும் ஆட்சேர்ப்புச் செய்திருக்கவில்லை எனவும் மேலதிக ஊழியர்கள் பல்வேறு துறைகளில் பயிற்றுவிக்கப் படுகின்றனர் எனவும் பயிற்சியின் முடிவில் வெற்றிடங்களை நிரப்பு வதற்காக அவர்களை நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் CAO/AO கூறினார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
4.	ட்ரான்ஸ் வர்க் ஸ்கொயா டிவலப்மன்ட் ப்ரொஜெக்ட் (Transwork Square Development Project) தொடர்பில் விலைமனுக் கோரும்வேளையில் ந.அ.அ. இணையதளம் மட்டும் உபயோகிக்கப்பட்டிருந்தமை ஏன் எனக் குழு விசாரித்தது.	1250 உள்ளூர் மற்றும் சர்வதேச முதலீட்டாளர்கள் ந.அ.அ. இணைய தளத்தைப் பார்வையிட்டுப் பதிலளித்தி ருந்தனர் என CAO/AO கூறினார். தெரிவுசெய்யப்பட்ட முதலீட்டாளர் ஏற்கனவே மொத்த மதிப்பீடான ரூபா 4,995 மில்லியனில் ரூபா 4,365 மில்லியனைச் செலுத்தியிருந்ததாக அவர் மேலும் கூறினார். நிலுவையான ரூபா 638 மில்லியனைக் கொடுத்துத் தீர்ப்பதில் தாமதம் ஏற்பட்டதால் ஒப்பந்தத்திற்கிணங்க 12% வட்டியுடன் அதனைத் தீர்க் குமாறு முதலீட்டாளருக்கு ந.அ.அ. அறிவித்திருந்ததாக அவர் மேலும் கூறினார். அவ்வாறான தாமதங் களைத் தவிர்க்கும் முகமாக முதலீட்டின் மொத்தத் தொகையைக் கால எல்லையொன்றுக்கு முன்னர் அவர்கள் முதலீடு செய்யவேண்டுமெனக் குறிப் பிட்டு நிபந்தனையொன்றை எதிர்கால ஒப்பந்தங்களில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாக CAO/AO மேலும் கூறினார்.
5.	ஹங்வெல்ல நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர்பாகக் குழு விசாரித்தது.	அது திறைசேரியால் நிதியிடப்பட்ட கருத்திட்டமென்றும் முழுக் கருத்திட்டத் தினதும் மொத்த மதிப்பீடு ரூபா 185 மில்லியன் ஆகும். கருத்திட்டத்தின் கட்டங்கள் I மற்றும் II ரூபா 43 மில்லியனில் முடிக்கப்பட்டு வழிச் சாலை முற்றுப்பெற வேண்டியிருந் ததாக CAO/AO கூறினார். கருத் திட்டத்தைச் செய்து முடிப்பதற்காக நிதியின் மீதித் தொகையைப் பொருளா தார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறு CAO தமக்குத்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		தெரிவித்திருந்ததாக AO மேலும் கூறினார்.
6.	அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிப்புப் பற்றிய முன்னேற்றம் மற்றும் அபிவிருத்தி செய்யப்படுவதற்கென இனங்காணப்பட்ட பகுதிகளுக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் என்பன திருப்திகரமானதாகக் காணப் படவில்லை என்பதைக் குழு அவதானித்தது.	சுமார் 248 மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் அபிவிருத்தி செய்யப்படவேண்டிய பகு திகளாக இனங்காணப்பட்டதாகவும், அனைத்து அபிவிருத்தித் திட்டங் களின் தயாரிப்பும் 2014ஆம் ஆண்டின் இறுதியளவில் முடிக்கப்படும் எனவும் CAO/AO கூறினார். அத்தரவுகள் அனைத்தையும் உத்தியோகபூர்வ இணையதளத்தில் உள்ளடக்குமாறு CAO/AO வைக் குழு பணித்தது.
7.	2012.09.30ஆம் திகதியிலுள்ளவாறு வாடி வீடுகளிலிருந்து செலுத்தப்படாத ரூபா 139 மில்லியன் நிலுவையொன்று காணப்பட்டது.	நிலுவையாக உள்ள கடனில் ரூபா 66 மில்லியன் தொகையை மீளப்பெறு வதற்கும் மீதியைப் பதிவழிப்பதற்கும் அவர்கள் நடவடிக்கை எடுத்திருந்ததாக CAO/AO கூறினார். ரூபா 139 மில்லியன் மொத்த நிலுவைத் தொகையில் தண்டனைக் கட்டணங் களும் உள்ளடக்கப்பட்டிருந்ததாக CAO/AO மேலும் தெரிவித்தார். வாடிவீடுகளின் நிருவாகத்தை நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து முறையாக முகாமைத்துவம் செய்யக் கூடிய வேறு நிறுவனமொன்றுக்குக் கையளிப்பதற்கான கொள்கைத் தீர் மானமொன்று எடுக்கப்பட வேண்டிய தேவையிருந்தது என்ற அபிப் பிராயத்தைக் குழு கொண்டிருந்தது.
8.	விளையாட்டுத்துறை அமைச்சிட மிருந்து ரூபா 84 மில்லியன் தொகை	சுகததாச விளையாட்டரங்கை நவீன மயப்படுத்துவதற்காக ரூபா 84

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	யொன்று நிலுவையாகக் காணப் பட்டது.	மில்லியன் விளையாட்டுத்துறை அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்ததாக CAO/AO கூறினார். அத்தொகையை மீளப்பெற்றுக்கொள்ள முடியாதிருந் தமையால் அத்தொகையைப் பதிவழிப் புச் செய்வதற்கான அங்கீகாரத்தைக் கேட்டுத் திறைசேரிக்கு ந.அ.அ. எழுதியிருந்தது.
9.	நகர அபிவிருத்தி அதிகாரசபையானது 150 ஏக்கர் பரப்பொன்றில் அமைந் திருந்த காணிகள் மற்றும் வீடுகளைச் சுவீகரித்து அக்குடியிருப்பாளர்களை மேலும் வசதிகளுடன் வேறு அமை விடத்தில் முதற்கட்டத்தின் கீழ் மீள்குடியேற்றத் தேவையான நிதியைப் பெற 10 மில்லியன் பெறுமதியான தொகுதிக்கடன்களை வழங்கியிருப் பதுடன் அதன் பின்னர் தொகுதிக் கடன்களை மீட்பதற்கான நிதியைப் பெற்றுக்கொள்ள 75 ஏக்கர் காணியை நீண்டகாலக் குத்தகையில் விட்டிருக்க வேண்டிய தேவையிருந்தும் தொகுதிக் கடன்கள் வழங்கப்பட்டு 23 மாதங்கள் கடந்த நிலையில் அக்காணிகளைக் குத் தகைக்கு விட எந்தவிதமான நடவடிக் கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதைக் குழு அவதானித்தது.	சுவீகரிக்கப்பட்ட காணிகளைக் குத்த கைக்கு விடுவதற்குச் சிறிது காலம் எடுக்கும் என்பதால் கிடைக்கக் கூடியதாக இருந்த நிதியை வேறு முதலீட்டில் முதலீடு செய்து ரூபா 4.2 மில்லியன் வட்டியொன்றைத் தீர்ப் பதற்குத் தேவையான ரூபா 3.7 மில்லியன் கிடைக்கப்பெற்றது என CAO/AO விளக்கமளித்தார்.
10.	சுவீகரிக்கப்பட்ட காணிகளில் குடி யிருந்தவர்களை மீள்குடியேற்றும் முகமாக நிர்மாணிக்கப்பட்ட தெமட்டக்கொட வீடமைப்புக் கருத் திட்டத்தில் வீடொன்றை நிர்மாணிக்கச் செலவு செய்த மொத்தத் தொகை மற்றும் ஒவ்வொரு வீட்டுப்பய னாளியும் செலுத்தவேண்டியிருந்த தொகை ஆகியவை பற்றிக்	ஒரு வீட்டின் பெறுமதி காணியுட்பட ஏறத்தாழ ரூபா 7 மில்லியன் எனவும், வீட்டு உரிமையாளர் ஒருவர் ஆரம்பத்தில் பேணுகை நிதியாக ரூபா 50,000/- ஐயும் பதிவுக் கட்டணமாக மேலும் ரூபா 50,000/- ஐயும் வைப்புச் செய்தல் வேண்டும். அதனைத் தொடர்ந்து மாதாந்த வாடகையாக

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	குழு விசாரித்தது.	ரூபா 3,000/- ஐ 30 வருடகாலத்துக்குச் செலுத்த வேண்டும். இதற்கிணங்க ரூபா 7 மில்லியனை முதலீடு செய்ததன் பின்னர் ரூபா 01 மில்லியனை மாத்திரமே அரசாங்கம் பெறும் என CAO/AO மேலும் கூறினார்.
11.	வீடமைப்புக் கருத்திட்டங்களின் பேணுகை தொடர்பாகக் குழு கலந்துரையாடியது.	அதனைக் கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையிடம் கையளிக்கும் வரையில், ந.அ.அ. யின் மேலதிக பணியாட்களைப் பேணுகைப் பணியை நிறைவேற்றுவதற்காகப் பயிற்று விக்குமாறு தனது உத்தியோகத் தர்களுக்கு அறிவுறுத்தியிருந்ததாக CAO கூறினார்.
12.	நிதிசார் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டுள்ள ரூபா 3.7 பில்லியன் பெறுமதிமிக்க காணிகள் மற்றும் கட்டிடங்கள், ரூபா 1.9 பில்லியன் பெறுமதிமிக்க பணிமுன்னேற்றம் ஆகியவை பற்றிய போதியளவு தகவல்கள் ஏன் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை எனக் குழு விசாரித்தது.	சொத்துப் பதிவேடொன்று முன்னர் பேணப்படவில்லை எனவும் இதனைத் தயாரித்து இற்றைப்படுத்தியிருந்த வேளையில் மீள்மதிப்பீடும் முடிவடைந்திருந்ததாலும் அவற்றை 2012ஆம் ஆண்டு இறுதிக் கணக்குகளில் உள்ளடக்குவதற்கான கணக்கிணக்கப்பாடு மேற்கொள்ளப்பட்டதாக CAO/AO கூறினார். ரூபா1.9 பில்லியன் பெறுமதியான பணிமுன்னேற்றம் தொடர்பில், நிதிப்பற்றாக்குறையினால் கருத்திட்டங்களில் சில நிறுத்தப்பட்டதுடன் அவற்றை 2012ஆம் ஆண்டு நிதிசார் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப் பட்டிருந்தது எனவும் CAO/AO கூறினார்.
13.	2012ஆம் ஆண்டளவில் தெமட்டக்கொட வீடமைப்புத் தொகுதியின் வருமான நிலுவை ரூபா	வீடமைப்புத் தொகுதியின் தேவைகளில் சில பூர்த்திசெய்யப்படாததன் காரணமாக உறுதிகளை வழங்குவதில்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	107 மில்லியன் வரை அதிகரித் திருந்ததைக் குழு அவதானித்தது.	தாமதமொன்று காணப்பட்டதாக CAO கூறினார். அவர்கள் கூட்டாதன முகாமைத்துவ அதிகாரசபையிட மிருந்து தடை நீக்கற் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளும் வேளையில் மாத்திரமே உறுதிகள் வழங்கப்படும். இவ்விடயத்தை 2014 மார்ச் இறுதியளவில் சீராக்கலாம் என CAO/AO மேலும் கூறினார்.
14.	நகர அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்பட்ட முற்பண நிலுவைகள் 2 முதல் 5 வருடங்கள் வரையிலான காலப்பகுதி மற்றும் 5 வருடங்களுக்கு மேலானவை முறையே ரூபா 10,255,041/= மற்றும் ரூபா 4,462,088/= தீர்க்கப்படாமல் இருந்துள் ளதைக் குழு அவதானித்தது.	2012 ஜூன் மாத ஆரம்பத்தில் ரூபா 1.1 மில்லியன் பதிவழிக்கப்பட்டதுடன் நிலுவையை விரைவில் தீர்ப்பதற்கு இணக்கம் காணப்பட்டதென CAO/AO கூறினார்.
15.	தம்புள்ள புதிய நகரத்திட்டம் தொடர் பாகச் செலுத்தப்படாதுள்ள பயன் பாட்டுக்கட்டணங்கள் 92 மில்லியன் ரூபாவை அறவிடுதல் தொடர்பான தற்போதைய நிலைமை பற்றிக் குழு விசாரித்தது.	நிலுவையாகவுள்ள தொகைகளைச் செலுத்தாமலிருந்த குடியிருப்பாளர் களுக்குக் கோரிக்கைக் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்ததாகவும், பலாத் காரமாகக் குடியிருப்புக்களில் பிர வேசித்த சில குடியிருப்பாளர்களுக் கெதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாகவும் CAO/AO கூறினார்.
16.	ஊழியர்களின் ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. நிலுவைகளைச் செலுத்து வதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்ததாவெனக் குழு	இவ்விடயம் சீர் செய்யப்பட்டிருந் ததாகவும், அனைத்துக் கொடுப்பனவு களும் நிலுவைகளுடன் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	**COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்**
	கேள்வியெழுப்பியது.	CAO/AO கூறினார்.
17.	'வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டல்' மற்றும் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றுக்குச் செலுத்தவேண்டிய நஷ்ட ஈடு பற்றிய நீதிமன்ற வழக்கின் தற்போதைய நிலைமை பற்றிக் குழு விசாரித்தது.	பேச்சுவார்த்தை நடத்திச் சட்டமா அதிபரினால் தீர்மானிக்கப்பட்டுத் திறைசேரியினாலும் அங்கீகரிக்கப்பட்டவாறு ரூபா 148 மில்லியனைச் செலுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது என CAO/AO கூறினார். இவ்விடயத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமென CAO/AO மேலும் கூறினார்.
	இலங்கை நியமங்கள் நிறுவகம் **தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சு**	**2013 டிசம்பர் 05**
1.	அழுத்தவிசைக்கான மாதிரிச் சோதனைகளில் தோல்வியடைந்த தரக்குறைவான சீமெந்தை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்குநர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. உதாரணமாகத் தரக்குறைவானதென அறிக்கையிடப்பட்டிருந்த "லக்கி சீமெந்து" சந்தைக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. மேலும் முன்னர் அனுமதிப்பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்த சில வழங்குநர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் மீண்டும் வழங்கப்பட்டிருந்தன.	இலங்கை நியமங்கள் நிறுவகத்தால் அனுமதிப்பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தும், தரத்தைப் பரிசீலனை செய்யும் சோதனை இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளையில் கையிருப்புக்களை விடுவித்திருந்த சில சந்தர்ப்பங்களும் இடம் பெற்றிருந்தன எனக்குறிப்பிடப்பட்டது. உற்பத்தியாளர்களால் உற்பத்தியின் தரத்தை அவசியமான தரத்திற்கு உயர்த்த முடியுமாயின் இ.நி.நி. அனுமதிப்பத்திரத்தை மீண்டும் வழங்க முடியும்.
2.	இறக்குமதி செய்யப்பட்ட சீமெந்தின் கையிருப்புகள் சில தரச் சோதனையில் தோல்வியடைந்தும் அவை அங்கீகரிக்கப்பட்டு "விடுவிக்கப்பட முடியும்"	அங்கீகரிக்கப்பட்ட இறக்குமதியான கையிருப்புகள் "விடுவிக்கப்பட முடியும்" எனச் சிட்டையிடப்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	எனச் சிட்டையில் எழுதப்பட்டிருந்தன.	பட்டிருந்தன. ஆனால் அக்கையிருப் புகள் அவசியமான தரத்திற்கு இல்லையென எழுமாற்றான பரி சோதனைகள் மூலம் உறுதி செய்யப்பட்டால் அக்கையிருப் புகளைத் திறந்த சந்தைக்கு விடுவிக்காமல் இருப்பதற்கான அதிகாரத்தை அவர்கள் கொண் டிருந்தனர். திறந்த சந்தையிலிருந்து மாதிரிகளைச் சேகரித்துத் தரப்பரிசோதனை செய்யுமாறு CAO/AO ஐக் குழு பணித்தது.
3.	2012.12.31ஆம் திகதியிலுள்ளவாறு மொத்தக் கடனாளி நிலுவை ரூபா 40,858,140/= வாக இருந்ததுடன் அவற்றில் ரூபா 14,838,281/= மற்றும் ரூபா 5,041,750/= முறையே 2 – 5 வரு டங்களாகவும் 5 வருடங்களுக்கு மேலாகவும் நிலுவையாகக் காணப் பட்டது.	2012 டிசம்பர் மாதமளவில் ரூபா 12.64 மில்லியன் அறவிடப்பட்டிருந்ததாகவும் நிலுவைத் தொகை உரிய காலத்தில் அறவிடப்படும் எனவும் கூறப்பட்டது.
4.	முழுக்கொடுப்பனவான ரூபா 300,000/=ஐ மேற்கொண்டதன் பின்னர் 03 வருடகாலத்திற்கு இலங்கை நியமங் கள் சான்றுப் பத்திரம் (SLS Certificate) வழங்குவதே நடைமுறை யிலுள்ள செயற்பாடாக இருந்தும், ஆரம்பக் கொடுப்பனவாக 100,000/= இற்கும் சான்றுப்பத்திரங்கள் வழங் கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப் பட்டன. அவ்வாறு சான்றுப்பத்திரம் பெற்றிருந்தோர் நிலுவைத் தொகை யைச் செலுத்துவதிலிருந்து புறக்கணித் திருந்தமையும் அவதானிக்கப்பட்டது.	தற்போது ஒழுங்கான முறைமை யொன்று கடைப்பிடிக்கப்படுவதா கவும், அதற்கமைய உற்பத்தியாளர் உடனடியாகப் பணத்தைச் செலுத்தி இலங்கை நியமங்கள் சான்றுப் பத்திரத்தை ஆண்டுதோறும் புதுப் பிக்கலாம் எனக் குழுவிற்குத் தெரிவிக்கப்பட்டது.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
5.	2000 ஜனவரி 11ஆம் திகதிய PF/PE இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கைக்கு முரணாக ரூபா 20,842,206/= பயன்படுத்தப்படாத விடுமுறைக்கெனப் படிகளாகவும் ஊக்குவிப்புப் படிகளாகவும் செலுத்தப்பட்டிருந்தது.	CAO/AO அதற்கான தழுவல் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு இணங்கினார். குழுவானது முழுமையான ஊக்குவிப்புத் திட்டத்திற்கும் திறைசேரியிடமிருந்து அங்கீகாரத்தைப் பெறுமாறு ஆலோசனை வழங்கியது.
6.	தரமுகாமைத்துவ முறைமை செயற்பாட்டுச் சான்றுப்பத்திரம் மற்றும் முறைமை சான்றுப்பத்திரம் பெற்றிருந்த நிறுவனங்களுக்கான ISO-9001 முறைமைச் சான்றுப்பத்திர உடன்படிக்கை ஆகியவற்றின் பிரகாரம் 12 மாதங்களுக்கொருமுறை கண்காணிப்புச் சோதனைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.	பணியாள் பற்றாக்குறை காரணமாகச் சில குறைபாடுகள் காணப்பட்டதாகவும், பரிசீலனைத் திகதியில் உள்ளவாறு சோதனைகள் உரிய காலத்தில் நடாத்தப்படுவதாகக் கூறப்பட்டது.
7.	ரூபா 2,724,253/= தொகை நிலுவையொன்று ISO-9001 மற்றும் ISO-14000 சான்றுப்பத்திரங்கள் பெற்றிருந்த 31 நிறுவனங்களிடமிருந்து சம்பந்தப்பட்ட கோவைகள் அழிந்திருந்தமையால் அறவிட முடியாமலிருந்தது.	உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் உதவியுடன் சம்பந்தப்பட்ட பதிவேடுகள் கண்டுபிடிக்கப்பட்டதால், நிலுவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டிருந்தது.
8.	தென்னையுடன் தொடர்புடைய 44 கைத்தொழில்களுக்கு ஜீ.எம்.பி. (GMP) சான்றுப்பத்திரங்கள் வழங்கும் முகமாகத் தென்னை அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து ரூபா 1,400,000/= பெறப்பட்டிருந்தும் 2013 மே மாதமளவில் 11 சான்றுப்	பரிசீலனைத் திகதியிலுள்ளவாறு 23 சான்றுப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 11 கைத்தொழில்களுடன் தொடர்புபட்ட பணிகள் ரூபா 1.2 மில்லியன் செலவீனத்தில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தன.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	பத்திரங்களே வழங்கப்பட்டிருந்தன.	
9.	சிறிய மற்றும் நடுத்தர அளிவிலான தொழில் முயற்சியாளர்களுக்குத் தரச் சான்றுப் பத்திரங்கள் வழங்குவதற்காக ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப் பட்ட கருத்திட்ட நிதியில் மீதி ரூபா 4,079,759/= 03 வருடங்களுக்கு மேலாக நடைமுறைக் கணக்கொன்றில் வெறுமனே காணப்பட்டது.	அப்பணத்தை நிலையான வைப்புக் கணக்கொன்றில் முதலீடு செய் வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு CAO/AO வைக் குழு பணித்தது.
10.	வேறு நிறுவனங்களுக்கு விடுவிக்கப் பட்டிருந்த 07 உத்தியோகத்தர்களுக்கு PED/12 சுற்றறிக்கைக்கு முரணாக ரூபா 1,084,086/= சம்பளங்களாகவும் படிகளாகவும் நிறுவகத்தால் செலுத்தப் பட்டிருந்தது.	பணியாட்களை வேறு நிறுவனங் களுக்கு விடுவிக்கமுன்னர் திறை சேரியின் செயலாளரிடம் அங்கீகாரத் தைப் பெறுமாறு CAO/AO பணிக்கப் பட்டார்.
	இலங்கை அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடட் **வெகுசன ஊடகத் தகவல் அமைச்சு**	**2013 டிசம்பர் 09**
1.	பொது நம்பிக்கைப் பொறுப்பாளரால் நியமிக்கப்படவேண்டிய பணிப்பாளர் சபையின் பணிப்பாளர் – நிதி பதவி இன்னும் நிரப்பப்படாதுள்ளது.	இவ்வெற்றிடத்தை மேலும் தாமத மின்றி நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்குத் தெரிவிக்குமாறு CAO/AO வைக் குழு பணித்தது.
2.	அ.நி.பே.சி.லி செய்திப் பத்திரிகைகள் பக்கச்சார்பாக அறிக்கையிடுவதாக அடிக்கடி குற்றம் சுமத்தப்படுவதாலும் இந்தியா போன்ற நாடுகளுக்கெதிரான	

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	அவ்வாறான விமர்சனங்கள் தோற்று விக்கக் கூடிய எதிர் விளைவுகளின் கடுமை மற்றும் தீவிரத் தன்மையும் சுட்டிக்காட்டப்படுவதாலும் முறையான பதிப்பாசிரியர் கொள்கையொன்றின் அவசியம் விரிவாகக் கலந்துரையாடப் பட்டது.	
3.	கடனடிப்படையில் அச்சிடும் கடதாசி விநியோகம் செய்வது தொடர்பாகத் தனியார் அச்சகமொன்றிலிருந்து கிடைக்கவேண்டிய ரூபா 20,472,934/= இல் ரூபா 4,330,510/= ஐப் பதிவழிப்பதற்காகப் பணிப்பாளர் சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டிருந்தது.	ரூபா 4,330,510/= தொகையானது கணக்கீட்டுப் பிழையொன்றாக இனங்காணப்பட்டதாகவும், அதனைச் சீர் செய்யப்பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கோரப்பட்டிருந்ததாகவும் CAO/AO கூறினார்.
4.	லங்கா புவத் கம்பனியில் மேற் கொள்ளப்பட்டிருந்த ரூபா 1.2 மில்லியன் முதலீட்டின் எந்தவிதமான ஆதாயமும் இற்றைவரை கிடைக்கப் பெற்றிருக்கவில்லை.	இக்கம்பனியைப் புதிய தோற்றத்தில் மீள்கட்டியமைப்பதற்குத் திட்டமிடப் பட்டிருந்ததால் அதன் பங்குகளுக்கான உரிய பெறுமதியை அ.நி.பே.சி.லி. பெற்றுக்கொள்ளும் என CAO/AO கூறினார்.
5.	ரூபா 16,903,756/= பெறுமதிமிக்க 109 மதிக்கப்படாத காசோலைகள் தொடர் பாக உரிய தொகையை அறிவட்டுக் கொள்வதற்குத் திருப்திகரமான எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப் பட்டிருக்கவில்லை.	ரிவிர மீடியா நிறுவனத்திடமிருந்து அவர்களது மதிக்கப்படாத காசோலைக் கான ரூபா 4.5 மில்லியன் ஏற்கனவே அறவிடப்பட்டிருந்ததாக CAO/AO கூறினார். மேலும் ஏனைய மதிக்கப்படாத காசோலைகளின் பெறுமதியை அறவிடுவதற்கான சட்ட நடைமுறைகள் எடுக்கப்பட்ட நிலை யிலிருந்ததாகவும் குறிப்பிடப்பட்டது.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	மத்திய சுற்றாடல் அதிகாரசபை சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு	**2013 டிசம்பர் 10**
1.	ஆரம்ப மதிப்பீட்டிற்கிணங்க ரூபா 1151 மில்லியன் ஏற்கனவே ஒதுக்கப் பட்டிருந்தும் "பிலிசறு கருத்திட்டத்தின்" கீழ் நிறைவேற்றப்படவேண்டிய 10 குப்பைகொட்டும் அமைவிடங்கள் 2012 செப்டெம்பர் 11ஆம் திகதியளவிலும் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லை.	கருத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த நிதியை ம.சு.அ. பெற்றுக் கொள்ளவில்லையென்றும் சில பிரதேசங்களில் துப்புரவேற்பாட்டுக் கழிவுகளைக் கொட்டும் அமைவிடங் களைத் தாபிக்க உகந்த காணிகளைப் பெறுவதற்குக் கடினமாக இருந்ததாக CAO/AO கூறினார். குப்பை கொட்டும் அமைவிடங்களைச் செய்து முடிப் பதற்கு அவசியமான தொழில்நுட்பம் இலங்கையில் கிடைக்கக்கூடியதாக இருக்கவில்லையென CAO/AO மேலும் கூறினார். இருப்பினும் அவர் கூறியதைப்போன்று சில கருத் திட்டங்கள் அவ்வேளையில் பூர்த்தி யாக்கப்பட்டிருந்ததுடன் மேலும் 04 குப்பை கொட்டும் அமைவிடங்கள் கொரிய நிதியுடன் நடைமுறைப் படுத்தப்படும். கூட்டிணைத் திட்டத்தில் அவ்வாறான கருத்திட்ட மொன்றை உள்ளடக்குவதற்கு முன்னர் ம.சு.அ. சாத்தியக்கூறு ஆய் வொன்றைச் செய்திருக்கவேண்டும் என்ற அபிப்பிராயத்தைக் கொண்டி ருந்த குழுவானது 2008 முதல் 2012 வரையிலான "பிலிசறு கருத் திட்டத்தின்" செலவீனம் (மூலதனம் மற்றும் மீண்டெழும்) உட்பட விரிவான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு CAO/AO ஐப் பணித்தது.
2.	கொரிய அரசாங்கத்தால் மொத்தமாக ரூபா 37,597,609/= நிதியிடப்பட்ட	ஒரு புலனாய்வை மேற்கொண்டதன் பின்னர் முழுக்கருத்திட்டம்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	தொம்பே திண்மக்கழிவு முகாமைத் துவக் கருத்திட்டத்தில் பின்வரும் முறைகேடுகள் இனங்காணப் பட்டிருந்தன. குறைந்த விலைமனுதாரர்களின் நியாயப்படுத்தல்களைப் பொருட் படுத்தாது, 6ஆம் இடத்திலிருந்த உயர் விலைமனுதாரருக்குக் கேள்விப் பத்திரத்தை ஒப்படைத்ததன் மூலம் ரூபா 19,483,222/= தொகையொன்று மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. 88,648 கனமீற்றர் மண் அகற்றி யமைக்கு ஒப்பந்தக் காரரிடமிருந்து ரூபா 45/=ஐ அறவிடாது கனமீற்றர் ஒன்றுக்கு ரூபா 295/= அவருக்குச் செலுத்தியிருந்தமையால் அதிகார சபைக்கு ரூபா 30,140,320/= இழப்பொன்று ஏற்பட்டிருந்தது.	தொடர்பிலும் விரிவான ஒரு அறிக்கையை குழுவிற்குச் சமர்ப்பிக் குமாறு CAO/AO பணிக்கப்பட்டார்.
3.	"பிலிசறு கருத்திட்டத்தில்" சிரேஷ்ட பொறியியலாளர் மற்றும் பிரதி முகாமையாளர் (மக்கள் தொடர்பு) ஆகிய பதவிகளுக்குத் தகுதிகுறைவான பணியாட்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.	பொதுவாகவுள்ள குறைந்த சம்பள அளவுத்திட்டத்தின் காரணமாகப் பல முயற்சிகளின் பின்னரும் ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கமையப் பொறியியலாளர் ஒருவரை அவர்களால் ஆட்சேர்ப்புச் செய்ய முடியாமற்போனது எனவும் அதனால் சம்பந்தப்பட்ட துறையில் அனுபவத்தைக் கொண்டிருந்த பிரதி முகாமையாளர் (கொள்வனவு) கருத் திட்டப்பணிப்பாளரின் பரிந்துரையின் அடிப்படையில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் சிரேஷ்ட பொறியி யலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டி ருந்தார். விசாரணைத் திகதியிலுள்ள வாறு அவரது சேவை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. அதிகார சபையானது ஆட்சேர்ப்புத்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		திட்டத்தைப் பின்பற்றுவதற்குக் கடமைப்பட்டுள்ளது என்ற அபிப் பிராயத்தைக் கொண்டிருந்த குழு இவ்விடயம் பற்றிய அறிக்கை யொன்றைச் சமர்ப்பிக்குமாறு CAO/AO ஐப் பணித்தது.
4.	களுத்துறைக் கூட்டுப்பசளை நிலையக் கருத்திட்டம் தொடர்பாகப் பின்வரும் குறைபாடுகளைக் குழு அவதானித்தது. கருத்திட்டப்பகுதியிலிருந்து கழிவுப் பொருட்களை அகற்றவும், மண் மற்றும் மணலைக்கொண்டு அப்பகுதியை நிரப்பவும் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 2,961,500/= செலுத்தப்பட்டிருந்தும் அப்பணி நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. 04 உள்ளூராட்சி அதிகாரசபைகளின் கழிவுப்பொருட்களை மீள் சுழற்சிக்கு உட்படுத்தவே ஆரம்பத்தில் இத்தளம் தாபிக்கப்பட்டிருந்தும் இரண்டு (02) உள்ளூராட்சி அதிகாரசபைகளின் கழிவுப் பொருட்களே மீள்சுழற்சிக்கு உட்பட்டுவந்தது. கழிவுநீர் களஞ்சியத் தொட்டிகள் நிர்மாணிப்பதற்கு முன்னர் சுற்றாடல் தாக்க மதிப்பீடொன்று மேற்கொள்ளப் படாமல் இருந்தமையால் கழிவுப் பொருட்களிலிருந்து வெளியேறிய கழிவுநீர் கருத்திட்ட அமைவிடத்திலி ருந்து வழிந்தோடியது.	மேற்படி குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த தாகவும், கூட்டுப்பசளை தயாரிப்பில் மீண்டும் உபயோகிப்பதற்காகக் கழிவுநீர் சேகரிக்கப்பட்டதாகவும் CAO/AO கூறினார். தொழிலாளர் களின் நடைமுறைப் பிரச்சனைகளால் கழிவுநீர் வெளியேற்றப்பட்டிருந்தது. பாரியளவு மருத்துவக் கழிவுகள் அதிகாரசபையின் கருத்திட்ட அமைவிட எல்லைக்கு வெளியில் அமைந்திருந்த பக்கத்து அமைவி டத்தில் கொட்டப்பட்டவண்ணம் காணப்பட்டது என மேலும் அவர் கூறினார். ம.சு.அ. தாபிக்கப்பட்டதன் நோக்கம் அவ்வாறான சுற்றாடல் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கெனவும், ஆகையால் அப்பிரச்சனைகளைக் கவனிப்பது ம.சு.அ. யின் பொறுப்பாகும் எனவும் குழு சுட்டிக்காட்டியது.
5.	சிறியளவிலான கூட்டுப்பசளைத் தளங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 44,984,504/= தொகையொன்று 17	இவ்விடயம் பற்றிய அறிக்கை யொன்றைச் சமர்ப்பிக்குமாறு குழு CAO/AO வைப் பணித்தது.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு வழங்கப்பட்டிருந்தும், அவை 2013 ஆகஸ்ட் வரையிலும் நிர்மாணிக்கப் பட்டிருக்கவில்லை.	
6.	திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்காக 45 உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு ரூபா 103,518,945/-ஐ ம.சு.அ. வழங்கியிருந்தும் அக்கூட்டுப்பசளைத் தளங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. அத்துடன் ம.சு.அ. கருத்திட்டத்தின் திட்டமிடப்பட்ட நோக்கங்களை அடைவதை உறுதி செய்வதற்கான பின்தொடர் நடவடிக் கையை ம.சு.அ. மேற்கொண்டிருக்க வில்லை.	அவ்வுள்ளூர் அதிகாரசபைகளால் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப் பட்டு, சம்பந்தப்பட்ட அறிக்கைகள் ஏற்கனவே கணக்காய்வாளர் தலைமை யதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக CAO/AO கூறினார். அவ்வாறான விடயங்களை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் ஊடாகப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவிற்குச் சமர்ப்பித்தால் முறையான கண்காணிப்பை மேற்கொள்ள முடியுமெனக் குழு ஆலோசனை வழங்கியது. மேற்படி 45 கருத்திட்டங்கள் பற்றிய விரிவான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு CAO/AO பணிக்கப்பட்டார்.
7.	ரத்துபஸ்வெல கையுறை உற்பத்தித் தொழிற்சாலைக்கெதிராகப் பல்வேறு தரப்பினரால் முறையீடுகள் முன்வைக் கப்பட்டிருந்தும், முறையான விசா ரணைகளின்றி 2013ஆம் ஆண்டுவரை சுற்றாடல் சான்றுப்பத்திரம் வழங்கப் பட்டிருந்தது. மேலும், நீர் மனித பாவனைக்கு உகந்த அளவிலான pH பெறு மானத்தைக் கொண்டுள்ளதா என் பதைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு அதிகாரசபை அலுவலர்கள் நீர் மாதிரிகளைச் சேகரிப்பதற்குப் பதிலாகத் தொழிற்சாலை உரிமையாளரால் வழங்கப்பட்ட நீர் மாதிரிகளைப் பரிசோதித்து சுற்றாடல் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.	முதலீட்டுச் சபையின் கீழ்ப் பதிவு செய்யப்பட்டிருந்த கைத்தொழில் களுக்கு ம.சு.அ. யின் ஒருங்கிணை வுடன் சுற்றாடல் சான்றுப்பத்திரங் களை முதலீட்டுச்சபை வழங்கவேண்டி யிருந்ததாகவும், ஆகையால் அத்தகைய கைத்தொழில்கள் தொடர்பான முறையீடுகள் முதலீட்டுச் சபையின் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும் எனவும் CAO/AO கூறினார். மத்திய சுற்றாடல் அதிகார சபை அலுவலர்களினால் சேகரிக்கப்பட்ட நீர் மாதிரிகளின் pH பெறுமானத்தைப் பரிசோதனை செய்வது மத்திய

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	பரிசோதிக்கப்பட்ட நீர் மாதிரிகளின் pH பெறுமானம் 2008 பெப்ரவரி 01ம் திகதிய வர்த்தமானி அறிவித்தலுக் கமைய 3.5 தொடக்கம் 6.5 வரையும் அதேநேரம் கைத்தொழில் கழிவுநீரின் pH பெறுமானம் 6.00 தொடக்கம் 8.5 என்ற அளவினுள் இருக்கவேண்டும் என்றிருந்தபோதிலும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை சுற்றாடல் சான்றுகளை வழங்குவதற்குத் தனது இணக்கத்தைத் தெரிவித்திருந்தது.	சுற்றாடல் அதிகார சபையின் பொறுப்பு என்பதைக் குழு வலியுறுத்தியதோடு, இது தொடர்பில் ஒரு முழுமையான அறிக்கையைக் குழுவுக்குச் சமர்ப்பிக்குமாறு CAO/AO வைப் பணித்தது.
8.	குழாய்க் குடி நீர் மற்றும் கிணற்று நீர் ஆகியவற்றின் pH பெறுமானங் களைக் குழு தனித்தனியாக வினவியது.	குடிப்பதற்கு உகந்த குழாய் நீர் மற்றும் கிணற்று நீர் ஆகியவற்றின் பொருத்தமான pH பெறுமான அளவெல்லைகளை எழுத்துமூலம் குழுவுக்குச் சமர்ப்பிக்கும்படி CAO/AO பணிக்கப்பட்டார்.
	கொழும்புப் பல்கலைக்கழகம் **உயர் கல்வி அமைச்சு**	**2013 டிசம்பர் 11**
1.	2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக் கான ஆண்டறிக்கைகளைப் பாராளு மன்றத்தில் சமர்ப்பித்தல் பற்றிக் குழு வினவியது.	2011 ஆம் ஆண்டுக்கான ஆண்ட றிக்கை ஏற்கனவே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதென CAO கூறினார் .2012 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையைப் பாராளு மன்றத்தில் விரைவாகச் சமர்ப்பிப் பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு CAO/AOவைக் குழு பணித்தது.
2.	பல்கலைக்கழகத்தில் 216 வெற்றி டங்கள் இருந்ததையும் அவற்றில் 136 வெற்றிடங்கள் கல்விசார் தரங்கள் என்பதையும் குழு அவதானித்தது.	2013இல் 41 வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதெனவும் அவற்றில் 32 கல்விசார் தரங்களுக் குரியவை எனவும் CAO/AO கூறினார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	**COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்**
		அக்காலத்தில் பல்கலைக்கழகப் பணியாட்டொகுதியில் 33 பேர் ஓய்வு பெற்றும் சேவையை விட்டு விலகியும் சென்றனர் என அவர் மேலும் கூறினார். மேலும் விசாரித்தபோது தற்போது நடைமுறையிலுள்ள குறைந்த சம்பள அளவுதிட்டம் காரணமாக நிர்வாக பணியாட்டொகுதி யினரை ஆட்சேர்ப்புச் செய்வதில் பல்கலைக்கழகத்திற்குப் பிரச்சனைகள் இருந்ததாகவும் தற்போது நடை முறையிலுள்ள சம்பள அளவுத்திட்டத் துக்கு ஏற்றவாறு நிர்வாகப் பணியாட்டொகுதியினரின் கல்வித் தகைமைகளைத் திருத்துவதற்குத் திட்டமிட்டிருந்ததாகவும் CAO/AO கூறினார்.
3.	ஒப்பந்தத்தை மீறிய விரிவுரையாளர் களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய தொகைகளின் தற்போதைய நிலை பற்றியும், ஒப்பந்தத்தை மீறியவர்களின் சேமலாப நிதியிலிருந்து பணத்தை அறவிடக்கூடிய வகையில் ஒப்பந்தத் தில் திருத்தங்களைச் செய்யப் பல்கலைக்கழகம் தேவையான நடவடிக்கை எடுத்திருந்ததா என் பதையும் குழு விசாரித்தது.	நிலுவைகளைச் செலுத்தத் தவறியவர் களின் அனுமதியின்றி அவர்களின் சேமலாப நிதியிலிருந்து நிலுவைகளை மீளப்பெற பல்கலைக்கழக மானியங் கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரங் களை வழங்குவதற்கான திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தன என்று CAO/AO கூறினார். நீதிமன்ற வழக்குகள் தொடர்பாகப் பல்கலைக்கழகத்திற்கு ஆதரவாக ஒரு நீதிமன்றத் தீர்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், அவர் கள் அந்நீதிமன்ற உத்தரவை அமுல்ப் படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் CAO/AO கூறினார். தவறிழைத்த ஏனையவர்களுக்கு அந் நீதிமன்ற உத்தரவை மேற்கோள் காட்டிக் கோரிக்கைக் கடிதங்களை அனுப்ப நடவடிக்கை எடுக்கும்படி CAO/AO பணிக்கப்பட்டார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
4.	2011ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வெளியான 45ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் மூதவையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆராய்ச்சிக் குழுவின் அனுமதியைப் பெறாமல் ரூபாய் 58,366,090/- ஆராய்ச்சிப்படி 502 விரிவுரையாளர்களுக்கு எவ்வாறு செலுத்தப்பட்டதெனக் குழு வினவியது.	பல்கலைக்கழகத்தில் பல பீடங்கள் இருப்பதன் காரணத்தால், ஆராய்ச்சி அறிக்கைகள் அனுமதிக்காகக் குறிப்பிட்ட அந்தந்தப் பீடங்களின் சபைகளுக்கு அனுப்பப்பட்டன. அதன் பின்னர் அவ்வறிக்கைகள் மூதவையிடம் ஒப்படைக்கப்பட்டன என CAO/AO கூறினார். அத்தகைய அங்கீகாரம் வழங்குவதற்காகக் குறிப்பிட்ட பீடச் சபைகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளவிடத்துக் குறித்த தீர்மானத்தைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புமாறு CAO/AO பணிக்கப்பட்டார்.
5.	ரூபாய் 4,847,440/- செலுத்தப் பட்டிருந்த போதும் 100 விரிவுரை யாளர்களில் 44 பேர் கணக்காய் விற்காகத் தொடர்புடைய ஆய்வுத் தகவல்களைச் சமர்ப்பித்திருக்க வில்லை என்பதை ஒரு மாதிரிச் சோதனை மூலம் கண்டறியப் பட்டதைக் குழு அவதானித்தது.	அவ்விடயம் அக்காலகட்டத்தில் திருத்தப்பட்டிருந்ததென CAO/AO கூறினார்.
6.	ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடாத 07 விரிவுரையாளர்களுக்கு உதவித் தொகையாக ரூபாய் 524,571/- எவ்வாறு செலுத்தப்பட்டதெனக் குழு வினவியது.	கல்வி நிர்வாகிகளுக்கும் ஆராய்ச்சி உதவித்தொகை வழங்கப்பட்டதென CAO/AO கூறினார். ஆராய்ச்சி உதவித்தொகை பெறத் தகுதியானவர் கள் யார் என்பதைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு விவரிக்குமாறு அவர் பணிக்கப்பட்டார்.
7.	பல்கலைக்கழகத் தாபனக் கோவைக்கு மாறாக 04 ஓய்வுபெற்ற கல்விசார் மற்றும் கல்விசாரா அலுவலர்கள் ஒரு வருட காலத்திற்கு அதிகமாக மீண்டும் சேவைக்கமர்த்தப்பட்டிருந்ததைக் குழு	அப்பதவிகள் மிக முக்கியமானவை என்பதாலும் அவற்றுக்குப் பொருத்த மானவர்களைச் சேர்த்துக்கொள்ளுதல் கடினமென்பதாலும் அவர்களின்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	அவதானித்தது. அத்தகைய மீள் நியமனம் அனுமதிக்கப்படாத ஒன்றாகும்.	சேவை நீடிக்கப்பட்டதென CAO/AO கூறினார். ஏற்கனவே பணியாட் டொகுதியில் 03 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர் எனவும், மேலும் 02 அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு ஏற்கனவே விளம்பரம் செய்யப்பட்டுள்ளதாகவும் புதிய நியமனங்கள் வழங்கப்பட்டவுடன் மேற்குறிப்பிட்ட அலுவலர்களின் சேவை நிறுத்தப்படுமெனவும் அவர் மேலும் கூறினார். எவரேனும் அலுவலரின் சேவையைப் பல்கலைக் கழகம் நீடிக்க வேண்டுமாயின் அதற்கான காரணக்கைத் தெரிவித்து ஓர் அமைச்சரவை அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்தினைக் குழு கொண்டிருந்தது.
8.	பல்கலைக்கழகத்தின் சில பீடங்களும் திணைக்களங்களும் பல்கலைக்கழகச் சட்டம் மற்றும் திறைசேரிச் சுற்று நிருபங்கள் ஆகியவற்றை மீறித் தனியான நிதியங்களை உருவாக்கியி ருந்ததையும் அத்தகைய நிதியங்களில் ரூபாய் 119,069,767/- திரண்டிருந் ததையும் குழு அவதானித்தது.	அவர்களின் வசதிக்காகத் தனித் தனியான பேரேட்டுக் கணக்குகளைத் தயாரித்திருந்ததாகவும் அந்நிதியங் களின் வருமான மற்றும் செலவீனக் கூற்றுகள் கணக்காய்விற்காகச் சமர்ப் பிக்கப்படிருந்தன எனவும் CAO/AO கூறினார். அத்தகைய நிதியங்களின் வருமானங்களும் செலவுகளும் இறுதிக் கணக்கில் காட்டப்படவில்லை யெனவும், பல்கலைக்கழகச் சட்டத்தின் 99(1) ஆம் பந்தியின் பிரகாரம் பல்கலைக்கழகங்கள் செயற்பட்டிருக்க வேண்டும் எனவும் கணக்காய்வாளர் தலைமையதிபதி சுட்டிக்காட்டினார். பல்கலைக்கழகங்களின் நலனுக்காகப் பணத்தை வைத்திருக்க வேண்டியதன் காரணமாக நாடு பூராகவுமுள்ள பல்கலைக்கழகங்களில் தேவையான போது தனியான நிதியங்களை உருவாக்குவதற்கு அவர்களுக்குத் திறைசேரி அனுமதியைப் பெறமுடியுமா என்பது தொடர்பாக ப.மா.ஆ. தவிசாளருக்குத் தெரிந்துகொள்ள வேண்டியிருந்தது. பல்கலைக்கழக

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		நிர்வாகங்கள் தனியான நிதியத்தினை ஏற்படுத்துவதற்கான தேவையினைக் குறிப்பிட்டு ஓர் அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பிக்க முடியும் என்ற கருத்தினையும் அத்தகைய நிதியங் களின் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும் என்ற கருத்தினையும் குழு கொண்டிருந்தது.
9.	தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் அந்தந்தத் துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற நபர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் எனக் கொள்வனவு வழிகாட்டல்களில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்நோக்கத்துக்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் அத்தகைய சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்கள் எவருமின்றிப் புதிய கலைக்கூடத்தின் பழுதுபார்த்தல் மற்றும் அபிவிருத்திக்காக ரூபாய் 20,842,673/- செலவிடப்பட்டிருந் ததைக் குழு அவதானித்தது.	அந்த நேரத்தில் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டிருந்த பொறியிய லாளர் தனது பதவியை ராஜினாமாச் செய்திருந்ததாலும் அவசர தேவை நிலவியதாலும் ஆலோசனைச் சேவை CECBக்கு வழங்கப்பட்டிருந்தது என CAO/AO கூறினார். ஏனைய பல் கலைக்கழகங்களில் பொறியியலாளர் கள் இருந்ததனாலும் அவர்களில் ஒருவர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவுக்கு நியமிக்கப்பட்டிருக்கலாம் என்பதனாலும் பல்கலைக்கழக அலு வலர்களினால் வழங்கப்பட்ட விளக் கத்தினைக் குழு ஏற்றுக்கொள்ள வில்லை.
10.	இரண்டு அலுவலர்கள் மொத்தமாக ரூபாய் 408,511/- ஐ முற்பணமாகப் பெற்றிருந்ததையும் பணத்தை மீளப் பெறுவதற்கு 2013 நவம்பர் 01ஆம் திகதி வரையிலும்கூட எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருந்ததையும் குழு அவதானித்தது.	அலுவலர் ஒருவர் ஏற்கனவே ரூபாய் 350,000/- முற்பணத்தைச் செலுத்தித் தீர்த்துள்ளதாகவும் மற்றைய அலுவலர் தனது ஆராய்ச்சி நிறைவு பெறாத காரணத்தால் ஆண்டின் இறுதிக்குள் அதனைச் செலுத்திக் கடனைத் தீர்ப்பதற்கு ஒப்புக் கொண்டுள் ளதாகவும் CAO/AO கூறினார். அவர் வழங்கப்பட்ட திகதிக்கு முன் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையைச் செலுத்தத் தவறினால் அதனை அவரது சம்பளத்திலிருந்து அறவிடுவதற்குக் கடந்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		அவர்கள் முடிவு செய்ததாக CAO/AO மேலும் கூறினார்.
11.	2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், சிகிச்சை மருத்துவத் திணைக்களத் திற்காக ரூபாய் 47,644,945/- பெறுமதியான ஒரு கட்டிட நிர்மாணத் திற்கான ஒப்பந்தத்தைத் தனியார் நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டி ருந்ததைக் குழு அவதானித்தது. ஒப்பந்தத்தின் படி 18 மாதங்களுக்குள் முடிக்கப்பட வேண்டிய நிர்மாணப் பணிகள் 8 ஆண்டுகளுக்குப் பின்னரும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன், 2013 மார்ச் மாதமளவில் பல்கலைக்கழகத்திற்கு மேலதிகமாக ரூபாய் 92,353,867/- செலவு ஏற்பட்டுள்ளது. இது ஆரம்பப் பெறுமதியிலும் பார்க்க 93.8 சதவீதத்திற்கும் அதிகமானதாகும்.	இந்த ஒப்பந்தம் ஓர் அமைச்சரவைக் கொள்வனவுக் குழுவினால் மிகக் குறைந்த கேள்விப் பத்திரதாரருக்கே வழங்கப்பட்டது என CAO/AO கூறினார். நிர்மாணப் பணிகள் பரிசீலனைத் தினத்தன்று நிறைவு பெற்றிருந்ததெனவும் அத்துடன் 2011ஆம் ஆண்டிலிருந்து விரிவுரைகள், பரீட்சைகள் ஆகியவற்றை நடத்துவதற் காக இக்கட்டிடம் பயன்படுத்தப் படுகிறது எனவும் அவர் மேலும் கூறினார்.
12.	ரூபாய் 7,227,023/- செலவில் வாங்கப்பட்ட கதிரைகள் உடைக்கப் பட்டிருந்தன எனக் குழு குறிப்பிட்டது.	அந்தக் கதிரைகளைப் பழுது பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்ததாக CAO/AO கூறினார்.
13.	500 மாணவர்களுக்கு வசதிகளை வழங்கக் கூடிய தெல்லவளவில் அமைந்துள்ள ரூ. 22 மில்லியன் செலவில் புனரமைக்கப்பட்ட விடுதி ஏன் 2010 ஆம் ஆண்டிலிருந்து மூடப்பட்டுள்ளது எனக் குழு வினவியது.	சில பிரச்சனைகள் காரணமாக இந்த விடுதி 02 ஆண்டுகளுக்கு மூடப்பட்டது எனவும், 2015 ஜனவரியில் சுமார் 600 மாணவர்களுக்கு விடுதி வசதிகளைக் கொடுக்கக் கூடிய வகையில் அது தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது எனவும் CAO/AO கூறினார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம் **சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு**	**2013 டிசம்பர் 12**
1.	2011.12.31இல் உள்ளவாறு ரூபாய் 15,167,885 / - மற்றும் ரூபாய் 6,071,830/- ஆகியன முறையே தனியார்துறை, அரசதுறை கடன்பட்டோர் நிலுவைகளாக இருந்தன.	நிலுவைகளை மீட்கத் துரித நடவடிக்கை எடுக்கும்படி CAO/AO பணிக்கப்பட்டார்.
2.	நிதிச் சட்டத்திற்கு மாறாக பணியகம் ரூபாய் 516,421,790/-ஐ நிரந்தர வைப்பில் முதலீடு செய்திருந்தது.	அரச வங்கிகளில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும்படி குழு CAO/AO வைப் பணித்தது.
	அரச ஈட்டு, முதலீட்டு வங்கி **நிதி திட்டமிடல் அமைச்சு**	**2013 டிசம்பர் 13**
1.	2013-2017 காலப்பகுதிக்கான கூட்டாண்மைத் திட்டம் தயாரிக்கப் பட்டிருந்தபோதும் 2012ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுத் திட்டத்தின் பின்வரும் இலக்குகள் அடையப் பட்டிருக்கவில்லை என்பதைக் குழு அவதானித்தது. கடன்கள் மற்றும் முற்பணங்களின் வருடாந்த வளர்ச்சி வீதம், ATM இயந்திரத்தை அறிமுகப் படுத்துதல், கடன் அட்டை முறைமை மற்றும் இணையத்தளத்தின் ஊடாக வங்கி வசதிகள்.	செயற்பாடற்ற கடன் விகிதம் அதிகரித்திருந்ததனால் வங்கி கடன் வழங்கும்போது மிகவும் கவனமாக இருந்ததென CAO/AO கூறினார். எனினும், வருடாந்தக் கடன் வளர்ச்சி வீதத்தை 13% வரை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததாக அவர் மேலும் கூறினார். மத்திய வங்கியால் பொதுவான வாயில் அமைப்பு அறிமுகப்படுத்தப்படும் வரை ATM முறைமையின் அறிமுகம் தாமதப்படுத்தப்பட்டிருந்தது. கடன் அட்டை முறைமை அறிமுகமும் ATM முறைமையின் அறிமுகமும் சமகாலத்தில் மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		அதன்படி கூட்டாண்மைத் திட்டத்தைத் தயார் செய்ய நடவடிக்கை எடுக்கும்படி குழு CAO/AOவைப் பணித்தது.
2.	2012ஆம் ஆண்டுக்கான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை எனக் குழு குறிப்பிட்டது.	கணக்காய்வாளர் தலைமையதிபதி சுட்டிக்காட்டியவாறு, 2012ஆம் ஆண்டு வங்கி அதிகமாக எதையும் கொள்வனவு செய்யவில்லை எனவும், எதிர்காலத்தில் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்படும் எனவும் CAO/AO கூறினார்.
3.	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 99 வெற்றிடங்கள் இருந்ததைக் குழு அவதானித்தது.	மேலும் வங்கிக் கிளைகளைத் தீவு முழுவதும் நிறுவ முடிவு செய்துள்ள தெனவும் அந்நடவடிக்கைகளுக்கு ஏற்றவாறு 50 வங்கி உதவியாளர்கள் மற்றும் 15 முகாமைத்துவப் பயிற்சியாளர்களைச் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் CAO/AO கூறினார். அடுத்த ஆண்டளவில் வங்கியால் அனைத்து வெற்றிடங்களையும் நிரப்ப முடியுமென CAO/AO மேலும் கூறினார்.
4.	முழுமையாகத் தானியங்கி மைய வங்கி முறைமையை நிறுவுதலின் தற் போதைய நிலை பற்றிக் குழு வினவியது.	அமைச்சு மட்டத்தில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்று நியமிக்கப் பட்டதாகவும், அனைத்துக் கூறுவிலை ஆவணங்களும் அவர்களால் மீளாய்வு செய்யப்பட்டதெனவும், மேலதிக நடவடிக்கை எடுப்பதற்காக ஒரு கொள்வனவுக் குழுவை நியமிக்குமாறு அமைச்சைக் கேட்டுக்கொண்ட தாகவும் CAO/AO கூறினார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
5.	ஏனைய வங்கிகளுடன் ஒப்பிடும் போது, அ.ஈ.மு. வங்கியின் செயற்பாடற்ற கடன் விகிதம் அதிகமாக இருந்ததைக் குழு அவதானித்தது.	சிறப்புக் கடன் அறவீட்டுப் பிரிவொன்றையும் சட்ட வலுவூட்டல் பிரிவொன்றையும் உருவாக்கியதன் மூலம் வங்கியால் ஓரளவிற்கு செயற்பாடற்ற கடன் விகிதத்தை குறைக்கக் கூடியதாக இருந்தது என CAO/AO கூறினார். 2014ஆம் ஆண்டில் வங்கி கடன் அறவீட்டுக்கு முன்னுரிமை கொடுக்க முடிவு செய்துள்ளதென்று CAO/AO மேலும் கூறினார்.
6.	2013 செப்ரெம்பரில் உள்ளவாறு ஊழியர் சேமலாப நிதிக் கடன்களில் செயற்பாடற்ற கடன் விகிதம் 60% வரை அதிகரித்திருந்தது எனக் குழு குறிப்பிட்டது.	2011ஆம் ஆண்டு ஆரம்பத்தில் ஊழியர் சேமலாப நிதிக் கடன்களில் செயற் பாடற்ற கடன் விகிதம் 66% ஆகும் எனவும், அந்தக் கடன்களை அறவிட வங்கி பல்வேறு முறைகளைக் கையாண்டது எனவும் CAO/AO கூறினார். வங்கி இந்தப் பிரச்சினையை மத்திய வங்கியுடன் கலந்துரையாடியதாகவும் ஊழியர் சேமலாப நிதிக் கடன்கள் வழங்கும் எண்ணிக்கையைக் குறைத்தது எனவும் CAO/AO மேலும் கூறினார்.
7.	உழைக்கும்போதே செலுத்தும் வரி ரூபாய் 8,649,997/- திறைசேரியின் அனுமதியைப் பெறாமல் ஊழியர்களின் சார்பில் வங்கி மூலமாக எவ்வாறு செலுத்தப்பட்டதெனக் குழு வினவியது.	அது வங்கி மற்றும் ஊழியர்களுக்கு இடையேயான உடன்பாட்டின்படி செய்யப்பட்டுள்ளதென CAO/AO கூறினார். உழைக்கும்போதே செலுத்தும் வரியை வங்கி செலுத்தியமை சட்டத்திற்கு மாறானது எனக் குழு சுட்டிக்காட்டியது.
8.	2008ஆம் ஆண்டு ரூபாய் 9 மில்லியன் கடனை வங்கி வழங்கியிருந்ததையும், 2013.09.10 அன்று உள்ளவாறு மொத்த நிலுவைத் தொகை ரூபா 19.6	கடனாளிக்குச் சொந்தமான சொத்து ஏற்கனவே வங்கியினால் சுவீகரிக்கப் பட்டதெனவும் அதேசமயம், குறைந்த சந்தைப்பெறுமதி காரணமாக அதனை

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	மில்லியனாக இருந்ததையும் குழு அவதானித்தது.	விற்பதன்மூலம் மொத்த நிலுவைத் தொகையையும் பெறுவதில் வங்கிக்குப் பிரச்சினை இருந்ததாகவும், இதன் காரணமாக ஏற்பட்ட இழப்பை ஓரளவிற்குக் குறைக்கப் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் தற்போதைய சந்தைப் பெறுமதிக்கு அதனை விற்க முடிவு செய்ததாகவும் CAO/AO கூறினார்.
9.	2012ஆம் ஆண்டில் வங்கியினால் புதிய கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப் பட்டிருந்தபோதிலும் புதிய தயாரிப்பு களை அறிமுகப்படுத்தக்கூடியவாறு சட்டம் திருத்தப்பட்டிருக்கவில்லை.	சுயதொழில் புரிவோர் மற்றும் அறநெறிப் பாடசாலைப் பிள்ளைகள் ஆகியோருக்கு வங்கி புதிய சேமிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தியிருந் ததாகவும், புறநகர்ப் பகுதி மக்களுக்கு அவர்களின் அவசரத் தேவைகளுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதால் தங்க அடகுத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தத் திறைசேரியுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்ததாகவும் CAO/AO கூறினார். வங்கி அத்தகைய கடன் திட்டங்களை அறிமுகப்படுத்து வதற்கு முன்னர், சட்டத்தைத் திருத்த வேண்டியிருந்தது என்று அவர் மேலும் கூறினார். மக்களின் திட்டங்களை ஊக்குவிக்க அடகுத் திட்டங்களுக்குப் பதிலாக மாற்றுக் கடன் திட்டங்களை முன்னெடுத்தல் வங்கியின் கடமை யென்றும், அது நாட்டின் அபிவிருத் திக்கு நல்லதொரு பங்களிப்பாக இருக்குமென்றும் திறைசேரி பிரதிச் செயலாளர் தெரிவித்தார்.
10.	ரூபாய் 236,278,296/- ஆக இருந்த பொருத்தமற்ற கடன் நிலுவை தற்போது ரூபாய் 53 மில்லியனாகக் குறைக்கப்பட்டிருந்ததை அவதானித்த குழு அதனை மேலும் குறைப்பதற்காக	பரிசீலனைத் தினத்தன்று பொருத்த மற்ற கடன் நிலுவை ரூபாய் 22 மில்லியனாக இருந்ததெனவும், இணக்கம் செய்து இந்த மீதியைக் குறைக்க நடவடிக்கை

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	வங்கி எடுத்த நடவடிக்கைகள் யாவையென வினவியது.	எடுக்கப்படுமெனவும் CAO/AO கூறினார்.
	எச்.டி.எப்.சி. வங்கி நிதி திட்டமிடல் அமைச்சு	**2013 டிசம்பர் 17**
1.	மாணிக்கவத்த வீடமைப்புத் திட்டம் தொடர்பிலான நிலைமையை விளக்கிய AO இந்த வீட்டுத் திட்டம் எச்.டி.எப்.சி வங்கியிடம் கடனைப் பெற்றுத் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்டதென்றும் அத்துடன் அவர்களுக்குக் கடனைச் செலுத்த இயலாததாலும் திட்டத்தை நிறை வேற்ற முடியாததாலும் ஒரு அறுதியுறுதியின் மூலமாக வீட்டுத் திட்டம் உள்ளிட்ட சொத்துக்கள் வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டது எனக் கூறினார். அப்போது வங்கி 16 வீடுகளை விற்பனை செய்திருந்த தெனவும் 06 வீடுகளுக்கான முற்பணத்தினைப் பெற்றிருந்த தெனவும் AO மேலும் கூறினார். அந்த வீடுகளை வாங்க விரும்பும் வாடிக்கை யாளர்களுக்கு வங்கி தனிப்பட்ட கடன்களை வழங்குகிறது என்பதையும் AO வலியுறுத்தினார்.	ஐந்தொகையில் சொத்தின் பெறுமதி ரூபாய் 179 மில்லியன் ஆகக் காட்டப்பட்டிருந்தது எனக் கணக்காய்வாளர் தலைமையதிபதி சுட்டிக்காட்டினார். 2013ஆம் ஆண்டுக்கான கணக்குகளைத் தயாரிப்பதற்கு முன் பிரதான விலை மதிப்பீட்டாளரிடமிருந்து ஒரு மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்ளுமாறு CAO/AOவைக் குழு பணித்தது.
2.	இலங்கை மின்சார சபையால் செலுத்தப்பட்ட ரூபாய் 450 மில்லியன் பெறுமதியான ஒரு நிலையான வைப்புக்குச் சாதாரண வட்டி வீதமான 18% இல் இருந்து விலகி 22.2% வட்டியைச் செலுத்த வங்கி ஒப்புக்கொண்டிருந்ததையும் இதன் விளைவாக வங்கிக்கு ரூபாய் 69 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது	அந்நேரத்தில் வங்கிக்கு நீண்ட கால நிதித்தேவை இருந்ததாலும் வைப்புகள் முதிர்ச்சி அடைந்திருந்ததாலும் மற்றும் வைப்புப் பணத்தைத் தொடர்ந்தும் வங்கியில் வைத்திருக்க வேண்டியிருந்ததாலும் நிர்வாகம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் வட்டி விகிதத்தினை 22.2% அதிகரிக்க முடிவு செய்தது என விடயத்தை விளக்கிய

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	என்பதையும் குழு குறிப்பிட்டது.	AO கூறினார். அமைச்சு மட்டத்தில் ஒரு விசாரணை நடத்தி ஒரு மாத காலத்திற்குள் குழுவுக்கு அறிக்கை யொன்றைச் சமர்ப்பிக்கும்படி திறைசேரித் துணைச் செயலாளரைக் குழு பணித்தது.
3.	2013.09.30 அன்று உள்ளவாறு மின்சார சபையின் ஊழியர் சேமலாப நிதியத்தின் மொத்த வைப்புகள் ரூபாய் 1,900 மில்லியனாகவும் வட்டி வீதம் 18 சதவீதமாகவும் இருந்த அதேசமயம் தற்போதைய வைப்பு வருமானம் 15.74% மாக இருந்ததுடன், இந்த வைப்பு வங்கியின் மொத்த வைப்பின் 11% பிரதிநிதித்துவப்படுத்துவதைக் குழு குறிப்பிட்டது.	தற்போது வட்டி வீதம் 11% முதல் 12% வரை குறைந்திருந்த போதிலும் ஊழியர் சேமலாப நிதி 17% முதல் 18% வரையான வட்டி வீதத்தில் 2013 ஜனவரியில் மீண்டும் வைப்புச் செய்யப்பட்டதென AO கூறினார். 2014, ஜனவரியில் அவ்வைப்புகள் முதிர்ச்சியடையும் எனவும் மின்சார சபை மீண்டும் வைப்புச் செய்ய வேண்டுமாயின், அவர்கள் நடைமுறை யிலுள்ள வட்டி வீதத்திற்கே பணத்தை முதலீடு செய்ய வேண்டும் எனவும், அத்துடன் மின்சார சபை வைப்பை மீளப்பெற முடிவுசெய்தாலும் கூட, அது வங்கியைப் பாதிக்காது எனவும் அவர் மேலும் கூறினார்.
4.	வருடாந்த மீளாய்வுக் கட்டணம் என்னும் புதியதொரு வருவாய் மூலத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் 2012 டிசம்பர் 31 ஆம் திகதியிலிருந்து 2013 செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை வங்கியின் இலாபம் ரூபாய் 2,452,167/-இலிருந்து ரூபாய் 158,948,000/- வரை அதிகரிக்கப் பட்டிருந்தது. 2013.09.30ஆம் திகதி யில் உள்ளவாறு ரூபாய் 146,690,412/- மொத்த வருமானம் இந்தப் புதிய கட்டண அறிமுகத்தின் மூலமாகச் சேகரிக்கப்பட்ட புதிய வருமானக் கணக்கில் கொள்ளப்பட்ட போதிலும் அந்தத் தொகை வங்கியினால்	எச்.டி.எப்.சி வங்கி மத்திய வங்கியுடன் கலந்தாலோசித்ததன் பின்னர் இந்த வருடாந்த மீளாய்வுக் கட்டண முறைமையை அறிமுகப்படுத்தியது என்று AO பிரச்சனையை விளக்கிக் கூறுகையில் தெரிவித்தார். எச்.டி.எப்.சி வங்கி அதிக இலாபங் களைக் காட்டாத போதிலும் அவர்கள் வங்கிச் செயற்பாட்டில் ஒரு வருமானத்தைக் கொண்டிருந்தனர் என்று அவர் மேலும் கூறினார். மேலும் விசாரித்த போது, 2 ஆண்டுக் கடன் காலத் தவணைகளில் வருடாந்த மீளாய்வுக் கட்டணம் ஒருமுறை மட்டுமே கழிக்கப்படும் என்று

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	குறைக்கப்படாதிருந்ததைக் குழு அவதானித்தது.	AO கூறினார்.
5.	வங்கி ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை யிலான வைப்பாளர்களில் தங்கி யுள்ளது என்பதைக் குழு புரிந்து கொண்டது. 2012.12.31 அன்று உள்ளவாறு மொத்த வாடிக்கையாளர் வைப்புக்களில், 47.29%ற்கு அதிக மானவை 20 வைப்பாளர்களுக்குச் சொந்தமாக இருந்தது. இந்நிலைமை வங்கியின் செயற்பாட்டை வெகுவாகப் பாதிக்கும்.	ஆய்வுத் திகதியன்று நிலைமை மாற்றப்பட்டிருந்தது. 42% ஆனவை 20 வைப்பாளர்களுக்குச் சொந்த மாகவும் மிகுதி 58% சில்லறை வைப்பாளர்களுக்குச் சொந்தமாகவும் இருந்தது என AO கூறினார்.
6.	வங்கியால் மோசடியான ஆவணங் களின் மீது வழங்கப்பட்ட ரூபாய் 1.8 மில்லியன் பெறுமதியான செயற் பாடற்ற கடன் என வகைப்படுத்தப் பட்ட ஒரு கடன், 1.00 ரூபாய் மீதியுடன் எஞ்சிய தொகை பதிவழிக் கப்பட்டிருந்ததையும் எச்.டி.எப்.சி வங்கியின் பணியாட்டொகுதி உறுப்பினர் ஒருவர் தனது சொந்தப் பணத்திலிருந்து ஒரு ரூபாவை வைப்பிலிட்டு அக்கடன் கணக்கை மூடியிருந்ததையும் குழு அவதானித்தது.	புதிதாக நியமிக்கப்பட்ட பணியாட் டொகுதி உறுப்பினர் ஒருவர் நடைமுறை தெரியாமல் கணக்கை மூடியதாகவும், பிழை கண்டறியப் பட்டதன் பின்னர், ஒரு ரூபாவை மீண்டும் வைப்பிலிட்டு அக்கணக்கைத் தொடர்ந்தும் செயற்பாடற்ற கடனாகத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டதெனவும் AO கூறினார். தொடர்ந்தும் விசாரணையின் போது மோசடிகள் புலனாய்வுப் பணியகத்தில் ஒரு புகார் தாக்கல் செய்யப்பட்டு விசாரணை இன்னும் தொடர்கிறது எனவும் AO கூறினார்.
7.	2012.12.31. அன்று உள்ளவாறு வங்கியின் செயற்பாடற்ற கடன் விகிதம் 20.20%ஆக இருந்துள்ளதுடன், 2012 ஆம் ஆண்டு வங்கித் துறையின் செயற்பாடற்ற கடன் வீதம் சராசரியாக 6.09% என்பதையும் குழு அவதானித்தது.	ஊழியர் சேமலாப நிதிக் கடன்களையும் ஏனைய அனைத்துக் கடன்களையும் அறவிடுவதற்கு வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது என AO கூறினார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
8.	உண்மையான பங்கு வழங்கல் ஊழியர் பங்கு விருப்புத் திட்டத்தின் (ESOP) கீழ் மேற்கொள்ளப்படாத போதிலும், ரூபாய் 49,842,936/- பெறுமதியான மிகைப் பங்கு மூலதனம் மற்றும் ஏனைய சொத்துகள் ஏனைய சொத்துகளின் கீழ் ஒரு தனியார் நிறுவனத்தின் பெயரில் கணக்கிடப் பட்டிருந்தன என்பதைக் குழு வெளிப் படுத்தியது.	பங்குகளின் அதிக விலை காரணமாக அவை ஊழியர்களினால் கொள்வனவு செய்யப்படவில்லை எனவும், வங்கி நம்பிக்கைப் பொறுப்பு உறுதியை மாற்றுவதன் மூலம் பங்குகளைக் கொள்வனவு செய்ய ஒவ்வோர் பணியாளர் குழு உறுப்பினருக்கும் ஒரு கடன் வழங்க முடிவு செய்ததெனவும் இவ்விடயம் 2014 ஜனவரி மாத மளவில் தீர்க்கப்படும் எனவும் AO நிலைமையை விளக்கிக் கூறினார்.
9.	வங்கி ஒரு சிறந்த மதிப்பீட்டைச் செய்யாது ரூபாய் 01 பில்லியனை வணிக ஆவணங்களிலும் ரூபாய் 2 பில்லியனை நிரந்தர வைப்பிலும் ஏன் முதலீடு செய்தது எனக் குழு விசாரித்தது.	அப்போது அனைத்து வைப்புகளும் புதிய வீதங்களின் கீழ் முதலீடு செய்யப்பட்டிருந்தது என்றும், அவ் வேளையில் ரூபாய் 400 மில்லியன் பெறுமதியான வணிக ஆவணங்கள் மட்டுமே கிடைக்கக்கூடியதாக இருந்தன என்றும், அவையும் 2014 பெப்ரவரியில் முதிர்ச்சியடையு மென்றும் AO கூறினார். வணிக ஆவணங்களில் முதலீடு செய்யும்போது சிறந்த வாய்ப்புகளைப் பெறக் கூடியதாக இருக்கும் என அவர் மேலும் வலியுறுத்தினார்.
10.	சிறப்புப் பணிக்கொடைக் கொடுப் பனவு வழங்குவது தொடர்பில் வங்கிக் கணக்குகளில் எந்த ஏற்பாடும் செய்யப்படாத போதும் 2007 ஆம் ஆண்டு 15 வருட அல்லது அதற்கு மேற்பட்ட சேவைக் காலத்தை நிறைவு செய்த ஊழியர்களுக்கு வங்கியினால் எவ்வாறு ஒரு சிறப்புப் பணிக்கொடை வழங்கப்பட்டிருந்தது எனக் குழு விசாரித்தது.	ஓர் ஆண்டில் ஒன்று அல்லது இரண்டு பணியாட்டொகுதி உறுப்பினர்கள் மட்டும் ஓய்வு பெறுவர் எனவும் சிறப்புப் பணிக்கொடைப் பணம் தொடர்பாக ஒரு காப்பீட்டுக் கணிப்பாளர் மூலம் ஒரு மதிப்பீட்டைப் பெற்றதன் பின்னர், 2014 ஆம் ஆண்டிலிருந்து இதற்கான ஏற் பாட்டைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் AO கூறினார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	தேசியக் கல்வி நிறுவகம் **கல்வி அமைச்சு**	**2014 ஜனவரி 23**
1.	652 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 181 வெற்றிடங்கள் இருந்துள்ளன. அவற்றில் பெரும்பாலானவை கல்விசார் தரங்களிலானவையாக இருந்துள்ளன.	2011 ஆம் ஆண்டு நிறுவன விளக்கப்படம் மற்றும் புதிய ஆட்சேர்ப்புத் திட்டம் ஆகியன அங்கீகரிக்கப்பட்டதெனவும் முதல் வருடத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 50% மானவர்களுக்கு மட்டுமே சம்பளத்திற்கான நிதியை விடுவிக்கத் திறைசேரி ஒப்புக் கொண்டுள்ளது. 2014 ஒக்டோபருக்குப் பின்னரே ஏனையோர் நியமிக்கப் படுவர்.
2.	சிரேஷ்ட விரிவுரையாளர்களின் ஆட் சேர்ப்பு முறைமை பற்றிக் குழு கலந்துரையாடியதுடன் ஏற்கனவே ஆசிரியர் கல்விச் சேவை அல்லது தொடர்புடைய சேவைகளில் சேவை யாற்றுபவர்களிலிருந்து சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிக்குப் பணியாளர் களை ஆட்சேர்ப்புச் செய்வது சிறந்தது எனும் கருத்தை அது கொண்டிருந்தது.	பெரும்பாலானவர்கள் ஆசிரியர் கல்விச் சேவையிலிருந்தும் ஓய்வு பெற்ற அல்லது பதவி உயர்வு பெற்ற அதிபர்களிலிருந்தும் மற்றும் வகுப்புச் சித்தியுடன் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர்களிலிருந்து நேரடியாகவும் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் என CAO/AO கூறினார். ஆசிரியர்கள், அதிபர் சேவை தரங்கள் அடங்கலாகத் தொடர்பான துறையில் உள்ளவர்களின் சம்பள அளவுத் திட்டங்கள் NIEயில் உள்ள விரிவுரையாளர்களின் சம்பள அளவுத் திட்டத்தை விட அதிகமாக இருந்ததன் காரணமாக அத்தகைய தரங்களிலி ருந்து பணியாட்டொகுதிக்கு ஆட்சேர்ப்புச் செய்வது ஒரு பிரச்சனை என்று தெரிவித்தார். NIE கல்விசார் பணியாட்டொகுதியினரின் சம்பளம் குறைந்தது ஆசிரியர் கல்விச் சேவை அல்லது பல்கலைக்கழக விரிவுரை யாளர்களின் சம்பளம் ஆகியவற்றிற்கு இணையாக இருக்க வேண்டுமென்று

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		ஆலோசனை வழங்கிய குழு, இதுதொடர்பில் அரசாங்கத்திற்கு ஒரு பிரேரணையை முன்வைக்குமாறு CAO/AO வைக் கேட்டுக் கொண்டது.
3.	வினாத்தாள்களை அச்சிட்ட வகையில் 2008ஆம் ஆண்டு முதல் கல்வி அமைச்சிடமிருந்து கடன்பட்டோர் நிலுவையான ரூ. 3,237,799/- திறை சேரியின் அனுமதியைப் பெறாமலேயே பதிவழிக்கப்பட்டிருந்தது.	NIE, அனுமதிகோரி திறைசேரிக்குக் கடிதம் எழுதியிருந்ததாகவும், ஆனால் இதுவரை பதில் எதுவும் கிடைக்க வில்லை எனவும் CAO/AO கூறினார்.
4.	வாழ்க்கைத்தொழில் மற்றும் தொழில்நுட்பத்திறன்கள் கல்விக்காக ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தல் கல்வித் தரம் ஆகியவை பற்றிக் குழு கலந்துரையாடியது.	வாழ்க்கைத்தொழில் மற்றும் தொழில் நுட்பத்திறன்கள் கல்விக்காக ஆசிரியர் களைப் பயிற்றுவித்தல் மற்றும் மேற்படி தேவைப்பாடுகளை ஒரு மாதத்தினுள் நிறைவேற்றுவதற்கான அவர்களின் எதிர்காலத் திட்டங்கள் பற்றிய அறிக்கையொன்றை ஒரு மாதத்தினுள் சமர்ப்பிக்குமாறு CAO/AOவைக் குழு பணித்தது.
5.	மனிதவள அபிவிருத்தித் திட்டத் தயாரிப்பு, அதன் நடவடிக்கைகள் மற்றும் அதன் அமுலாக்கம் ஆகியன பற்றிக் குழு வினவியது.	மனிதவள அபிவிருத்தித் திட்டம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு அமைச்சர வையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது எனக் கூறப்பட்டது. செயலாற்றுகையைக் குழு மதிப்பிடக் கூடிய வகையில் புதிதாக அமுல்ப் படுத்தப்படும் மனிதவள அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக எழுந்த இலக்கு களை உள்ளடக்கிய கூட்டாண்மைத் திட்டத்தைத் தயார் செய்து குழுவுக்குச் சமர்ப்பிக்கும்படி குழு CAO/AOவைக் கேட்டுக் கொண்டது.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
6.	குழு நாட்டின் கல்வி பற்றிய கலந்துரையாடலை நடத்தியது.	குழு பின்வரும் பிரேரணைகளை முன்வைத்தது. (i) ஆரம்ப வகுப்புகளில் கற்பிக்கும் சுமார் 60% ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட துறையில் பயிற்றப் படாததன் காரணத்தினால், அந்த ஆசிரியர்கள் ஆரம்பக் கல்வியைக் கற்பிப்பதற்குப் பயிற்றப்பட வேண்டும். (ii) பல்கலைக்கழக மட்டத்தில் கணிதம், விஞ்ஞானம், வணிகவியல், பொருளியல் போன்ற பாடங்களில் போதனா முறையை அறிமுகப் படுத்தல். (iii) வாழ்க்கைத்தேர்ச்சியைக் கட்டாய பாடமாக்குதல். (iv) தற்போது பாடத்திட்டங்கள், ஆசிரியர் வழிகாட்டிகள், பாடப் புத்தகங்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் பணியில் NIE ஈடுபட்டிருக்கும் அதேவேளை, கல்விக் கண்காணிப்பு/மேற்பார்வை ஆகிய கருமங்கள் கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டாலும் கூட, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு ஆகியவற்றை மேற்கொள்வதற்குத் தேசிய கல்வி நிறுவகத்துக்கு அதிகாரம் அளிக்க முடியுமா என ஆராய்தல். ஆங்கிலப் பாடப்புத்தகங்களைத் தயாரிக்கும் போது கதைகளைச் சேர்த்தல்.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	**COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்**
	***இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகம்* உயர்கல்வி அமைச்சு**	**2014 ஜனவரி 24**
01.	2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2013 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகம் அதன் தரவரிசையில் ஏன் வீழ்ச்சி கண்டுள்ளது எனக் குழு வினவியது. இணைய மெட்ரிக் முறைமை: 2011 – 6226; 2013 – 12,924 இலங்கைப் பல்கலைக்கழக முறைமை: 2011 – 09; 2013 – 13 இணைய மெட்ரிக் முறைமையில் தரவரிசைப்படுத்தும்போது பல்கலைக் கழகம் இணையத்தளத்திற்குப் பதிவேற்றம் செய்த விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட்டன எனவும் பின்வரும் காரணங்களுக்காக 2013ஆம் ஆண்டு தரவரிசையில் ஒரு வீழ்ச்சி காணப்பட்டதெனவும் AO கூறினார். இந்தக் காலகட்டத்தில் இணையத் தளத்தில் போதுமான எண்ணிக் கையிலான ஆராய்ச்சிக் கட்டுரைகள் பதிவேற்றம் செய்யப்படவில்லை. பாதைகளின் கட்டுமானம் காரணமாக வலையமைப்பு வடங்கள் சேதமடைந் திருந்தன. அவர்களிடமிருந்த ஆய்வுத் தரவுகளைக்கூடப் பல்கலைக்கழகத்தால் பதிவேற்ற முடியவில்லை.	பல்கலைக்கழகங்களின் இணையத் தளங்களில் தரவுகளைப் பதிவு செய்தல் இத்தகைய குறைபாடுகள் மீண்டும் ஏற்படாதவாறு அந்த நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட ஓர் அதிகாரியினால் கண்காணிக்கப்பட வேண்டுமென்ற கருத்தைக் குழு கொண்டிருந்தது. சகல பல்கலைக்கழக இணையத்தளங்களையும் கண்காணிக்க ஓர் அதிகாரியை நியமிக்க முடியுமா என ஆராயுமாறும் அவ்வப்போது ஒவ்வோர் இணையத்தளத்தின் நிலைமை பற்றி அமைச்சின் செயலாளர் மற்றும் ப.மா.ஆ தவிசாளர் ஆகியோருக்கு அறிக்கை செய்ய வேண்டுமெனவும் CAO மற்றும் ப.மா.ஆ தவிசாளர் ஆகியோரைக் குழு பணித்தது.
02.	மாணவர்களில் சித்தியடையாதோர் வீதம் 22% வரையான ஓர் உயர்	தோல்வி வீதத்தைக் கணக்கிடும் போது சிறப்புப் பட்டக் கற்கைநெறிகளுக்குத்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	நிலைக்கு ஏன் அதிகரித்தது எனக் குழு வினவியது.	தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் உள்ளடக்கப்படவில்லை எனவும் எனவே, உண்மையான சித்தியடையாதோர் விகிதம் 17% மாக இருக்க வேண்டும் எனவும் அது 22% இல்லையெனவும் AO கூறினார். மேலும் விசாரணையின்போது, இந்த வருடத்திலிருந்து ஒவ்வொரு பல்கலைக் கழகமும் 5 ஆண்டு மூலோபாயத் திட்டத்தைத் தயார் செய்ய வேண்டுமென்ற ஒரு முறைமை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளதாகவும், ஒவ்வோர் ஆண்டும் ஒரு வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க வேண்டுமெனவும் அத்துடன், அமைச்சு மட்டத்தில் திட்டத்தின் அமுலாக்கம் மற்றும் முன்னேற்றம் போன்றன கண்காணிக்கப்படுமெனவும் CAO கூறினார்.
03.	கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாட்டொகுதிக்கான பெரும் எண்ணிக்கையிலான வெற்றிடங்கள் இருந்ததையும் அத்துடன், மீளாய்வுக் குட்பட்ட காலத்தில் ரூபாய் 6,668,689/- வருகைதரும் விரிவுரையாளர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்ததையும் குழு அவதானித்தது.	பெரும்பாலான வெற்றிடங்கள் மருத்துவ பீடத்தில் இருந்ததாகவும் பல்கலைக்கழகம் கஷ்டப் பிரதேசமொன்றில் அமைந்திருப்பதனால் பணியாட்டொகுதியினருக்கு விடுதி வசதிகள் போன்ற பல வசதிகள் வழங்க வேண்டியிருந்ததெனவும் CAO சுட்டிக் காட்டினார். பத்திரிகைகளில் தொடர் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும், குறைந்த சம்பள அளவுத்திட்டங்கள் காரணமாகப் பல்கலைக்கழகத்தினால் சிரேஷ்ட பதவிநிலைகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு இயலாமலிருந்தது என CAO/AO மேலும் கூறினார்.
04.	பல்கலைக்கழகத் தாபனக் கோவையின் பிரகாரம் வருகை மற்றும் வெளியேறுகைப் பதிவு இடாப்பில் ஒப்பமிடுமாறு பல்கலைக்கழகப் பணி	பல்கலைக்கழகக் கல்விசார் பணியாட்களின் கடமைகள், அலுவலகப்பணியாளர்களின் விடயத்தில் உள்ளவாறு நாளொன்றின் சிறிதளவு குறித்த

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	யாட்களுக்கு வேண்டுகோள் விடுக்கப் பட்டபோதிலும், வருகை மற்றும் வெளியேறுகை நேரம் உறுதிசெய்யப் படாமல் சம்பளங்களும் படிகளும் கல்விசார் பணியாட்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தமை பற்றிக் குழு அவதானித்தது.	மணித்தியாலங்களுக்கு வரையறுக்கப் படாமலிருப்பதனால் வரவு இடாப்பில் ஒப்பமிடும் தேவைப்பாட்டிலிருந்து உலகம் பூராவும் உள்ள பல்கலைக் கழகக் கல்விசார் பணியாட்களுக்கு விலக்களிக்கப்பட்டிருந்தமையை CAO/AO சுட்டிக்காட்டினார். இந்த விடயத்தை ஒழுங்குபடுத்துவதற்குப் பல்கலைக்கழகத் தாபனக் கோவையை அவ்வாறே திருத்தியமைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு குழு CAO/AO வுக்கு ஆலோசனை வழங்கியது.
05.	வெளிவாரிக்கற்கை நெறிகள் மூலமாக ஈட்டப்பட்ட ரூபா 33,676,124ஐக் குழுவின் முன்னைய பணிப் புரைக்கிணங்க பல்கலைக்கழக நிதி யத்தில் ஏன் வரவு வைக்கப்பட்டிருக்க வில்லை எனக் குழு விசாரித்தது.	பல்கலைக்கழகங்களில் தொலை மற்றும் தொடர் கல்விக்கான (CDCE) நிலையங்களைத் தாங்கள் அறிமுகப் படுத்தியிருந்ததாகவும் வெளிவாரிக் கற்கை நெறிகளிலிருந்து கிடைக்கப் பெற்ற வருமானம் 2013ஆம் ஆண்டின் வருடாந்தக் கணக்குகளில் வெவ் வேறாகக் காட்டப்பட்டிருந்ததெனவும் CAO/AO கூறினார்.
06.	மேற்படி பொலிஸ் விடுதிகளைச் சுவீகரித்துக்கொள்வதற்கென ரூபா.18 மில்லியன் 2006ஆம் ஆண்டில் திறைசேரியினால் வழங்கப்பட்டிருந் தமையையும் மேற்படி தொகைக்கான வட்டியாகக் கிடைக்கப்பெற்ற ரூபா.9,243,577ஐ திறைசேரி அங்கீ காரம் பெற்றுக்கொள்ளாது ஒப்பந்தக் காரர் ஒருவரின் விலைப்பட்டியலுக்குச் செலுத்தித் தீர்ப்பதற்கு உபயோகிக்கப் பட்டிருந்தமையையும் குழு அவ தானித்தது.	2011 டிசம்பர் மாதத்தில் ஒப்பந்தக்காரர் ஒருவரின் சில விலைப்பட்டியலுக்குச் செலுத்தித் தீர்ப்பதற்கென உரிய வேளையில் திறைசேரியிடமிருந்து நிதி கள் கிடைக்கப்பெறாமலிருந்தமையால், சொல்லப்பட்ட தொகையை அவர்கள் மீளப்பெறவேண்டியிருந்தது. மாறாக, அடுத்த ஜனவரி மாதத்தில் அவர்க ளுக்கு நிதிகள் கிடைக்கப்பெற்ற போது, பரிசீலிப்புத் திகதியில் உள்ளவாறு அத்தொகை வைப்பிலிடப் பட்டு அவ்விடயமும் தீர்த்துவைக்கப் பட்டிருந்தது.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா சிவில் விமான சேவைகள் அமைச்சு	**2014 பெப்ரவரி 05**
1.	இரண்டு விமானசேவைகளையும் இணைப்பதற்கான சாத்தியக்கூறு பற்றிக் கலந்துரையாடப்பட்டது.	இந்த விடயம் தொடர்பாக நிறுவனத்தின் நிலைப்பாடு பற்றிய அறிக்கையொன்றை இரண்டு மாத காலத்தினுள் குழுவிற்கு அனுப்பிவைக் குமாறு CAO/AO வைக் குழு பணித்ததுடன், இந்த விடயம் அமைச்சின் ஆலோசனைக் குழுவில் ஆராயப்படவேண்டுமெனவும் சிபாரிசு செய்தது.
2.	அராசங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் முன்னிலையில் அது இறுதியாகத் தோற்றியதிலிருந்து நிறுவனத்தின் நிதிநிலைமை மேலும் மோசமடைந்திருந்ததுடன் ஆரம்ப காலங்களிலிருந்து ஏற்பட்ட நட்டங்கள் பின்வருமாறு அமைந்தன. நிதி ஆண்டு / திறைசேரிக் கொடை ரூபா மில்லியன்கள் / செயற்பாட்டு நட்டம் ரூபா மில்லியன்கள் 2012/13 — 1,950 — 3,284.47 2011/12 — 507 — 1,966.51 2010/11 — 1,757 — 940.49 2009/10 — 785 — 1,221.38 2008/09 — 2,454 — 1,300.47 2007/08 — 550 — 3,160.81	மோசமான மூலதனக்கட்டமைப்பு இந்தப்பிரச்சனைக்கு வழிவகுத்திருந் ததோடு, குத்தகைக்கு விடப்பட்டு ஒப்படைக்கப்பட்ட ஆகாயவிமானத் தின் இயந்திரத்தை நன்கு ஆராய்ந்து சரிசெய்வதற்கு ஏற்பட்ட மேலதிகச் செலவினால் 2012/13ஆம் ஆண்டில் இந்தப் பிரச்சனை மேலும் மோசமாகியது.
3.	உண்மை வருமானத்திற்கும் உத்தேசிக்கப்பட்ட வருமானத்திற்கு மிடையில் கணிசமான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. வருமானத்தைப் பயன்படுத்திப் புதிய ஆகாயவிமானங்	அந்த விடயங்கள் வியாபாரத்திட்டம் தயாரிக்கும் வேளையில் ஆராயப் பட்டிருக்க வேண்டும் எனக் குழு சுட்டிக்காட்டியது.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	**COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்**
	களைக் கம்பனியின் விமானத்தொகுதி யுடன் சேர்த்துக்கொள்வதற்கு எதிர் பார்க்கப்பட்டபோதிலும், அதன் சொந்த நிதிசார் காரணங்களினால் எதிர்பார்க்கப்பட்டவாறு நடைபெற்றி ருக்கவில்லை என CAO/AO ஆல் விளக்கம் கொடுக்கப்பட்டது.	
4.	ஆகாயவிமானத்தில் உள்ள இட வசதியின் தற்போதைய நிலைமையை மேலும் அதிகரித்தல் பற்றிக் கலந்துரையாடப்பட்டது.	இந்த விடயம் தொடர்பாக ஒவ்வொரு பயணவழி பற்றிய மதிப்பீடு ஒன்றுடன் அறிக்கையொன்றைக் குழுவிற்கு அனுப்பிவைக்குமாறு CAO/AO பணிக்கப்பட்டார்.
5.		இறுதிக்கணக்குகள், கூட்டிணைத் திட்டம் ஆகியவற்றுடன் பயணிகளுக் கான செலவு, பணியாட்களுக்கான செலவு, நிதிச்செலவு, மூலதனச்செலவு போன்றவை அடங்கலாகக் கம் பனியின் மொத்தச் செலவினத்தின் விபரமொன்றைச் சமர்ப்பிக்குமாறு குழு CAO/AO வைப் பணித்தது. 2014.03.19ஆம் திகதி மீள அழைக்கப்படும்.
	இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் **வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு மற்றும் நலன்புரி அமைச்சு**	**2014 பெப்ரவரி 07**
1.	போலியான ஒப்பங்களிட்டு ரூபா 800,000.00 தொகையுடைய 3	பணியகம் உள்ளகப் புலன் விசா ரணைகளை மேற்கொண்டிருந்த விதம்,

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	காசோலைகளைப் பணமாக மாற்றிய விடயத்தின் தற்போதைய நிலைமை பற்றி விசாரிக்கப்பட்டது.	பொலிஸ் புலன் விசாரணைகளை மேற்கொண்டிருந்த வழிமுறைகள் ஆகியவை பற்றிக் குழு திருப்தி யற்றிருந்தமையால், இந்த விடயம் பற்றிய விபரமான அறிக்கை யொன்றைச் சமர்ப்பிக்குமாறு குழு CAO/AO வைப் பணித்தது. மேலும் பொலிஸ் மா அதிபரைச் சந்தித்துக் காலதாமதத்திற்கான காரணத்தை விசாரிக்குமாறும் பணியகத்திற்கு மீளளிப்புச் செய்யவேண்டிய பணம் தொடர்பில் இலங்கை வங்கி மற்றும் செலான் வங்கித் தலைவர்களுடன் கலந்துரையாடிக் குழுவிற்கு அறிக்கையிடுமாறும் CAO/AO வைக் குழு பணித்தது.
2.	வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா.20 மில்லியன் கடனை அறவிடுவதன் தற்போதைய நிலைமை பற்றி விசாரிக்கப்பட்டது.	ரூபா.9 மில்லியன் தொகை, 03 தவணைக்கட்டணங்களில் அறவிடப் பட்டிருந்தது எனக் கூறப்பட்டதோடு 2014ஆம் ஆண்டு முடிவடையுமுன்னர் நிலுவைத் தொகை அறவிடப் பட்டுவிடும் எனவும் உறுதியளிக்கப் பட்டது.
3.	வெளிநாடுகளுக்குப் பயணம் மேற் கொள்ளாதிருந்த புலம்பெயர்ந்தவர் களுக்கெனக் கொள்வனவு செய்யப் பட்ட 62 பயணச்சீட்டுக்களைப் பயண முகவர்களிடம் ஒப்படைக்கத் தவறியமையால் ஏற்படுத்தப்பட்ட ரூபா.2,264,660 நட்டத்திற்குப் பொறுப்பாக இருந்த உத்தியோகத்தர் களுக்கெதிராக நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருந்ததா என விசாரிக் கப்பட்டது.	மோசடியொன்று இடம்பெற்றிருப் பதாகப் பணியகத்திற்குத் தெரிய வந்திருப்பின், அதை ஜனாதிபதி புலன்விசாரணைகள் பிரிவிற்குச் சமர்ப் பிப்பதற்கு முன் அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டிருந்திருக்க வேண்டும் எனக் குழு கருதியதோடு இவ்விடயம் பற்றிய விபரமான அறிக்கை யொன்றைச் சமர்ப்பிக்குமாறு CAO/AO வைப் பணித்தது.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	தேசிய சேமிப்பு வங்கி **நிதி திட்டமிடல் அமைச்சு**	**2014 பெப்ரவரி 18**
1.	வட்டியற்ற வருமானம் பற்றிக் குழு விசாரித்தது.	வாடிக்கையாளர்களுக்கு (தன்னியக்க ரெலர் இயந்திரம், கடன் அட்டைகள், தனியுரிமை அட்டைகள் ஆகிய) அட்டைகளை வழங்குவதனால் கிடைக்கப்பெற்ற வருமானம் மற்றும் பல்வேறு வகையான சர்வதேசக் கொடுக்கல் வாங்கல்களை மேற் கொள்வதனால் கிடைக்கப்பெற்ற தரகு ஆகியவை வட்டியற்ற வருமானமாகக் காட்டப்பட்டிருந்ததாகவும், மாறாக முன்னர் இவ்வகையான தரகு, ஏனைய வங்கிகளால் மேற்கொள்ளப்பட்டது போல, வாடிக்கையாளர்களிடமிருந்து சேகரிக்கப்படவில்லை என AO கூறினார். 2014ஆம் ஆண்டின் நிதிக்கூற்றில் இந்த வட்டியற்ற வருமானம் பிரதிபலிக்கும் என அவர் மேலும் கூறினார்.
2.	உட்கட்டமைப்புக் கருத்திட்டங்களுக்கு ரூபா.15 பில்லியன் வங்கியினால் வழங்கப்பட்டிருந்தது எனக் குழு கூறியது.	கருத்திட்டங்களுக்கான செலவு விபரத்தைக் குழுவிற்குச் சமர்ப்பிக் குமாறு CAO/AO வைக் குழு பணித்தது.
3.	வட்டிச் செலவினங்கள் அதிகரித்திருப் பது ஏன் எனக் குழு விசாரித்தது.	2012ஆம் ஆண்டின் இறுதிப்பகுதி மற்றும் 2013ஆம் ஆண்டின்போது சந்தையில் வட்டிவீதங்கள் அதிகரித் தமையால், நிலையானவைப்பு வாடிக்கையாளர்களைத் தொடர்ந்து வங்கியுடன் வைத்திருப்பதற்காக

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		அவர்களுக்கு வங்கி உயர் வட்டி வீதங்களை வழங்கவேண்டியிருந்தது என GM/CEO கூறினார்.
4.	2013ஆம் ஆண்டு இலாபம் குறைவடைந்தமை தொடர்பான விடயம்.	சந்தையின் போட்டி அடிப்படையில், வங்கி உயர் வட்டி வீதங்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்க வேண்டியிருந்ததோடு வருமானம் 17% ஆல் மட்டும் அதிகரிக்கப்பட்டிருந்த வேளையில் வங்கியின் வட்டிச் செலவினங்கள் 33% ஆல் அதிகரிக் கப்பட்டன என GM/CEO கூறினார்.
5.	2012ஆம் ஆண்டில் "த பினான்ஸ் கம்பனியில்" ரூபா 390 மில்லியன் முதலீடு தொடர்பாகக் குழுவினால் பணிக்கப்பட்டவாறு உள்ளக விசாரணை நடத்தப்படுவது பற்றிய தற்போதைய நிலைமையைக் குழு விசாரித்தது.	வெளித்தரப்பொன்று குழு நடாத்திய ஆரம்பகட்ட விசாரணைகளின் அடிப் படையிலான சிபாரிசுகளின் பேரில் 2014 ஜனவரி மாத இறுதியில் இரண்டு சிரேஷ்ட அதிகாரிகளுக்குக் குற்றப் பத்திரிகைகள் வழங்கப்பட்டிருந் ததோடு முன்னைய தலைவருக் கெதிராக நீதிமன்றத்தில் வழக்கொன்று நடைபெறுவதாகவும் AO கூறினார்.
6.	உள்ளக விசாரணையொன்றை மேற் கொள்ளுமாறு அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு பணித்திருந்த வேளையில், இந்த விடயம் எவ்வாறு வெளித்தரப்பொன்றிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது எனக் குழு விசாரித்தது.	அவர்கள் இந்த விடயத்தை எதற்காகத் தனியார் தரப்பினரிடம் ஒப்படைப் பதற்குத் தீர்மானித்திருந்தனர் என்பதற் கான குறித்த காரணத்தைப் பணிப் பாளர் சபை குறிப்பிட்டுச் சொல்லி யிருக்கவில்லை என AO கூறினார். இவ்வகையான விசாரணைகள் உள்ளகக் கணக்காய்வினால் மேற் கொள்ளப்பட்டுவருவது வழமையான நடைமுறையெனவும் இவ்வழக்கில் பிரதிப் பொது முகாமையாளர் (DGM) (கணக்காய்வு) சந்தேக நபராக இருப்பதால், இந்த விடயத்தை

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		வெளித்தரப்பொன்றிடம் ஒப்படைப் பதற்குச் சபை தீர்மானித்திருக்கலாம் எனவும் AO கூறினார்.
7.	ரூபா 73,584,480 மற்றும் ரூபா 1,136,500,000 ஆகியவை பிராந்திய அபிவிருத்தி வங்கி மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஆகியவற்றில் முதலீடு செய்யப்பட்டிருந்ததையும் முறையே 2011 மற்றும் 2010 ஆகிய வருடங் களிலிருந்து பங்குலாபங்கள் கிடைக்கப் பெற்றிருக்கவிலலை என்பதையும் குழு அவதானித்தது.	பிராந்திய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் பிரகாரம், தேசிய சேமிப்பு வங்கி பிராந்திய அபிவிருத்தி வங்கியில் முதலீடு செய்யும் என எதிர் பார்க்கப்பட்டது என AO கூறினார். ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸில் முதலீடு தொடர்பாக, அது வரவு-செலவுத்திட்ட முன்மொழிவாக இருந்ததோடு, அரசாங் கத்தின் முதலீட்டு வலுவூட்டலுடன் இந்தப் பணத்தை வங்கி மீளப் பெற்றுக்கொள்ள முடியும்.
8.	பிரதான மதிப்பாளரினால் ரூபா 184 மில்லியன் விலை மதிப்புச் செய்யப் பட்டிருந்த 02 ஏக்கர் 03 றூட்கள் மற்றும் 31.7 பேர்ச்சுகள் எனும் விஸ்தீரணமுடைய காணியொன்றைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 130 மில்லியன் தொகையை இலங்கைக் கடற்படை செலுத்தியிருந்தமையைக் குழு அவதானித்தது.	இலங்கைக் கடற்படையினால் கொடுப் பனவு மேற்கொள்ளப்பட்டதை உறுதிப் படுத்திய கணக்கீட்டு அலுவலர், அதற்கு மேலதிகமாக அரசாங்கம் சில காணித்துண்டுகளைப் பெற்று இலங்கைக் கடற்படைக்கு மாற்றிக் கொடுத்ததாகவும் இது தொடர்பாக வங்கி அரசாங்கத்திடமிருந்து நட்ட ஈட்டைப் பெறவேண்டியிருந்ததாகவும் கூறினார்.
9.	ஒரு ATM ஊடாக பண்டாரவளையில் இடம்பெற்றிருந்த மோசடிகள் மற்றும் காலி வங்கிக் கிளையில் அடகு வைக்கப்பட்ட நகைகள் காணாமற்போனது ஆகியன தொடர்பான தற்போதைய நிலை பற்றி குழு விசாரித்தது.	பண்டாரவளைக் கிளையின் ரூபா 6.2 மில்லியன் மோசடியில் ரூபா 2.5 மில்லியன் காப்புறுதிக் கம்பனியி லிருந்து கிடைக்கப்பெற்றிருந்ததுடன் நிலுவைத் தொகையை அறவிடுவதற் கான நீதிமன்ற வழக்கு முடிவு றாதுள்ளது என AO கூறினார். காலிக் கிளையின் மோசடி தொடர்பாக,

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		நீதிமன்ற வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது.
10.	2011ஆம் ஆண்டில் 57 கிளைகள் நட்டத்தில் இயங்கிக்கொண்டிருந்தமை பற்றிய விடயம்.	2011ஆம் ஆண்டில் உள்ளவாறு, நட்டத்தை ஏற்படுத்தும் கிளைகளில், 40 கிளைகள் இலாபகரமான நிலைமையை அடைந்திருந்தன என GM/CEO கூறினார். 2012 மற்றும் 2013 ஆகிய ஆண்டுகளில் திறந்து வைக்கப்பட்ட 19 புதிய கிளைகளில், ஒரு கிளை இலாபங்களைக் காட்டியிருந்ததுடன் ஏனைய 18 கிளைகளும் நட்டத்தை ஏற்படுத்தும் மட்டத்திலிருந்தன.
11.	2014 முதல் 2016 வரையான ஆண்டு காலப் பகுதிக்குரிய செயல்நுணுக்கத் திட்டம் (கூட்டிணைத்திட்டம்)	முதலீட்டுச் செலவினத்தின் விபர மொன்றையும் கடன் வழங்கல், கிடைக்கப்பெறுகை, வட்டிவீதங்கள் போன்றவை உள்ளடங்கலாக வைப் பாளர்கள் பற்றிய ஆய்வு அறிக்கை யையும் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு CAO/AO வைக் குழு பணித்தது.
	நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு	**2014 பெப்ரவரி 20**
1.	நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் தலைவர் நியமனம் ஏன் சட்டரீதியாக உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை எனக் குழு விசாரித்தது.	அவர் ஏற்கனவே கௌரவ அமைச்சருக்குத் தெரிவித்திருந்ததா கவும் உறுதிப்படுத்தற் கடிதத்தை விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் CAO கூறினார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	**COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்**
2.	பணிப்பாளர் சபைக்கு ஏன் 28 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர் எனக் குழு வினவியது.	சட்டத்தை உருவாக்கும் வேளையில் பணிப்பார்கள் சபையில் நியமிக்கப் படவேண்டிய அதிகுறைந்த உறுப்பினர்கள் மட்டும் உள்ளடக்கப் பட்டிருந்தனர். அதிகூடிய உறுப்பினர் எண்ணிக்கை அதில் காட்டப்பட்டிருக்க வில்லை என CAO/AO கூறினார். காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள திருத்திய சட்டத்தில் உறுப்பினர்களின் அதி கூடிய எண்ணிக்கை 21 ஆக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது என அவர் மேலும் கூறினார். 15 உறுப்பினர்கள் பணிப்பாளர்கள் சபைக்குப் போதுமானது எனக் குழு அபிப்பிராயப்பட்டதுடன் எண்ணிக்கை யைக் குறைப்பதற்கான சாத்தியக் கூற்றை ஆராயுமாறும் CAO/AO வைப் பணித்தது.
3.	நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை 15 பொருட்களை விலைக்கட்டுப் பாட்டுப்பகுதிக்குரிய குறித்துரைக்கப் பட்ட பொருட்களாக இனங்கண்டிருந்த போதிலும், 10 குறித்துரைக்கப்பட்ட பொருட்களின் விலைகளைக் கட்டுப் படுத்துவதில் தலையீடு செய்வதற்கு அதிகாரசபை தவறியிருந்தமையைக் குழு அவதானித்தது. கொழுப்புச்சத்து அற்ற பால்மா அதிகாரசபை கொழுப்புச்சத்தற்ற பால் மாவிற்கான கட்டுப்பாட்டு விலை யொன்றைக் குறித்துரைத்திருக்க வில்லை. உற்பத்தியாளர்களும்	மதிப்பீடொன்று மேற்கொள்ளப் படும்வரை விலை அதிகரிப்புச் செய்யாதிருக்குமாறு கம்பனியைக் கோருகின்ற இடைக்கால உத்தர வொன்றை நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை வழங்கியிருந்த போதிலும், திடீர் சோதனைகளைத் தடுக்கும்பொருட்டுக் கம்பனி வழக் கொன்றைத் தாக்கல் செய்திருந்தது என CAO/AO கூறினார். நீதிமன்றின் தீர்ப்பு வழங்கப்படாத நிலையிலுள்ளது என அவர் மேலும் கூறினார். சட்டமா அதிபரின் தீர்ப்புத்தொடர்பாக முடி வொன்றுக்கு வருமுன்னர் அவர்கள் ஒவ்வொரு அம்சத்தையும் ஆராய வேண்டியிருந்தமையால், 30 நாட்களுக்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	விநியோகஸ்தர்களும் தமது தற்துணிவின் பேரில் விலையைத் தீர்மானித்திருந்தனர். முழு ஆடைப்பால்மா முழு ஆடைப்பால்மாவின் விலையை மீளாய்வு செய்வதற்கு/அதிகரிப்புச் செய்வதற்கு நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை நடவடிக்கை மேற் கொள்ளாமைக்கெதிராக நீதிமன்ற வழக்கொன்றை நான்கு கம்பனிகள் தாக்கல் செய்திருந்தன. விண்ணப்பம் கிடைக்கக்பெற்றதிலிருந்து 30 நாட் களுக்குள் தீர்மானமொன்றை மேற் கொள்வதற்கு அதிகாரசபை தவறியுள் ளமையால், சம்பந்தப்பட்ட கம்பனி களுக்கு அவர்களின் விலைகளை அதிகரிப்பதற்கு உரிமையிருந்தது எனச் சட்டமா அதிபர் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைக்குத் தெரிவித்திருந்தார். குழந்தைகளின் பால் உணவுகள் வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்த லொன்றின் மூலமாகக் குழந்தைகளின் பால் உணவுகளின் விலைக்கட்டுப் பாட்டில் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை தலையீடு செய்திருந்தது. விலை அதிகரிப்பு நியாயமற்றது எனக் கூறிக் கம்பனியொன்று நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைக்கெதிராக நீதிமன்ற வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தது. நுகர்வோர் அதிகார சபை இவ்விடயம் பற்றி முறையாக விசாரணைகளை மேற்கொண்டிருக் காமையால், சொல்லப்பட்ட வர்த்த மானிப்பத்திரிகை அறிவித்தலை வாபஸ் பெற்றுப் புதிய வர்த்தமானிப்	குள் விலையைத் துரிதமாக மீளாய்வு செய்தல்/அதிகரிப்புச் செய்தல் தொடர் பில் நுகர்வோர் அதிகாரசபைக்குச் சாத்தியப்படாமல் போய்விட்டதென CAO/AO கூறினார். விலையை மீளாய்வு செய்வதற்கு/ அதிகரிப்பதற்கு 30 நாட்களினுள் பகுப்பாய்வொன்றை மேற்கொள் வதற்குச் சாத்தியப்படாமல் போய் விட்டதெனக் கூறுவதற்கு அதிகார சபையிடம் நெறிமுறை உரிமை இருக்கவில்லை எனக் குழு சுட்டிக் காட்டியது.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	பத்திரிகை அறிவித்தல் ஒன்றை வழங்குமாறு சட்டமா அதிபர் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபைக்குப் பணிப்புரை விடுத்திருந்தார்.	
4.	போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் வியாபாரத்திலுள்ள பின்வரும் தீங்கான நடவடிக்கைகள் பற்றிக் குழு வினவியது. ❖ வீசப்படும் வெற்றுப்போத்தல்களில் சுத்திகரிக்கப்படாத நீரை மீள நிரப்புதல். ❖ இந்தக் கைத்தொழில் பற்றிய கட்டுப்பாட்டைப் பேணுவதற்குச் சட்டத்தினால் அளிக்கப்பட்ட தத்து வங்களை உபயோகித்து உற்பத்திப் பொருட்களின் தரத்தைத் தரப்படுத் துவதற்கும் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.	போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீரின் தரத்தைப் பேணுவதற்கான வழிகாட் டல்கள் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டிருந்ததாகவும் கண் காணிப்புச் செயற்பாடு இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தினால் (SLSI) கையாளப்படவேண்டுமெனவும் CAO/AO கூறினார். நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் பந்தி 12(1)இன் கீழ், நுகர்வோர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையிடம் அளிக்கப்பட்டிருந் தது எனக் குழு சுட்டிக்காட்டி, போத்தலில் அடைக்கப்பட்ட நீரின் நியமங்கள் மற்றும் தரம் ஆகியவற் றைக் குறித்துரைக்கும் வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தலை வழங்குவ தற்கு நடவடிக்கை மேற்கொள்ளு மாறும் ஒரு மாதத்தினுள் குழுவிற்கு அறிக்கையிடுமாறும் CAO/AO வைப் பணித்தது. வீசப்படும் வெற்றுப்போத்தல்களில் சுத்திகரிக்கப்படாத நீரை மீளநிரப்பு வதை இல்லாதொழிப்பதற்குப் போத் தலில் அடைக்கப்பட்ட நீருக்குத் தரம் வழங்குவதற்கென ஆய்வுசெய்து முறைமையொன்றை மேம்படுத்து மாறும் CAO/AO வைக் குழு வேண்டிக்கொண்டது.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
5.	'டிசிடி' எனும் இரசாயனப் பொருள் தொற்று ஏற்பட்டிருந்த பால்மா பற்றிக் குழு விசாரித்தது.	உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் பற்றிய விபரமான விளக்கத்தை வழங்கிய CAO/AO 'டிசிடி' எனும் இரசாயனப் பொருள் தொற்று ஏற்பட்டுள்ளதாகச் சந்தேகிக்கப்பட்ட பால்மா சந்தையிலிருந்து அகற்றப் பட்டதெனக் கூறினார். அப்போது 'டிசிடி' பரிசோதனையை உள்நாட்டில் மேற்கொள்வதற்குத் தேவையான சகல பொறிகள் மற்றும் உபகரணங்களை ஐரிஐ (ITI) தயார் செய்திருந்தது எனவும், துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட சகல பால்மா வகைகளும் சந்தைக்கு விடுவிக்கப்படுவதற்கு முன் 'டிசிடி' இரசாயனப்பொருள் பரி சோதனை ஐரிஐ இனால் மேற் கொள்ளப்பட்டது எனவும், பால்மாவில் 'டிசிடி' எனும் இரசாயனப்பொருள் இல்லை என வெளிப்படுத்தும் விபரச்சிட்டையை ஒவ்வொரு பால்மாப் பொதியிலும் பால் உணவுக் கம்பனிகள் ஒட்டவேண்டும் என்பதைச் சுகாதார அமைச்சு கட்டாயமாக்கியிருந்தது எனவும் CAO/AO கூறினார். இலங்கையில் இறக்குமதி செய்யப் படும் எல்லாவகையான பால்மாவிலும் 'டிசிடி' எனும் இரசாயனப் பொருளின் மட்டம் பூச்சியமாக இருக்கவேண்டும் என்பதைச் சுகாதார அமைச்சின் கீழ் இயங்கிவரும் உணவுப் பிரிவு தீர்மானித்திருந்ததாக மேலதிக விசாரணையின்போது CAO/AO கூறினார். நாட்டில் இறக்குமதி செய்யப்படும் ஏனைய உணவுப் பொருட்களின் மீதும்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	**COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்**
		எச்சரிக்கையாக இருக்குமாறு CAO/AO வைக் குழு பணித்தது.
6.	முப்பத்தேழு விசேட சந்தை அதிரடிச் சோதனைகள் மட்டுமே நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை அதிகாரி களினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததை நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் தற்போதைய செயலாற்று அறிக்கை மூலமாகக் குழு அவதானித்தது.	அத்தகைய 37 விசேட அதிரடிச் சோதனைகளை முழுவருடத்திலும் அல்லாது நத்தார்/ புதுவருட காலங் களின் போது மட்டுமே மேற்கொள்ளப் பட்டிருந்தன எனவும் கொழும்பை மையமாகக் கொண்டு மீளப்பொதி செய்தல், காலாவதியாகும் திகதிகளை மாற்றுதல் போன்ற இதர நடவடிக்கை களில் ஈடுபட்டிருந்த அனேக வியாபாரி கள் அங்கிருந்து அத்தகைய பொருட் களை நாடுபூராகவும் விநியோகிக்கின் றனர் எனவும் CAO/AO கூறினார்.
7.	குற்றம் புரிந்துள்ளதாகக் காணப்பட்ட கம்பனிகள் ஏன் கறுப்புப் பட்டியலில் இடப்படாதிருந்தது எனவும் அத்தகைய கம்பனிகளின் பெயர்களைப் பொது மக்களுக்குத் தெரியப்படுத்தவில்லை எனவும் குழு விசாரித்தது.	அத்தகைய ஏற்பாடுகள் திருத்திய சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன எனவும், கம்பனிகள் குற்றம் புரிந்துள் ளதாகக் காணப்படின், புதிய சட்ட அமுலாக்கத்தின் பின் அவை மூடப்படவேண்டுமெனவும் CAO/AO கூறினார்.
	இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் **நிதி, திட்டமிடல் அமைச்சு**	**2014 மார்ச் 04**
1.	கூட்டுத்தாபனத்தின் எல்லாப் பங்கு களும் சட்டரீதியாக அரசாங்கத்தின் சார்பில் திறைசேரிச் செயலாளரின் பெயருக்கு உரித்தாக்கப்பட்டிருத்தல் வேண்டும் எனப் பிரகடனப்படுத்தும் தீர்ப்பொன்று உயர் நீதிமன்றத்தினால்	ரூபா 2.4 பில்லியன் தொகையை உறுதி செய்வதற்குச் சம்பந்தப்பட்ட விபரங்களை முன்னைய முகாமைத்து வத்தினால் சமர்ப்பிக்க முடியாமற் போன தொகை தொடர்பான பிரச்சனையொன்று காணப்பட்டிருந்த

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	2009.06.04ஆம் திகதி வழங்கப் பட்டிருப்பதைக் குழு ஆரம்பத்திலேயே அவதானித்தது. வடிசாலைகள் கம்பனி கூட்டுத்தாபனத்தின் மூலக்கம்பனி யாகவிருந்த காலத்தின் போதான இலாபங்களைக் கணக்கிடுமாறும் அக்காலத்திற்குரிய இலாபத்தை வடி சாலைகள் கம்பனிக்குச் செலுத்து மாறும் திறைசேரிப் பிரதிச் செயலாளர் பணிக்கப்பட்டிருந்தார். மீதிகளின் உறுதிப்பாடற்ற நிலையில், நிதிக் கூற்றுக்களில் கூறப்பட்டவாறு வடி சாலைக் கம்பனிகளிடமிருந்து பெறப் படவேண்டிய நிலுவைத் தொகையின் முழுமைத்தன்மை, நிலவுகை மற்றும் துல்லியத்தன்மை பற்றிக் கணக்காய் வாளர்கள் திருப்தியற்றிருந்தனர் எனக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டினார்.	தென CAO கூறினார். திறைசேரியினு டனான மேலதிகக் கலந்துரையாடல் களின் பின் கிடைக்கப்பெறும் தரவு களுக்கிணங்க மூலக்கம்பனியின் மீளக் கணக்கிடப்பட்ட இலாபத்தை உயர் நீதிமன்றிற்குச் சமர்ப்பிப்பதற்கான தீர் மானமொன்றை அவர்கள் மேற் கொள்ளமுடியும் எனக் கணக்காய் வாளர் தலைமை அதிபதி குழுவிற்குத் தெரிவித்தார். இவ்விடயத்தை உயர் நீதிமன்றுடன் முடிவுறுத்திய பின் அறிக் கையொன்றைக் குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு குழு CAO/AO வை வேண்டிக்கொண்டது.
2.	இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தின் பல முறைமை மற்றும் கட்டுப்பாடு பற்றிய குறைபாடுகள், ❖முறைமை வரையறை, ❖தகவல் தொழில்நுட்ப முறைமை மற்றும் பொதுப்பதிவேடு ஆகியவற் றினால் ஆக்கப்பெற்ற அறிக்கைகளுக் கிடையிலான வேறுபாடுகள், ❖காலாவதியான காப்புறுதிக் கொள்கைகள் தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட குறைந்த கட்டுப்பாடு, ❖மீள்காப்புறுதி ஆகியன காணப்பட்டிருந்தமை பற்றிக் குழு அவதானித்தது.	முதன்வரிசைக் கணக்கிடல் முறைமை கள் மற்றும் முதலீட்டு முறைமைகள் ஆகிய இரண்டு முறைமைகளையும் நடைமுறைப்படுத்துவதற்கென ஏற் கனவே நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருந்தது என CAO/AO கூறினார். மேற்சொன்ன முறைமைகள் மற்றும் அதன் அமுலாக்கங்கள் பற்றிய அறிக்கையொன்றைக் குழுவிற்கு ஆறு மாத காலத்தினுள் சமர்ப்பிக்குமாறு CAO/AO வைக் குழு பணித்தது.
3.	முறையான வாடகை உடன்படிக்கை களை மேற்கொள்ளுதல், உடன்படிக்	நேரகாலத்தோடு முடிவுறுத்தப்பட்ட ஓர் உடன்படிக்கையைத் தவிர, சகல

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	கைகளைப் புதுப்பித்தல் ஆகியவை பற்றிய தற்போதைய நிலைமையைக் குழு விசாரித்தது.	வாடகை உடன்படிக்கைகளும் முடிவு றுத்தப்பட்டிருந்தன எனவும் அது விரைவில் முடிவுறுத்தப்படும் எனவும் CAO/AO கூறினார். சகல உடன் படிக்கைகளையும் இரண்டுமாத காலத் தினுள் முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு CAO/AO வைக் குழு வேண்டிக்கொண்டது.
4.	இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத் தாபனத்துடன் மீள்காப்புறுதி உடன் படிக்கையொன்றை மேற்கொண்டிருந்த போலியான தரகருக்கெதிராகக் கூட்டுத்தாபனம் ஏதேனும் நடவடிக்கை மேற்கொண்டிருந்ததா எனக் குழு விசாரித்தது. இலங்கைக் காப்புறுதிச் சபையிடம் இந்தத் தரகரைப் பற்றி முறையிட்ட பின் அவரது சேவைகள் 2011ஆம் ஆண்டிலிருந்து முடிவுறுத்தப் பட்டிருந்ததோடு, அத்தகைய போலி யான தரகரின் பெயரை இலங்கைக் காப்புறுதிச்சபை பிரபல்யப்படுத்திய துடன் அவரின் அனுமதிப்பத்திரமும் இரத்துச்செய்யப்பட்டிருந்ததென CAO/AO கூறினார்.	அத்தகைய நபர்கள் பல்வேறு பெயர் களில் தோற்றமளித்திருக்கலாம் எனக் குழு அபிப்பிராயப்பட்டதுடன் போலி யான தரகரைப்பற்றிக் குற்றப் புலானாய்வுத் திணைக்களத்திடம் முறையான முறைப்பாடொன்றை மேற் கொண்டு அதன் பிரதியொன்றைக் குழுவிற்கு அனுப்பிவைப்பதுடன் அதற் குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்களுக் கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் CAO/AO வைக் குழு வேண்டிக்கொண்டது.
5.	காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலிருந்து வியாபாரத்தைப் பெற்றுக்கொள்ளும் போது அரசாங்கத்தின் சார்பில் அனுசரணையாளர்களாகத் தோற்ற மளிக்கும் தரகர்கள்/முகவர்கள் ஆகி யோருக்கு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தரகுப்பணம் செலுத்திக்கொண்டிருந்தமைக்கான சந்தர்ப்பங்கள் காணப்பட்டிருந்தமை யைக் குழு அவதானித்தது.	அத்தகைய அரசாங்க நிறுவனங்களின் பட்டியலொன்றைக் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு CAO/AO வைக் குழு பணித்தது.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
6.	நட்டஈட்டுப் பணத்தைச் செலுத்தித் தீர்ப்பதற்கென இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் எடுக்கப்பட்ட காலப்பகுதி பற்றிக் குழு வினவியது.	பொதுக்காப்புறுதிகளின் நட்டஈட்டுப் பணத்தை அவர்கள் ஒருவார காலத்தினுள் செலுத்த முடியும். எனினும், நட்ட ஈடு கோருபவரினால் வழங்கப்பட்ட மூல ஆவணங்களில் ஏதேனும் உரிமை காலாவதியாதல்கள் அல்லது தவறுகள் காணப்பட்டிருப் பின், அது தாமதிக்கலாம் என CAO/AO கூறினார்.
	இலங்கை உள்ளூராட்சி நிறுவகம் **உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு**	**2014 மார்ச் 05**
1.	நிறுவனத்தின் பணிகள் தொடர்பாகப் பின்வரும் அவதானங்கள் மேற் கொள்ளப்பட்டன. (i) கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்ட அனேக விடயங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கி ஒழுகாமை தொடர்பான விடயங்கள் காணப்பட்டன. (ii) கணக்காய்வு வினாக்களுக்குப் பதிலளிப்பதில் காலதாமதங்கள் ஏற்பட்டிருந்தன.	(i) எதிர்காலத்தில் அரசாங்கச் சுற்று நிரூபங்களைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல். (ii) குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதியினுள் கணக்காய்வு வினாக் களுக்குப் பதிலளிப்பதை உறுதி செய்தல் மற்றும் (iii) சகல கணக்காய்வு வினாக்களையும் ஆளுகைச்சபை முன்னிலையில் சமர்ப்பித்தல் மற்றும் எதிர்காலத்தில் அத்தகைய வினாக்கள் மீண்டும் கேட்கப்படாதிருப்பதை உறுதிசெய்தல். (iv) அரசாங்கத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு முரணாக மேற் கொள்ளப்பட்டதாகக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கக் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்ட சகல விடயங்களையும் சீர்ப்படுத்துதல்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		மற்றும் அவ்விடயங்கள் பற்றிய விபரமான அறிக்கையொன்றை இரண்டு வாரகாலத்தினுள் குழுவிற்குச் சமர்ப்பித்தல் ஆகியவை தொடர்பாக CAO/AO பணிக்கப்பட்டார்.
2.	PED-12 சுற்றுநிரூபத்திற்கு முரணாகக் கருத்திட்ட நிதிகளிலிருந்து அலுவலர் களுக்கான படிகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன.	ஆளுகைச்சபையின் அங்கீகாரத்தின் பேரில், 2011ஆம் ஆண்டில் ஒவ்வொரு அலுவலருக்கும் ஊக்குவிப்பாக ரூபா.15,000/- செலுத்தப்பட்டிருந்தது டன் 2013ஆம் ஆண்டின் முடிவில் ஆளுகைச் சபையின் அறிவுறுத்தல் களின் பேரில் மிகை அறவிடப் பட்டிருந்ததெனவும் கூறப்பட்டது. மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு களுக்கான திறைசேரியின் தழுவல் அங்கீகாரம் மற்றும் தேவையெனில், கருத்திட்ட நிதிகளிலிருந்து எதிர்கால ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளுக்கான முன் அங்கீகாரம் ஆகியவற்றை நிறுவனம் பெற்றுக்கொள்ளவேண்டி யிருந்தது. நிறுவனத்தின் உள்ளக நிதிக்கட்டுப்பாடு மேலும் உறுதியாக் கப்படவேண்டியுள்ளது என வலியுறுத் தப்பட்டது.
3.	2010ஆம் ஆண்டில் விநியோகிக்கப் பட்ட திறைசேரி சுற்று நிரூபத்திற் கிணங்க, அரசாங்கத்துறைக் கணக் கீட்டு நியமங்களை உள்ளூர் அதிகாரசபைகளும் பிரயோகிக்க வேண்டியிருந்தது. ஆனால் பரிசீலிப் புத் திகதியில் உள்ளவாறு அது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வில்லை.	2013ஆம் ஆண்டிலிருந்து அந்த நியமங்களைப் பிரயோகிக்குமாறும், அந்த நியமங்கள் பற்றி உள்ளூர் அதிகாரசபைகளின் பணியாட்களைப் பயிற்றுவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறும் CAO/AO பணிக்கப் பட்டார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		அவ்விடத்தின் முன்னேற்றம் பற்றிய அறிக்கையொன்றைக் குழுவிற்கு இரண்டுமாத காலப்பகுதியில் சமர்ப் பிக்குமாறும் அவர் பணிக்கப்பட்டார்.
4.	அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குப் புறம்பாக ஊடக நிபுணத்துவ ஆலோசகர் ஒருவர் ஆளுகைச் சபையின் அங்கீகாரத்துடன் ஆட் சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் 2010/2011 ஆகிய வருடங்களுக்கான சம்பளங்களும் படிகளும் செலுத்தப் பட்டிருந்தன.	CAO/AO கூறியதன் பிரகாரம் ஆரம்பத்தில் அவர் ஒப்பந்த அடிப்படையில் ஒருவருடகாலத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் புதுப்பித்தல் அடிப்படையில் அவர் தொடர்ந்து பணியாற்றியிருந்தார். ஒப்பந்த அடிப்படையிலான நியமங் களாக இருப்பினும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீ காரம் பெறப்படவேண்டுமெனக் குழு வலியுறுத்தியது. ஆட்சேர்ப்புத் திட்டத் திற்கிணங்க விடயத்தை மிக விரைவில் ஒழுங்காக்குவதற்கு CAO/AO உறுதியளித்தார்.
5.	நிறுவனத்தில் சட்ட ஆலோசகர் ஒருவர் ஏற்கனவே பணிபுரிந்துகொண்டிருந்த போதிலும் ஆளுகைச்சபையின் அங்கீ காரத்தின்பேரில் மற்றொரு சட்ட ஆலோசகர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் சம்பளம் ரூபா 320,000/- அவருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.	அது ஒரு முறையற்ற நடைமுறையாக இருந்ததெனக் கூறும் பணிமுறைக் கண்டன அறிவிப்பைப் பணிப் பாளருக்கு அனுப்பிவைக்குமாறும் அது ஏன் மேற்கொள்ளப்பட்டிருந்தது என்பதற்கான அவரது பதில்களை அனுப்பிவைக்குமாறும் சட்ட ஆலோசகருக்குச் செலுத்தப்பட்ட தொகை ஆளுகைச்சபையிலிருந்து ஏன் அறவிடப்படக்கூடாது என்பதற்கான காரணங்களை வழங்குமாறும் அதன் பிரதியொன்றை இரண்டு வார காலப்பகுதியில் அரசாங்கப்பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் செயலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் CAO பணிக்கப்பட்டார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
6.	2000ஆம் ஆண்டில் நிறுவனத்திற்கென நிருவாகக் கட்டிடத்தை நிர் மாணிப்பதற்குக் காணியொன்றை ரூபா.15,111,237/- தொகையில் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெற்று, அண்ணளவாக எட்டு வருடங்களுக்குக் காணி பயனற்றி ருந்ததினால், உடன்படிக்கை இரத்துச் செய்தலுக்குரிய அறவீடுகள், சட்டத்தர ணிகளுக்கான கட்டணங்கள் ஆகிய வற்றைக் கழித்துக்கொண்டதன் பின் ரூபா 11,070,000/- தொகையை நகர அபிவிருத்தி அதிகாரசபை மீளளித்துக் காணியை மீட்டதால் சுமார் 4 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டது.	கட்டிடத்தை நிர்மாணிப்பதற்குத் திறைசேரியிலிருந்து குறித்த நேரத்தில் நிதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்களால் இயலாமல் போய்விட்ட தெனவும், உடன்படிக்கையின் பிர காரம் சொல்லப்பட்ட காணி நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் மீளப்பெறப்பட்டது எனவும் கூறப் பட்டது.
7.	உள்ளூர் அதிகாரசபைகளினது திட்டமிடல் இயலளவு மோசமான நிலைமையில் இருந்ததாகக் குழு சுட்டிக்காட்டியது.	பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உள்ளூர் அதிகாரசபை உறுப்பினர் களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அவர்களைத் தக்கவைத்தல் ஆகியன தொடர்பில் பாரிய சவால்களை அவர்கள் எதிர் நோக்குகின்றனர் எனக் கூறப்பட்டது. உறுப்பினர்களுக்கு அத்தகைய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களைக் கட்டாயமாக் குவதற்கு உள்ளூர் அதிகாரசபைச் சட்டங்களில் அவசியமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் குழு அபிப்பிராயப்பட்டது.
8.	உள்ளூர் அதிகாரசபை அதிகாரிகளுக் கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவது பற்றிக் குழு கலந்துரையாடியது.	பிரதேச செயலக உறுப்பினர்கள் மற்றும் நிருவாக அலுவலர்களுக்கான இணைந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துமாறு CAO/AO பணிக்கப்பட்டதுடன் பயிற்சித் திட்டங்களின் பயனுறுதி மிக்க

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு பிரதேச செயலாளர்கள் மற்றும் பிரதேச சபைத் தலைவர்கள் ஆகியோருக்கிடையிலான வாராந்த ஆலோசனைக் கூட்டங்களை நடாத்து வது கட்டாயமாக மேற்கொள்ளப்பட வேண்டும் எனும் கூட்டுச் சுற்று நிரூபமொன்றை அவர்கள் வழங்க முடியுமெனவும் ஆலோசனை தெரிவிக் கப்பட்டது.
	தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சு	**2014 மார்ச் 06**
1.	பயணவழிக்குரிய அனுமதிப்பத்திரங் களின்றிப் பேரூந்துகள் சேவையில் ஈடுபடும் பல சந்தர்ப்பங்களைக் குழு அவதானித்தது.	நடைமுறையில் உள்ள சட்டத்தின் சில குறைபாடுகள் காரணமாக, அனுமதிப் பத்திரங்களின்றிச் சேவையில் ஈடுபடும் பேரூந்துகளை அதிரடிச் சோதனைக்கு உட்படுத்துவதற்குத் தேசிய போக்கு வரத்து ஆணைக்குழுவிற்குத் தத்து வங்கள் இல்லையென CAO/AO கூறினார். அவர்கள் பொலிசாரிடம் முறைப்பாடொன்றை மட்டுமே மேற் கொள்ளமுடியும். சட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டிய விடயப்பகுதி களைக் கண்டுபிடித்தபின் சட்டத்தைத் திருத்தியமைத்து இரண்டு மாத காலத்தில் அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதென CAO/AO உறுதி யளித்தார். அத்தகைய ஆலோசனை களை ஒருமாத காலப்பகுதியில் குழுவிற்கு அனுப்பிவைக்குமாறு CAO/AO வைக் குழு பணித்தது.
2.	எட்டுச் சந்தர்ப்பங்களில் ஐந்து அலுவலர்களுக்கு ரூபா 20,000 எனும்	CAO/AO கூறியவாறு 2011ஆம் ஆண்டு காலப்பகுதியில், அவர்கள்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	வரையறையை மீறி ரூபா 2,007,500 முற்பணத்தைத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு செலுத்தியிருந்தது.	பல்வேறு காரணங்களினால் வரை யறையை மீறி முற்பணத்தைச் செலுத்தியிருந்தனர். ரூபா.20,000/- எனும் இந்த வரையறையில் முற் பணத்தை வழங்கும்போது அவர்கள் தற்போது பிரச்சனைகளை எதிர் கொள்ளவேண்டியுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். அதன்பிரகாரம் திறைசேரிச் சுற்றுநிரூபங்கள் திருத்தி யமைக்கப்படவேண்டும் எனக் குழு அபிப்பிராயப்பட்டது.
3.	நுவரெலிய மாவட்ட அலவலகம் மற்றும் விடுமுறை விடுதி ஆகியவற்றை நிர்மாணிப்பதற்கென ரூபா.2,977,179 ஐ தேசிய போக்கு வரத்து ஆணைக்குழு செலவு செய்திருந்தபோதிலும், மாவட்ட அலுவலகம் மற்றும் விடுமுறை விடுதி என்பன கௌரவ அமைச்சரின் உத்தியோகபூர்வ பாவனைக்கென ஒதுக்கப்பட்டுள்ளதென நிரல்கள் அமைச்சு கூறிக் கட்டிடத்தைத் திருத்தி யமைத்ததுடன் மின்சாரக் கணக்குப் பட்டியல்களையும் செலுத்தித் தீர்த்திருந்தது.	தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவினால் வழங்கப்பட்ட விளக்கம் பற்றிக் குழு திருப்தியடையவில்லை யாதலால், இவ்வியடம் பற்றிய விபரமான அறிக்கையொன்றைக் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு CAO/AO வைப் பணித்தது.
4.	2011ஆம் ஆண்டில், கேள்வி கோரல்களின் பின்னர் கொட்டாவ - காலி அதிவேக நெடுஞ்சாலைக்காக வீதி அனுமதிப்பத்திரங்கள் ஐந்து விநியோகிக்கப்பட்டிருந்தன. வருட முடிவின்போது பஸ்களின் எண் ணிக்கை 13இனால் அதிகரிக்கப்பட் டிருந்ததுடன் கேள்வி கோரல்கள் இல்லாமல் 08 மேலதிக வீதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன.	சகல வீதி அனுமதிப்பத்திரங்களும் கேள்வி கோரல்களின் பின்னர் வழங்கப்பட்டதாக CAO/AO குறிப் பிட்டதுடன் வீதி அனுமதிப் பத்திரங்களை விநியோகிப்பதில் நடைமுறைப்படுத்தப்படும் தெரிவு அடிப்படையினையும் விளக்கினார். இந்த விடயம் தொடர்பாக விரிவான அறிக்கையினைக் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு CAO/AO வினைக் குழு பணித்தது.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	கூட்டுறவு மொத்த விற்பனவுத்தாபனம் (CWE) **கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு**	**2014 மார்ச் 07**
1.	11 கொன்வேயர் மோட்டர்கள் தொலைந்தமையினால் ஏற்பட்ட நட்டமான ரூபா 5,095,455வினை அதற்கான பொறுப்புடைய உத்தி யோகத்தர்களிடமிருந்து அறவிடாமல் அந்த நட்டத்தினைப் பதிவழிப்பதற் கான நடவடிக்கைகளைக் கூட்டுறவு மொத்த விற்பனவுத் தாபனம் மேற்கொண்டிருந்தது.	இக்காலப்பகுதியில் அந்த மோட்டர் களுக்குப் பொறுப்பாக இருந்த உத்தியோகத்தர்கள், இயந்திரங்கள் தொலைந்த காலப்பகுதி, பொலி சாருக்கு முறைப்பாடு செய்யாமைக் கான காரணம் ஆகியவை உள்ளடங் கலாக விரிவான அறிக்கையினைக் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு CAO/AO பணிக்கப்பட்டார். நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் அன்றைய நாள் கூட்டத்தின்போது விசாரிக்கப்பட்ட விடயங்கள் தொடர் பாகவும் குறிப்பாக 11 கொன்வேயர் மோட்டர்கள் தொடர்பாகவும் எடுக்கப் பட்ட நடவடிக்கைகள் பற்றி CWEவின் முன்னை நாள் தலைவர்கள் அனைவருக்கும் கடிதங்களை அனுப்புமாறும் அதன் பிரதிகளைக் குழுவிற்கு அனுப்புமாறும் பணிக்கப் பட்டது.
2.	198 நிறுவனங்கள்/ நபர்களிடமிருந்து வரவேண்டிய ரூபா 124,551,893 வாடகை வருமான அறவீட்டின் தற்போதைய முன்னேற்றம் பற்றி விசாரிக்கப்பட்டது.	மேற்குறிப்பிடப்பட்ட தொகையில் 41 மில்லியன் ரூபா லங்கா சதொசவிட மிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது எனவும் அறவிடப்பட வேண்டிய தொகைக்குச் சமமான தொகைகளைக் கொண்ட பங்குகளை விநியோகிப் பதற்குச் சதொச இணங்கியுள்ளதாகவும் இராணுவத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய 22 மில்லியன் ரூபாவினை இராணுவத்தினால் கொடுத்துத் தீர்க்க முடியாத நிலை காணப்படுகின்றமை

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		யினால் அது பதிவழிக்கப்பட வேண்டியிருந்ததாகவும் CAO/AO குறிப்பிட்டார். எஞ்சிய தொகையான 56 மில்லியன் ரூபாவும் பகுதியாக அறவிடப்பட்டிருந்தது. ஆனால் கணக்கீட்டுத் தவறுகளினால் இது வரையில் அறவிடப்பட்ட தொகை யினை உறுதியாகக் குறிப்பிட முடியாமல் இருப்பதுடன் கணக் கிணக்கச் செயன்முறை பூர்த்தியானதன் பின்னர் அறவிடப்படவுள்ள எஞ்சிய தொகையினை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
3.	ரூபா 14,501,998 பெறுமதியுடைய அரிசி பதனிடும் இயந்திரங்கள் 140 அடங்கிய தொகுதியானது களஞ் சியத்தில் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றது.	தாம் கேள்வி கோரல்களை வழங்கிய போதிலும் பணிப்பாளர் சபையானது இயந்திரங்களைத் தேசத்துக்கு மகுடம் கண்காட்சியின் போது சுயவேலை வாய்ப்புப் பெற்ற நபர்களுக்கு விநியோகிப்பதற்குத் தீர்மானித்ததா கவும் ஆனால் அவற்றினைப் பயன்படுத்துவதற்கு ரூபா. 30,000 – 40,000 வரை செலவு ஏற்படுத்தக்கூடிய இன்னுமொரு கருவியானது பொருத்தப் பட வேண்டுமெனவும் AO குறிப்பிட்டார். தொழில்நுட்பக் குழு ஒன்றினை நியமிக்குமாறும் இயந்திரங் களின் பிரச்சினைகள் உள்ளடங்கலாக தொழில்நுட்பக் குழுவினால் அதன் பின்னர் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அறிக்கை ஒன்றினை அரச தொழில் முயற்சியாண்மைக் குழுவுக்குச் சமர்ப்பிக்குமாறும் பணிக்கப்பட்டது.
4.	2009ஆம் ஆண்டிலும் 2010ஆம் ஆண்டிலும் வெதுப்பக உற்பத்திப் பொருட்களின் விற்பனை தொடர்பில் ரூபா. 1,321,285 தொகையுடைய மோசடி இடம்பெற்றிருந்ததுடன்	மோசடியில் சம்பந்தப்பட்ட 02 உத்தியோகத்தர்கள் வேலையில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருப் பதாகவும் நட்டத்தினை அவர்களுடைய பணிக்கொடை மற்றும் சேமலாப

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	இற்றைவரையில் அதனுடன் சம்பந்தப் பட்ட உத்தியோகத்தர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.	நிதியங்களிலிருந்து அறவிட முடியும் எனவும் CAO/AO குறிப்பிட்டார்.
5.	வருகைப் பதிவேட்டில் கையொப்ப மிடாத மேற்பார்வை உத்தியோகத்தர் ஒருவர் 2013 ஜூலை வரையில் அரச பொறுப்பு முயற்சிகள் சுற்று நிருபத்திற்கு மாறாக ரூபா. 1,990,999 தொகையுடைய கொடுப்பனவினைப் பெற்றுக்கொண்டுள்ளார்.	இரண்டு ஆலைகளையும் பராமரித் தமைக்காக இந்த மேற்பார்வை உத்தியோகத்தருக்குக் கொடுப்பனவாக ரூபா. 50,000 செலுத்தப்பட்டதெனவும் தற்போது விரல் அடையாள இயந்திர மானது வருகைப்பதிவினைக் குறிப் பதற்காகப் பொருத்தப்பட்டுள்ளதுடன் இவ்வாறான குறைபாடுகளைத் தவிர்ப் பதற்காக இரண்டு ஆலைகளும் கணினிமயப்படுத்தப்பட்டு அவற்றுக்கு CCTV கமராக்கள் பொருத்தப் பட்டிருப்பதாகவும் குறிப் பிடப்பட்டது.
	இலங்கை மின்சார சபை **வலு சக்தி அமைச்சு**	**2014 மார்ச் 18**
1.	பரீட்சிப்புக் காலப்பகுதியின்போது இலங்கை மின்சார சபையானது கணிசமான நிதி முன்னேற்றத்தினை அடைந்திருந்ததாகவும் நுரைச்சோலை அனல் மின் நிலையங்கள் பூர்த்தி செய்யப்பட்டதாலும் போதிய மழைவீழ்ச்சி கிடைத்தமையாலும் பெருமளவிற்கு மின்சார நெருக்கடி தீர்க்கப்பட்டிருந்ததாகவும் CAO குறிப்பிட்டார். அனல்மின் நிலையங்கள் 1 மற்றும் 2 ஆகியவை பிரதான மின் தொகுப்புடன் இணைக்கப்பட்டதும் அலகு ஒன்றிற்கான செலவினை 16 ரூபா வரையில் குறைக்கும் வகையில்	

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	**COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்**
	எரிபொருள் சீராக்கல் கட்டணத்தினை அகற்றுமாறு தாம் அரசாங்கத்திற்குப் பரிந்துரைப்பதைக் கருத்தில் கொண்டுள்ளதாகவும் குறிப் பிடப்பட்டது.	
2.	நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் அடிக்கடி செயற்பாடுகள் தடைப்படுவதற்கான காரணங்கள் தொடர்பாகக் குழு விசாரித்தது.	மின் ஒடுக்கியிலே உள்ள சில குழாய்களிலே நுண்ணிய வெடிப்புக்கள் ஏற்பட்டமையினால் கடல் நீர் கசிந்ததென்றும் உரிய முறையில் பொருத்துகைகள் மேற்கொள்ளப் படாமையினாலேயே இந்த வெடிப்புக்கள் ஏற்பட்டதேயன்றித் தரக்குறைவான உபகரணங்களினால் அல்ல எனவும் CAO/AO குறிப்பிட்டார். பொறி 2 மற்றும் 3 இலே வருடாந்தப் பரிசீலிப்புக்களை ஒடுக்கிகளின் மீது மேற்கொள்வதற்கும் அந்தப் பொறிகளின் குழாய்களைப் பதிலீடு செய்வதற்கும் சீன அரசாங்கம் உறுதிமொழி வழங்கியிருந்தது.
3.	அனல்மின் நிலையக் கருத்திட்டத்திற்கு ஏற்பட்ட பாரிய செலவு தொடர்பாக விரிவான விளக்கத்தினைக் குழு கோரியது.	பணியின் நோக்கெல்லையிலே உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள், கள அபிவிருத்தி வேலைகள், மீள் குடியேற்றச் செயற்பாடுகள் போன்ற விடயங்களை உள்ளடக்கியமையினால் ஒட்டுமொத்தக் கருத்திட்டத்தினதும் மொத்தச் செலவில் US $ 1341 மில்லியன் வரையில் அதிகரிப்பு ஏற்பட்டது. அனல்மின் நிலையங்கள் பற்றிய முன் அனுபவம் இல்லாத காரணத்தினால் இலங்கை மின்சார சபையானது காலத்திற்குக் காலம் பணியின் நோக்கெல்லையினை மாற்றியிருந்தது.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
4.	கருத்திட்டத்தின் சூழலியல் தாக்கத் தினைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிக் குழு விசாரித்தது.	உருவாக்கப்படுகின்ற சாம்பல்களினை 99.5% பிடித்து வைக்கும் ஆற்றலு டைய நிலைமின்னியல் படியக் கருவிகள் பொருத்தப்பட்டிருந்தது. மேலும் அமிலத்தினை உருவாக்கக் கூடிய கந்தகவீரொட்சைட்டு வாயுவினைப் பிடித்துவைப்பதற்கு கடல்நீர் விசிறியொன்றும் பயன் படுத்தப்படுகின்றது. மேலும் நாட்டினுள்ளே தூசுகள் விசிறப் படுவதைத் தடுப்பதற்குக் காற்றுத்தடை ஒன்றும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.
5.	நிலைமைகளைச் சீர்திருத்துமாறு முன்னைய குழுக் கூட்டங்களில் பல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட போதிலும் நிறுவனத்தின் மனிதவளப் பிரிவிற்குப் பொறியியலாளர் ஒருவரே இன்னும் தலைவராக இருக்கின்றார்.	மனிதவள முகாமைத்துவத்திலோ அல்லது வேறு ஒன்றிலோ விசேடத்துவம் பெற்ற நபரின் மட்டத்திற்கு வேறு ஒரு துறையைச் சேர்ந்த நபரைப் பூரணமாகப் பயிற்று விக்க முடியாது என்கின்ற கருத்தினைக் குழு கொண்டிருக்கின்றது.
6.	ஓய்வுபெற்ற பொறியியலாளர் ஒரு வருக்கு வரையறுக்கப்படாத அளவிற்கு எரிபொருள் வசதி வழங்கப் பட்டிருந்ததா என்பது தொடர்பாகக் குழு விசாரித்தது.	தனக்கு இதுபற்றிய எவ்வித புரிதலும் இல்லை என்பதைக் குறிப்பிட்டு விசாரித்தன் பின்னர் குழுவிற்கு அதுபற்றி அறிக்கையிடுவதற்கு CAO/AO இணங்கினார்.
	வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா சிவில் விமான சேவைகள் அமைச்சு	**2014 மார்ச் 19**
	முன்னைய பரிசீலனைத் திகதி 2014.02.05	இந்தச் சூழ்நிலைக்குப் போதிய மூலதனம் இன்மையே பிரதான

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
1.	நிறுவனத்தினை மோசமான நிதி நெருக்கடிக்கு இட்டுச்சென்றிருந்த பிரதான காரணிகள் தொடர்பாகக் குழு கலந்துரையாடியது.	காரணமாகக் குறிப்பிடப்பட்டது. மேலும் இதன் விளைவாக 12% எனும் உயர் வட்டி வீதங்களில் கடன்களைப் பெறுவதற்குக் கம்பனி நிர்ப்பந்திக்கப் பட்டிருந்தது. எவ்வாறாயினும் CAO/AO குறிப்பிட்டதன்படி, கடந்த நான்கு தசாப்தங்களாக விமானத் தொழிற்றுறையிலே முதலீட்டின் மீதான சராசரித் திரும்பலானது 2%ஐ விடக் குறைவாகவே காணப்படுகின்றது. இருந்தபோதிலும், நட்டத்திற்கான எல்லையினைக் குறைக்கக்கூடியதாக இருந்தமை யினால் கடினமான சூழ்நிலையிலும் சிறப்பாகச் செயற்பட்டிருப்பதாக CAO/AO குறிப்பிட்டார்.
2.	இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்துக்கு நிலுவையாக இருக்கும் தொகை பற்றிக் குழு கலந்துரையாடியது.	இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்துக்குச் செலுத்தப்பட வேண்டிய நிலுவையாக இருக்கும் மொத்தத் தொகையானது ரூபா. 4.4 பில்லியனாகும். மேலும் நிலுவைத் தொகையிலே இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது 12% வட்டியினை அறவிடுகின்றது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்துக்கு நிலுவையாக இருக்கும் மொத்தத் தொகை பற்றி ஒரு அறிக்கையினை அனுப்புமாறு CAO/AO வினைக் குழு பணித்ததுடன் அறவிடப்பட்ட வட்டியினைக் கட்டணப்பட்டியல் பிரதிகளுடன் அனுப்புமாறும் பணித்தது.
3.	மிஹின் லங்கா சேவை வழங்குகின்ற மொத்தமான 10 விமானப் பயணச் சேவைகளுள் 2 சேவைகள் மாத்திரமே	துபாய் மற்றும் சார்ஜா தவிர்ந்த சகல விமான மார்க்கங்களையும் இலாப கரமானதாக ஆக்க முடியும் என

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	இலாபமீட்டுபவையாக இருப்பதுடன் சீசெல்ஸ் போன்ற நாடுகளுக்கு மேற்கொள்ளும் விமானச்சேவை US $ 214000 நட்டத்தில் இயங்கு கின்ற விடயம் குழுவின் சில உறுப்பினர்கள் மத்தியில் கரிசனையை ஏற்படுத்தியது.	முன்னாள் CEO குறிப்பிட்டார்.
4.	குறைந்த கட்டணத்தில் இயங்குகின்ற ஒரு விமானச்சேவையாக இருந்து கொண்டு மேலதிக செலவினை ஏற்படுத்தும் வகையில் பயணிகளுக்கு ஏன் உணவு வழங்கப்படுகின்றது எனக் குழு விசாரித்தது.	உணவினை வழங்கும் கட்டணமானது பயணக்கட்டணத்துடன் சேர்க்கப் பட்டுள்ளதால் அது நிறுவனத்தின் நட்டத்திலே தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கவில்லை எனக் குறிப்பிடப்பட்டது.
5.	மொத்தச் செலவிலே குத்தகை, எரிபொருள், ஊழியம் போன்றவைக் கான செலவுகள் கலந்துரையாடலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.	மொத்தச் செலவிலே 49% செலவானது எரிபொருளுக்காக செலவிடப்படுகின் றது என்றும் மொத்தச் செலவிலே குத்தகைக்கும் ஊழியத்திற்குமான செலவுகள் முறையே 8.8% மற்றும் 5%ஆக இருந்ததாகவும் CAO/AO குறிப்பிட்டார்.
6.	இயந்திரத்தினை மறுசீரமைப்பதற்காக பாரிய தொகையான 1.2 பில்லியன் செலவிடப்பட்டமைக்கான காரணங் கள் பற்றி விசாரிக்கப்பட்டது.	இயந்திரத்தினைத் திருத்துவதற்குப் பொதுவாக எங்கேயும் 2.5 மில்லியனுக்கும் 4 மில்லியனுக்கும் இடைப்பட்ட செலவு ஏற்படுவதாகவும் குறிப்பிட்ட இயந்திர மறுசீரமைப் பின்போது தேவைப்பட்ட சந்தர்ப் பத்திலே செலுத்துவதற்குப் போதிய நிதிகள் இல்லாத காரணத்தினால் மேலதிகமாக 1.1 மில்லியன் செலவு ஏற்பட்டதாகவும் CAO/AO குறிப் பிட்டார். அக்காலகட்டத்தில் மேலதிக செலவினைத் தாங்கியவாறு குத்தகைக்குப் பெறப்பட்ட இயந்திரத்தைப் பயன்படுத்தி மிஹின் செயற்படவேண்டியிருந்தது.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
7.		மிஹின் லங்காவுக்கும் ஸ்ரீலங்கன் விமான சேவைக்கும் இடையில் செலவின் சதவீத ஒப்பீட்டினை ஏனைய பிராந்திய விமான சேவைகளுடன் ஒப்பிட்டு வழங்குமாறு CAO/AOவினைக் குழு பணித்தது.
	இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் **அரச வளங்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு**	**2014 மார்ச் 20**
1.	ஆரம்பத்திலே குழுவானது அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பின்வரும் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டியது. ❖ கூட்டிணைத் திட்டமானது வருடாந்தம் இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. ❖ செயற்றிட்டமானது தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. ❖ பதவிநிலைக்கான அங்கீகாரம் பெறப் பட்டிருக்கவில்லை. ❖ கொள்வனவுத்திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை.	உயர் முகாமைத்துவ மட்டத்தில் உள்ள சகல உத்தியோகத்தர்களும் அண்மை யில் பதவியேற்ற காரணத்தினால் கூட்டிணைத் திட்டத்தினை இற்றைப் படுத்துவதில் தாமதம் ஏற்பட்டிருந் ததாகவும் ஆனால் தற்பொழுது அவர்கள் 2014 - 2018ஆம் ஆண்டு காலப்பகுதிகளுக்கான கூட்டிணைத் திட்டத்தினைத் தயாரிக்கும் செயன் முறையில் ஈடுபட்டிருப்பதாகவும் அத் துடன் செயற்றிட்டமும் வரவு செலவுத் திட்டமும் ஏற்கனவே தயாரிக்கப் பட்டிருந்ததாகவும் AO குறிப்பிட்டார். முகாமைத்துவ சேவைகள் திணைக் களத்தினால் பதவிநிலையானது ஏற் கனவே அங்கீகரிக்கப்பட்டிருந்ததாக வும் ஆட்சேர்ப்புத் திட்டத்தினையும் நடவடிக்கைமுறைத் திட்டத்தினையும் அவர்கள் தற்போது தயாரித்து வருவதாகவும் அதனை 3 மாத காலத்தினுள் பூர்த்தியாக்க முடியு மெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். இதனை 3 மாத காலத்தில் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு CAO/AO பணிக்கப் பட்டார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
2.	2010ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த அறிக்கைள் பாராளுமன்றத்தில் சமர்ப் பிக்கப்பட்டிருக்கவில்லை என்பதைக் குழு அவதானித்தது. 2010 மற்றும் 2011ஆம் ஆண்டு அறிக்கைகளை அமைச்சு பரிசீலித்த பின் அவை மீண்டும் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பப் பட்டிருந்ததாக CAO குறிப்பிட்டார். அவ்வாறான அறிக்கைகளை பரி சீலித்து சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு ஒரு மாதத்தினுள் திருப்பி அனுப்பு வதற்கு உடனடி நடவடிக்கைகளை அமைச்சு எடுப்பதை CAO உறுதிப்படுத்த வேண்டுமெனக் குழு குறிப்பிட்டது.	நிலுவையாக இருக்கின்ற வருடாந்த அறிக்கைகளை 3 மாத காலத்தினுள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு CAO/AOவினைக் குழு பணித்தது.
3.	அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் சபையினைச் சேர்ந்த ஒருவருக்கெதிராக ஜனாதிபதி விசா ரணைப் பிரிவினால் விசாரணை மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அவரைப் பதவியிலிருந்து அகற்றுமாறு ஜனாதிபதி செயலகத்திலிருந்து பணிப்புரை வழங்கப்பட்டதா என்பது தொடர்பாகக் குழு CAOவினை விசாரித்தது.	சபை உறுப்பினர் ஒருவருக்கெதிராக ஜனாதிபதி விசாரணைப் பிரிவினால் விசாரணையொன்று நடாத்தப்பட்டதா கவும் அது தொடர்பான அறிக்கை யானது கௌரவ அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததாகவும் ஆனால் சபை உறுப்பினரை அகற்றுவதற்கான பணிப்புரை தமக்குக் கிடைத்திருக்க வில்லை எனவும் CAO குறிப்பிட்டார். குறிப்பிட்ட சபை உறுப்பினர் ஜனாதிபதி செயலகத்திற்கு மேன் முறையீடு ஒன்றினை அனுப்பியிருந் ததாகவும் அதன்பின்னர் அது தொடர்பாக எந்த அறிவித்தலும் கிடைக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். மேலதிகமாக விசாரித்த போது பணிப்பாளர் சபை உறுப்பினர் களை அகற்றுவதற்கான அதிகாரம் தனக்கில்லை என CAO குறிப்பிட்டார். சபை கலந்துரையாடியதன் பின்னர் கௌரவ அமைச்சருடன் கலந்துரை

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		யாடிப் பொருத்தமான நடவடிக்கை களை எடுக்குமாறும் குழுவிற்கு அறிக்கையிடுமாறும் CAO பணிக்கப் பட்டார்.
4.	கிரகரி மாவத்தையில் அமைந்துள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான காணி யின் கொடுக்கல் வாங்கல் தொடர்பான பின்வரும் குறைபாடுகளைக் குழு அவதானித்தது. 03 ரூட்களும் 37.12 பேர்ச்சஸ்களும் விஸ்தீரணமுடைய மேற்குறிப்பிட்ட இந்தக் காணி 1993 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அரச பெருந் தோட்டக் கூட்டுத்தாபனத்துக்கு மாற்றப்பட்டது. பின்னர் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனமானது அக்காணியை இலங்கை வங்கியிலே அடகுவைத்து 2002ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 50 மில்லியன் ரூபா கடனைப் பெற்றுக்கொண்டது. அதன் பின்னர் 2004ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனமானது மேற்கூறப்பட்ட காணியினைப் பிரிடிஸ் ஓவசீஸ் ரியல்டி பிரைவேட் லிமிடட் எனும் கம்பனிக்கு மேற்கூறப்பட்ட அடகினை மீட்டல் தொடர்பான நிபந்தனைகளுக்கு உட் பட்டதாக 243 மில்லியன் ரூபாவிற்கு விற்றிருந்தது. இந்தக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக 11.9 ரூபாவினை மாத்திரமே அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் பெற்றிருந்தது. மேலும் நிதிக்கூற்றுக்களிலே இந்தக் கொடுக் கல் வாங்கல் தொடர்பான எந்த விபரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. மேலும் மீள்விற்பனை மற்றும்	மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பாக நடைபெற்ற ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல் பற்றிய விரிவான அறிக்கையினை ஒருமாத காலத்தினுள் வழங்குமாறு CAO/AO வினைக் குழு பணித்தது.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	அடகினை மீட்டல் தொடர்பான விபரங்கள் காணிப்பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்டிருக்கவில்லை.	
5.	அரச பெருந்தோட்டக் கூட்டுத் தாபனத்துக்குச் சொந்தமான 11,905.08 ஹெக்டெயர் விஸ்தீரணமுடைய காணியானது அரச பெருந்தோட்டக் கூட்டுத் தாபனத்தின் பராமரிப்பிற்கு அப்பாற் பட்டதாக இருந்ததாகக் குழுவிற்குத் தெரிவிக்கப்பட்டது. மேலும் இவ்வாறான காணிகளின் தற்போதைய பராமரிப்பாளர்களை அடையாளம் காண்பதற்கு எவ்வித சான்றுகளும் இல்லை. மூல ஆவணங்கள் இல்லாத காரணத்தினால் அவ்வாறான காணிகளைக் கண்டுபிடிப்பதற்கு இயலாமல் இருப்பதாகவும் இவ்வாறான காணிகளை அடையாளம் காண்பதற்கான ஒரேவழி காணி அளவீடு எனவும் அதற்குப் பெருந்தொகைப் பணம் செலவாகும் எனவும் AO குறிப்பிட்டார்.	குறிப்பிடப்பட்ட காணிகளை அடையாளம் காண்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரசபைகளுடன் கலந்துரையாடல்களை நடாத்தி 3 மாத காலத்தினுள் குழுவிற்கு அறிக்கையொன்றினைச் சமர்ப்பிக்குமாறு CAO/AO பணிக்கப்பட்டார்.
6.	குத்தகை அடிப்படையில் ஹபுகஸ் தென்ன பிளான்டேஷன்ஸ் நிறுவனத்திற்கு மாற்றப்பட்ட காணிகளும் கட்டிடங்களும் எவ்வாறு 100 மில்லியன் ரூபாவிற்கு அவர்களினால் பினான்ஸ் கம்பனிக்கு விற்கப்பட்டது எனக் குழு விசாரித்தது.	அவர்களினால் வழங்கப்பட்ட பதிலையிட்டுக் குழு திருப்தியடையவில்லை. மேலும் இந்த விடயத்தினைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடித் திரட்டிய அறிக்கையொன்றினைத் தலைவரினதும் செயலாளரினதும் ஒப்பத்துடன் 2 மாத காலப்பகுதியில் குழுவிற்குச் சமாப்பிக்குமாறு CAO/AO பணிக்கப்பட்டார்.
7.	கெலபொக்க தோட்டத்திலே உற்பத்தி செய்யப்பட்ட தேயிலைத் தொகுதியில் 7,814,758 ரூபா பெறுமதியுடைய 16,231 கிலோகிராம் தேயிலையானது	இந்த விடயத்திலே குற்றவியல் புலனாய்வுப் பிரிவினர் நடந்துகொண்ட விதத்தினையிட்டு COPE திருப்தியடையவில்லை என்பதை அறிவித்து பொலிஸ்மா அதிபரிடம் முறைப்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	மனிதப்பாவனைக்கு உகந்ததல்ல என்னும் அடிப்படையில் தேயிலை ஏலத்தில் சமர்ப்பிக்கப்படாது தரகர் கம்பனியினால் திருப்பி அனுப்பப் பட்டிருந்ததை அவதானித்த குழு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கெதிராக அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்ததா என விசாரித்தது. சம்பந்தப்பட்ட தோட்ட மேற்பார்வையாளரிடம் தாம் இதற்கான விளக்கத்தைக் கோரியிருந் ததாகவும் அவர் வேறு தோட்டத்திற்கு மாற்றப்பட்டபோது தனது பதவியினை இராஜினாமாச் செய்திருந்ததாகவும் சபை உறுப்பினர் ஒருவர் குறிப் பிட்டார். சான்றுகள் இல்லாத கார ணத்தினால் தம்மால் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுக்க முடிய வில்லை எனக் குற்றவியல் புலனாய் வுப் பிரிவினர் அறிவித்துள்னர் எனவும் குறிப்பிட்டார். எனவே மோசடியானது இடம்பெற்றுள்ளது என்பது தெளி வாகின்றது.	பாடொன்றினைச் சமர்ப்பிக்குமாறு CAO/AO வினைப் பணித்த குழு இந்த விடயம் தொடர்பாக மேலதிக விசா ரணைகளை நடாத்திக் குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரியது.
8.	வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந் தோட்டத்திலிருந்து பெற்றுக்கொள்ளப் பட்ட 20 மில்லியன் ரூபாவிற்கான 2011.13.31ஆந் திகதி உள்ளவாறான 2,000,000 ரூபா தொகையுடைய வட்டியானது கணக்குகளில் குறிப்பிடப் பட்டிருக்கவில்லை என்பதைக் குழு அவதானித்தது. மேலும் இதன்படி இழப்பானது அதே தொகையினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.	இத்தொகையானது செலுத்தப்பட வேண்டிய தொகையாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்ததாகவும் மொத்த மாக 1.1 பில்லியன் கடன்கள் தீர்க்கப்பட வேண்டியிருந்ததாகவும் CAO/AO குறிப்பிட்டார்.
9.	அரச பெருந்தோட்டக் கூட்டுத் தாபன முகாமைத்துவத்துக்கெதிராகக் கிடைத்த பல கணக்காய்வுக் கோப்பு களும் 23 மனுக்களும் விசாரிக்கப்	அரச பெருந்தோட்டக் கூட்டுத் தாபனத்தின் முன்னாள் தலைவரினால் நடாத்தப்பட்ட விசாரணைகள் தொடர் பாக விசாரிப்பதற்காக அவரை அழைப்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	படுவதற்காகக் குழுவினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பின் அவை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபன வளாகத்தில் அமைந்துள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அலுவலகத்திலிருந்து 2013.06.06ஆந் திகதி களவாடப்பட்டிருந்ததையும் குழு அவதானித்தது. கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கூற்றுப்படி, இது தொடர்பாக அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத் தலைவர், நிரல் அமைச்சின் செயலாளர் மற்றும் பொலிசாருக்குக் கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிவித்துள்ள போதிலும் இற்றைவரையில் எந்த விசாரணையும் நடாத்தப்படவில்லை.	பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்த குழு இது தொடர்பாக விசாரணை நடாத்தி அந்த அறிக்கையினைக் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு தற்போதைய CAO/AOவிடம் பணித்தது.
	ஸ்ரீ லங்கா ரெலிகொம் **தொலைத்தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சு**	**2014 மார்ச் 21**
1.	பதவியணியில் கணிசமான அளவு மேலதிக ஊழியர்கள் இருந்ததைக் குழு அவதானித்தது.	தமது உண்மையான ஊழியர் தேவைப்பாடு 6000 எனவும் அமுல்படுத்தப்பட்ட தன்னார்வத்துடன் ஓய்வுபெறல் திட்டமானது (VRS) ஊழியர்கள் பெறுகின்ற உயர் ஊதியம் காரணமாக வெற்றிபெறவில்லை எனவும் CAO/AO குறிப்பிட்டார். பகுப்பாய்வு செய்ததன் பின்னர் உண்மையான பதவிநிலைத் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கையினைச் சமர்ப்பிக்குமாறு CAO/AO பணிக்கப்பட்டார்.
2.	விளம்பரம் சம்பந்தமாக ஏற்பட்ட செலவு பற்றிக் குழு விசாரித்தது.	ஸ்ரீலங்கா ரெலிகொம் மற்றும் மொபிடெல் ஆகியவற்றின் விளம்பர வரவு செலவுத்திட்டங்கள் தொடர்பான

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		அறிக்கையொன்றினைச் சமர்ப்பிக்குமாறு குழு பணித்தது.
3.	WiMax தொழில்நுட்பம் தொடர்பான சேவையினைத் தொடருவதற்குத் தேவைப்படும் அலைவரிசைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஸ்கை நெட்வேர் லிமிரெட்டின் 75% பங்குகளை 108 மில்லியன் ரூபாவிற்கு ஸ்ரீலங்கா ரெலிகொம் கொள்வனவு செய்துள்ள போதிலும் அத்தொழில் நுட்பமானது காலத்திற்கு ஒவ்வாததாக மாறிய காரணத்தினால் போதிய வியாபாரச் செயற்பாடுகள் இன்றிக் கம்பனியானது 02 வருடங்களின் பின்னர் மூடப்பட்டிருந்தது. 2006ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டிருந்த குறிப்பிடப்பட்ட கம்பனியானது ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தினால் 2008ஆம் ஆண்டிலே கொள்வனவு செய்யப்படும்வரை அலைவரிசைகளை வைத்திருந்தமை தவிர வேறு வியாபார நடவடிக்கைகளைச் செய்யவில்லை என்பதனால் கொடுக்கல் வாங்கலானது சந்தேகத்திற்குரியதாகக் காணப்படுகின்றது. கம்பனி செயற்படாத காலகட்டத்தில் பணிப்பாளருக்கான கட்டணமாக ரூபா 10,468,000 செலுத்தப்பட்டிருந்தது என்பதும் மேலும் இவ்வாறு செலுத்தப்பட்டவர் ஸ்கை நெட்வேர்க் லிமிடட் நிறுவனத்தின் ஒரு பணிப்பாளர் என்பதும் தெரிவிக்கப்பட்டது.	குறிப்பிட்ட கம்பனியிடம் மாத்திரமே அச்சந்தர்ப்பத்தில் அலைவரிசை காணப்பட்ட காரணத்தினால் அதனிடமிருந்து அதைக் கொள்வனவு செய்வதற்குக் கம்பனியானது நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தது. ஒட்டுமொத்த செயன்முறையின் பின்னால் எக்கட்டத்திலாவது ஏதாவது மோசடி நிகழ்ந்திருக்கின்றதா என்பதை விசாரித்து அறிக்கையொன்றினை அனுப்புமாறும் 70 வாடிக்கையாளர்களைத் தவிர 2008-11 காலப்பகுதியின் போது வலையமைப்பினை விருத்தி செய்யாமைக்கான காரணங்களைச் சமர்ப்பிக்குமாறும் CAO/AOவினைக் குழு பணித்தது. ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தினால் வேண்டுகோள் விடுக்கப்பட்ட போது தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அலைவரிசையினை ஏன் வழங்கவில்லை என்பது விளக்கப்படமுடியாத ஒன்று எனக் குறிப்பிட்ட குழு பயன்படுத்தப்படாத அலைவரிசைகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் இருந்தன என்பதையும் ஞாபகப்படுத்தியது.
4.	பாரிய வருமான அதிகரிப்பானது இலாபங்களின் அதிகரிப்பில் பிரதி	மனித மூலதனத்தில் ஏற்பட்டுள்ள பாரிய இயக்கச் செலவும் எரிபொருள் செலவும் இந்தச் சூழ்நிலைக்கு இட்டுச்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	பலிக்கவில்லை.	சென்றிருந்தன. சந்தையில் நிலவும் பாரிய போட்டியின் காரணமாகப் பராமரிப்பு மற்றும் முதலீடுகளில் மேற்கொள்ளப்படும் செலவும் அதி கமாக இருந்ததாக CAO/AO குறிப்பிட்டார்.
5.	மூலதன முதலீடுகளுக்காக 2014 மற்றும் 2015 ஆகிய இரண்டு வருடங்களில் தொடர்ச்சியாகப் பெருந் தொகையான 30 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.	தாம் செய்கின்ற வியாபாரத்தின் தன்மையின் காரணமாகக் கிடைக் கக்கூடியதாக இருக்கின்ற மிகச்சிறந்த தொழில்நுட்பத்தினையே நாட வேண்டியிருந்ததனால் தொழில்நுட்ப முன்னேற்றங்களின்மீது தாம் கணிசமான தொகையினை முதலீடு செய்ய வேண்டியிருந்ததாக CAO/AO குறிப்பிட்டார்.

உபகுழு I இனால்
பரீட்சிக்கப்பட்ட நிறுவனங்கள்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	மானுடவியல், சமூக விஞ்ஞானம் ஆகிய உயர் கற்கைகளுக்கான தேசிய நிலையம் **உயர்கல்வி அமைச்சு**	**2014 மார்ச் 06**
1.	மானிட சமூகவிஞ்ஞானத் துறையுடன் தொடர்பற்ற 17 விரிவுரையாளர் களுக்கு ரூபா. 9,290,674 காசுக் கொடை வழங்கப்பட்டிருந்தது.	கட்டளைச் சட்டத்தினைத் திருத்துவது தொடர்பாகப் பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமான வேண்டுகோள் விடுக்கப் பட்டிருந்ததுடன் அதனைத் தாம் பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவில் உள்ள நிலையியற் குழுவிற்கு ஆற்றுப்படுத்தியிருந்ததாகப் பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு அறிவித்திருந்தது.
2.	புலமைப்பரிசில் பெற்றுக்கொண்ட 4 பயனாளிகளிடமிருந்து ரூபா. 2,521,897 அறவிடப்பட்டிருக்க வில்லை. மேலும் 2005 – 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது அது பின்னர் இரத்துச்செய்யப்பட்டது.	இரண்டு பயனாளிகள் கொடுப்பனவு களைத் தவணைக் கட்டணங்களில் மீளச்செலுத்த ஆரம்பித்துள்ளனர். மேலும் மற்றைய இரண்டு பயனாளிகளுக்கெதிராக ஏற்கனவே சட்ட நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருந்தன.
3.	ஆய்வுகளுக்காக 30 விரிவுரையாளர் களுக்கு ரூபா 18,455,000 கொடையானது விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் முன்னேற்ற அறிக்கை யானது குறிப்பிட்ட காலப்பகுதியில் நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக் கவில்லை.	பரிசீலிப்புத் திகதியின்போது நிலையத்திற்கு முன்னேற்ற அறிக்கை களில் அதிகமானவை ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம் உயர்கல்வி அமைச்சு	**2014 மார்ச் 06**
01.	விரிவுரையாளர்களின் வருகை மற்றும் புறப்படுதல் தொடர்பான பதிவு முறைமை ஒன்றினைப் பல்கலைக் கழகம் அமுல்படுத்தியிருந்ததா எனக் குழு விசாரித்தது.	மாணவர்களின் வருகையினை விரிவு ரையாளர்கள் பதிவுசெய்து சான்றுப் படுத்த வேண்டியிருந்தது எனவும் ஒவ்வொரு விரிவுரையாளருக்கும் விரிவுரை மணித்தியாலங்கள் உள்ள டங்கிய நேரசூசிகை வழங்கப்பட்டிருந் ததாகவும் AO குறிப்பிட்டார். தாம் விரிவுரைகளை நடத்தியமையினைக் குறிப்பிட்டு அவர்கள் அதனைச் சான்றுப்படுத்துமாறு தேவைப்படுத் தப்பட்டனர். மேலும் விசாரிக்கையில் விரிவுரையாளர்கள் தமது வருகை யினைத் தமக்குரிய துறை அலுவலகங் களில் பதிவுசெய்வதாக AO குறிப்பிட்டார். இதனைக் கணக்காய் விற்குச் சமர்ப்பிக்குமாறு குழு CAO/AOவினைப் பணித்தது.
02.	திறைசேரியிடமிருந்து அங்கீகாரத் தினைப் பெறவேண்டும் என்கின்ற குழுவின் முன்னைய பணிப்புரையின் பின்னரும் கூடப் பல்கலைக்கழக மானது திறைசேரியின் அங்கீகாரத் தினைப் பெறாமல் வெளிவாரிப் பரீட்சைப் பிரிவில் உள்ள நிரந்தரப் பணியாளர்களுக்குக் கொடுப்பனவு களைச் செலுத்தியிருந்தது.	எதிர்காலத்திலே இவ்வாறான கொடுப் பனவுகளுக்குத் திறைசேரியின் அங்கீ காரத்தினைப் பெறுவதாக AO உறுதியளித்தார்.
03.	200,000 ரூபாவினை மிகைக்கின்ற வாகனத் திருத்தங்களுக்குக் கொள் வனவு வழிகாட்டல்களுக்கமைய நிரல் அமைச்சின் செயலாளரிடமிருந்து அங்கீகாரம் பெறப்படாமல் 2011ஆம்	தாம் இவ்விடயத்தினைத் திருத்தியுள் ளதாக AO குறிப்பிட்டார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	ஆண்டில் 3 சந்தர்ப்பங்களில் ஏன் ரூபா. 1,220,240 தொகையுடைய திருத்த வேலைகள் மேற்கொள்ளப் பட்டன எனக் குழு விசாரித்தது.	
04.	உடன்படிக்கையொன்றை மேற்கொள் ளாமல் 2010 ஜூலையிலே கரப்பந் தாட்ட மைதானமொன்றினை நிர் மாணிப்பதற்காக முற்கொடுப்பனவுத் தொகையாக ரூபா 241,810 அரசாங்க நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந் ததைக் குழு அவதானித்தது. 2014ஆம் ஆண்டில் கருத்திட்டம் கைவிடப்பட்ட போதிலும் முற்கொடுப்பனவு திருப்பிக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.	பயிற்றப்படாத மாணவர்களின் வேண்டுகோளின் பேரிலேயே கரப்பந்தாட்ட மைதானமானது நிர்மாணிக்கப்பட்டதாகவும் ஆனால் பயிற்றப்படாத மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்த காரணத்தினால் கரப்பந்தாட்ட மைதானத்தின் நிர் மாணப்பணிகளைக் கைவிடுவதென முகாமைத்துவம் தீர்மானித்ததாகவும் CAO/AO குறிப்பிட்டார். CECB இற்குச் செலுத்த வேண்டிய பிடித்துவைக்கும் பணத்தினைப் பல்கலைக்கழகம் வைத்திருந்ததாகவும் இப்பணத்திலிருந்து முற்கொடுப்பன வினைத் தீர்ப்பதற்கு அவர்கள் இணங்கியிருப்பதாகவும் CAO/AO குறிப்பிட்டார். எழுத்து மூலமான உடன்படிக்கையின் பேரிலேயே முற்கொடுப்பனவானது CECB இற்கு வழங்கப்பட்டிருந்தது என்பதை AO வலியுறுத்தினார்.
05.	2012ஆம் ஆண்டிலே காணிகளையும் கட்டிடங்களையும் பெற்றுக்கொள் வதற்காக வரவு செலவுத் திட்டத்திலிருந்து ரூபா 101,920,000 ஒதுக்கப்பட்டிருந்ததைக் குழு அவதானித்தது. ஆனால் உரிய காலத்தில் தேவையான செயற் பாடுகளைப் பூர்த்தி செய்யாத காரணத்தினால் ரூபா. 51,920,000	பல்வேறு காரணங்களினால் காணி அளவீட்டினைத் தம்மால் பூர்த்தி செய்யமுடியவில்லை என்றும் உரிய காலத்தில் காணிகளை மாற்றிக் கொள்ள முடியவில்லை என்றும் AO குறிப்பிட்டார். கௌரவ அமைச்சரின் வேண்டுகோளின்படி கருத்திட்டம் ஒன்றிற்கு ரூபா 50,000,000 தொகையினை மாற்ற வேண்டி

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் F.R.66 இன் கீழ் ரூபா 50,000,000 நிரல் அமைச்சினால் மாற்றப்பட்டிருந்தது.	ஏற்பட்டதாகவும் ஆனால் குறிப்பிட்ட தொகையானது திறைசேரியினால் விடுவிக்கப்படிருக்கவில்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.
	பாளி, பௌத்த பட்டப்பின்படிப்பு நிறுவகம் **உயர்கல்வி அமைச்சு**	**2014 மார்ச் 06**
01.	பௌத்த பாளி பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் பின்வரும் குறைபாடு களைக் குழு ஆரம்பத்தில் சுட்டிக் காட்டியது. கூட்டிணைத் திட்டம் உரிய நேரத்தில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2011ஆம் ஆண்டிற்கான செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. 2012ஆம் ஆண்டிற்கான செயற்றிட்டம் தேவைப்படுத்தப்படு கின்ற நியமங்களுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை 2012ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	தாமதமின்றி இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக CAO/AO உறுதியளித்தார்.
02.	நிறுவனத்திற்கான நிரந்தரக் கட்டிடம் ஒன்றின் நிர்மாணம் கூட்டிணைத் திட்டத்திலும் செயற்றிட்டத்திலும் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் 2012ஆம் ஆண்டிலும் 2013ஆம் ஆண்டிலும் கட்டிட வாடகையாக ரூபா. 4,695,000 செலுத்தப்பட்டிருந் ததைக் குழு அவதானித்தது. மேலும் 2014ஆம் ஆண்டு பெப்ரவரி 01ஆம்	தாம் பொருத்தமான காணியினைக் கொழும்பிலோ அல்லது சுற்றுப்புறங் களிலோ தேடிக்கொண்டிருப்பதாகவும் அவ்வாறான காணி கிடைத்ததும் காணியைப் பெற்றுக்கொள்வதற்காக அதனை அரசாங்கத்திற்கு முன் மொழிவதாகவும் CAO/AO குறிப்பிட்டார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் ரூபா. 9,175,000 வருடாந்த வாடகைக்குக் கொஹுவளையில் கட்டிடமொன்று பெறப்படிருந்தது.	
03.	2011ஆம் ஆண்டின் இறுதியளவில் வெளியீடுகளின் இருப்பு பிழையாகக் கணிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறு கணிப்பிடப்பட்டிருந்த பெறுமானம் கணக்குகளில் 113,420 ரூபாவால் மிகைத்துக் காட்டப்பட்டிருந்தது. பிரதான பேரேட்டிற்று அமைவாக நுகர்வுப் பொருட்களின் பெறுமானம் 456,250 ரூபாவாக இருந்தபோதிலும் அந்த இருப்பினது பௌதீகப் பெறுமானம் 271,196 ரூபாவாகக் காணப்பட்டது. ஆகவே அந்த நுகர்வுப் பொருட்களின் இருப்பு 185,054 ரூபா தொகையினால் மிகைத்துக்காட்டப்பட்டிருந்தது.	அந்தச் சந்தர்ப்பத்திலே தமக்குக் களஞ்சியப் பொறுப்பாளர் இருக்க வில்லை எனவும் புதிய களஞ்சியப் பொறுப்பாளர் நியமிக்கப்பட்டதன் பின்னர் 5 வருடங்களின் மீதிகளை ஒப்பிட்ட அறிக்கையானது தயாரிக்கப் பட்டிருந்ததாகவும் CAO/AO குறிப் பிட்டார். விரைவில் கணக்காய்வு நோக்கங்களுக்காக அந்த அறிக்கை யினைச் சமர்ப்பிக்கக்கூடியதாக இருக்குமென அவர் குறிப்பிட்டார்.
04.	கல்விப் பணியாளர்களுக்காக சம்பளங் களாகவும் படிகளாகவும் ரூபா. 8,425,286 செலுத்தப்பட்டிருந்ததைக் குழு அவதானித்தது. ஆனால் பணி யாளர்களின் வருகை மற்றும் புறப் பாடுகளை உறுதிப்படுத்துவதற்குச் சம்பந்தப்பட்ட நூல்களும் பதிவேடு களும் பேணப்படவில்லை.	விரிவுரையாளர்களின் வருகை யினைப் பதியும் முறை தொடர்பாகக் குழு திருப்தியடையவில்லை. மேலும் விரிவுரையாளர்களின் வருகையினை நிரூபிப்பதற்கு முறைமை ஒன்றினை உருவாக்குமாறு CAO/AO வினைக் குழு பணித்தது.
05.	2012 டிசெம்பர் 31இல் உள்ளவாறாக ரூபா. 26,332,811 தொகையுடைய நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துக்களின் பதிவேடு ஒன்று ஏன் பேணப்பட்டிருக்கவில்லை	ஏற்கனவே நிலையான சொத்துக் களுக்கான பதிவேடானது பூர்த்தி செய்யப்பட்டிருந்ததாகவும் 2 வாரங் களுள் அதனைக் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிப்ப

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	எனக் குழு விசாரித்தது.	தாகவும் CAO/AO குறிப்பிட்டார்.
06.	பௌத்த கல்விக்கான முதுமாணிப் பட்டக் கற்கைநெறிகளை நிறுவனம் நடத்தியுள்ளதையும் ஆங்கில கற்கை நெறிக்கான மாணவர்களின் பதிவு அதிகரிக்கப்பட்டிருந்ததையும் ஆனால் சிங்கள கற்கைநெறிக்கான மாணவர் களின் பதிவு முன்னைய வருடங் களுடன் ஒப்பிடும்பொழுது மீளாய்வின் கீழுள்ள காலப்பகுதியின்போது குறைவடைந்திருப்பதையும் குழு அவதானித்தது.	பிரசீனா இறுதிப்பரீட்சை முடிவுகளின் பேரிலேயே அது தங்கியிருப்பதாக CAO/AO குறிப்பிட்டார். முதுமாணி கற்கைநெறிகளின் ஆரம்பத்திற்கு முன்னர் மேற்படி பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப் பட்டிருந்தால் மாணவர்களின் பதிவு அதிகரித்திருக்கும் என அவர் குறிப்பிட்டார்.
07.	2012ஆம் ஆண்டிலே பரீட்சையில் சித்தியடையும் வீதமானது ஏன் குறைவாகக் காணப்பட்டது எனக் குழு விசாரித்தது.	மாணவர்களில் 90% தொழில் புரிபவர்கள் எனவும் தமது லீவுப் பிரச்சினைகள் காரணங்களினாலும் ஏனைய தவிர்க்கமுடியாத காரணங் களினாலும் அவர்களினால் பரீட்சைக்குத் தோற்ற முடியவில்லை எனவும் CAO/AO குறிப்பிட்டார்.
	இலங்கை வாழ்க்கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை **இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு**	**2014 மார்ச் 07**
1.	சம்பளத்துடன் கற்கை விடுவிப்பு அளிக்கப்பட்டு வேலைக்கு இன்னும் திரும்பாத 03 உத்தியோதக்தர்களிட மிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய ரூபா 8,164,703 தொகை குறித்துக் குழு கேள்வி எழுப்பியது.	அதிகாரிகளால் எடுக்கப்பட்ட நட வடிக்கைகள் குறித்துக் குழு திருப்தி அடையாததுடன், நிர்வாகப் பணிப் பாளர், பணிப்பாளர் நாயகம், கணக் காளர் மற்றும் சட்ட உத்தியோகத்தர் போன்ற இக்கவனமின்மைக்குப் பொறுப்பானவர்களுடன் CAO வை அடுத்த COPE கூட்டத்தன்று குழுவின்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		முன் பிரசன்னம் ஆகுமாறு பணித்தனர். இது சம்பந்தமாகக் குழுவுக்கு ஒரு விபரமான அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் பணிக்கப்பட்டது.
2.	2008 செப்ரெம்பரில் இருந்து 2010 டிசெம்பர் வரையான காலப்பகுதியில் மாதாந்த வாடகையாகிய ரூபா 40,000 இற்கு வாகனத்தை வாடகைக்கு விட்டதிலிருந்து ஒரு உத்தியோகத்தரால் ரூபா 1.12 மில்லியன் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது குறித்துக் குழு அவதானித்தது. அந்த உத்தியோகத்தர் மோசடியாகத் தனது சொந்த வாகனத்திற்காக வாடகையை உரிமை கோரியிருப்பதாக விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டது.	சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்த துடன் மேலதிக நடவடிக்கைக்கான சட்ட ஆலோசனைக்காகக் காத்திருப் பதாகவும் CAO/AO குறிப்பிட்டார். CIDயினருக்கு அறிவிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படியும் அடுத்த COPE கூட்ட அழைப்பிற்கு முன்னதாக சிவில் நடவடிக்கை எடுக்கும்படியும் குழு CAO/AO வைப் பணித்தது.
3.	VAT மற்றும் தடுத்து வைக்கும் வரியினைக் கழிக்காமல் நிலையான சொத்துப் பதிவைத் தயாரித்தமைக்காக ஒரு ஒப்பந்தகாரருக்கான ரூபா 2,643,114 கொடுப்பனவின் தற் போதைய நிலை குறித்துக் குழு விசாரித்தது.	இவ்விடயத்தைத் தீர்ப்பதற்கு தாம் நடவடிக்கைகள் எடுத்திருப்பதாக CAO/AO தெரிவித்தார். அத்துடன் அதனை விரைவில் தீர்ப்பதாகவும் உறுதியளித்தார்.
4.	அதிகாரசபையால் 26 கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த காணியைப் பெற்றுக்கொள்ளுதலின் முன்னேற்றம் குறித்துக் குழு விசாரித்தது.	இச்செயன்முறையைப் பூர்த்தி செய்வ திலுள்ள சிரமங்களை CAO/AO விபரித்ததுடன் இயலுமானளவு விரைவில் விடயத்தை இறுதிப்படுத்த உறுதியளித்தார்.
5.	முகாமைத்துவ சேவைகள் சுற்று நிருபத்திற்கு முரணான முறையில் 55 தடவைகளில் பணியாளர்கள் ஆட் சேர்ப்பு செய்யப்பட்டது மற்றும் பதவி	அந்தப் பணியாளர்கள் அனைவரும் ஏற்கனவே சரியான சம்பள அளவுத் திட்டத்தில் மீள வைக்கப்பட்டிருந் தனர் எனக் குறிப்பிட்ட CAO/AO

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	உயர்வு அளிக்கப்பட்டது குறித்தும் மற்றும் அவர்களை உயர் சம்பள அளவுத்திட்டத்தில் வைத்தது குறித்தும் குழு கலந்துரையாடியதுடன் இவ் விடயத்தைத் தீர்ப்பதற்கு என்ன பரிகார நடவடிக்கை எடுக்கப்பட்டிருந் தது என விசாரித்தது.	ஏனைய ஒத்த நிறுவனங்களுடன் ஒப்பிடும்பொழுது அதிகாரசபையின் சம்பள அளவுத்திட்டமானது மிகவும் குறைவானதாக இருப்பதால் அதிக மாகச் செலுத்தப்பட்ட தொகையை மீளப் பெற்றுக்கொள்ள முடியவில்லை எனவும் குறிப்பிட்டார். எல்லா விடயங்களையும் அதிகாரசபையில் கலந்துரையாடி நீண்டகாலத் தீர்வுக் காக நிலைமையைத் திறைசேரிக்கு அறிவிக்கும்படி குழு அறிவுரை செய்தது
6.	தனது பிரதான பதவியைத் தவிர வேறொரு நிறுவனத்திலிருந்து சம் பளத்தைப் பெற்றுக்கொண்ட பணிப் பாளர் ஒருவர் தொடர்பாகக் குழு விசாரித்தது.	சம்பந்தப்பட்ட பணிப்பாளர் ஒரு சபை உறுப்பினர் என்ற வகையில் மத்திய கலாச்சார நிதியத்திடமிருந்து ஒரு படியை மாத்திரம் பெற்றிருந்தார் என CAO/AO பதிலளித்தார். மத்திய கலாச்சார நிதியத்திற்கு எழுதி உண்மைத் தகவலைக் கண்டு கொள்ளும்படி குழு CAO/AO வைப் பணித்தது.
7.	31.12.2011 அன்றுள்ளவாறாக ரூபா 43,554,442 கடன்பட்டோர் மீதி குறித்துக் குழு கேள்வி எழுப்பியது.	மிகுதிகளைத் தனித்தனியாக இனங் காணவும் கூடுமான விரைவில் அத்தொகைகளைக் கட்டித் தீர்த்துக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்ததாக CAO/AO குறிப் பிட்டார். முந்திய அமைச்சிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படவேண்டிய ரூபா. 5 மில்லியன் தொகையும் பிழையான கணக்கியல் தொகைகளும் இந்தத் தொகையில் சேர்க்கப் பட்டிருந்தன என அவர் தெரிவித்தார்.
8.	ஸ்ரீசம்புத்தத்வ ஜயந்தி தொடர்பாக செலவிடப்பட்டுள்ள ரூபா 1,150,000	மேலும் தாமதிக்காமல் சான்றுப் படுத்தப்பட்ட சிட்டைகளுடன் வேண்டிய விபரங்களைச் சமர்ப்பிக்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	இற்கான சிட்டைகள் ஏன் வழங்கப் பட்டிருக்கவில்லை எனக் குழு கேள்வி எழுப்பியது.	குமாறு CAO/AO பணிக்கப்பட்டார்.
9.	அமைச்சுக்கும் ஏனைய நிறுவனங் களுக்கும் விடுவிக்கப்பட்ட 20 பணி யாளர்களுக்கான சம்பளமாக ரூபா 4,446,919 ஐ அதிகாரசபை செலுத்தி யிருந்ததைக் குழு அவதானித்தது.	இந்த எண்ணிக்கையைத் தாம் 08 ஆகக் குறைத்திருந்ததாகவும் இவர் களை மீளப் பெற்றுக்கொள்ளுமாறு அந்த நிறுவனங்களுக்கு எழுதியிருந்த தாகவும் CAO/AO குறிப்பிட்டார். இந்த 08 பணியாளர்களின் விபரங்களு டனும் அவர்களை மீளப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுதல் விடுக்கப் பட்ட 08 கடிதங்களின் பிரதிகளுடனும் ஒரு அறிக்கை சமர்ப்பிக்குமாறு குழு பணித்தது.
10.	பணிப்பாளர் நாயகம், நிதிப் பணிப் பாளர், நிர்வாகப் பணிப்பாளர் போன்ற வெற்றிடங்களை நிரப்பு வதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை எனக் குழு கேள்வி எழுப்பியது.	ஆட்சேர்ப்புச் செயன்முறை தயாரிக்கப் பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு முன்வைக்கப் பட்டிருந்தது எனவும் அவர்களின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற பிற் பாடு வெற்றிடங்கள் நிரப்பப்படும் எனவும் CAO/AO குறிப்பிட்டார்.
11.	VAT ஹோல்டிங்ஸ் கம்பனி நிறுவுகை குறித்துக் குழு கேள்வி எழுப்பியது.	அதிகார சபைச் சட்டத்தின் பிரகாரமே இந்தக் கம்பனி நிறுவப்பட்டதென CAO/AO குறிப்பிட்டார். கம்பனியா னது பொது நிதியைப் பயன்படுத்தி யதால் அந்த விடயத்திற்காக அமைச் சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளும்படி குழு பணித்தது

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	வாழ்க்கைத்தொழில் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் **இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு**	**2014 மார்ச் 07**
1.	கொரிய பயிற்சி கற்கைநெறிக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியிலிருந்து பணியாட்டொகுதியினருக்கான படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டது தொடர்புடைய கணக்குகளிலிருந்து ரூபா 1.4 மில்லியன் தொகை பதிவழிப்புச் செய்யப்பட்டிருந்தமைக்காகத் திறைசேரிக் காப்பு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	இவ்விடயத்தை விரைவில் ஒழுங்குபடுத்துமாறு AO பணிக்கப்பட்டார்.
2.	வாழ்க்கைத்தொழில் தொழில்நுட்பக் கல்விப் பல்கலைக்கழகத்தின் சட்டத்தின் பிரகாரம் இலங்கைத் தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்திற்குச் சொந்தமான காணியை மாற்றிக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படடிருந்ததா எனக் குழு விசாரித்தது.	காணியானது நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமானது என்ற வகையில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் சட்டப்பிரிவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டிருந்தது என AO குறிப்பிட்டார்.
3.	ரூபா 4.7 மில்லியன் செலவில் உத்தியோகபூர்வ குடியிருப்பு இடமாக நிர்மாணிக்கப்பட்ட ஒரு கட்டிடம் 2011 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படாதிருந்தது.	பல்லைக்கழகத்தின் ஆரம்பத்தில் இருந்தே, தேசிய தொழில்நுட்பக்கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தால் பயன்படுத்தப்படவெனக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருப்பினும் கட்டிடம் பயன்படுத்தப்படவில்லை எனவும் அது திருத்தப்பட்ட பிற்பாடு, கூட்டங்கள் நடத்துவதற்கும் மற்றும் வெளிப்புற நிறுவனங்களின் தன்னார்வமுடையோரால் வேறுபட்ட வைபவங்களுக்காகவும் பின்பு பயன்படுத்தப்படுவதாக AO தெரிவித்தார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
4.	நாட்டில் பல்கலைகழகத்தாலும் மற்றும் வாழ்க்கைத்தொழில் தொழில் நுட்பக் கல்வியாலும் நடத்தப்படும் கற்கைநெறிகள் குறித்துக் கலந்துரை யாடப்பட்டதுடன் வாழ்க்கைத் தொழில் தொழில்நுட்பப் பல்கலைக் கழகம் குறைந்த எண்ணிக்கையான கணக்காய்வுக் கேள்விகளைக் கொண் டிருப்பதைப் பாராட்டியது.	(i) திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைக் குறிப்பாக நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் துரிதப்படுத்து மாறும் (ii) இராணுவப்படைகளுடன் பொதுமக்கள் தனியார் பங்காண் மையை நிறுவுவதன் சாத்தியக் கூற்றைப் பரிசீலிக்கும்படியும் (iii) பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிப்பதற்காக அமைச்சால் முன்னெடுக்கப்படும் அரச தனியார் பங்காண்மையை விஸ்தரிப்பது மீதான அறிக்கையை அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய அலுவலகத்திற்கு ஒரு மாதத்திற்குள் அனுப்பி வைக்கும்படியும் CAO/AO பணிக்கப்பட்டார்.
	மூன்றாம்நிலைத் தொலைக்கல்வி ஆணைக்குழு **இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு**	**2014 மார்ச் 07**
1.	பதவியை விட்டுச்சென்ற ஒருவர் மற்றும் சேவையிலிருந்து விலக்கப் பட்ட வேறு ஒருவர் ஆகிய இரு பணியாளர்களின் கடன் மிகுதிகள் பெற்றுக்கொள்ளப்படவில்லை.	அத்தொகைகளைப் பெற்றுக்கொள் வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன. அவ்விரு பணியாளர் களும் கடன் மிகுதியைத் தவணை களாகச் செலுத்தச் சம்மதித்துள்ளனர். தவறும் பட்சத்தில் உத்தரவாதப் படுத்தியோரிடமிருந்து பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் அல்லது அவர்களுக்கெதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்று கூறப்பட்டது.
2.	1999 ஆம் ஆண்டு 22/99 இலக்க PA சுற்றுநிருபத்தின் பிரகாரம், குழு போக்குவரத்து வசதிகள் வழங்குதல்	முன்னைய கூட்டத்தில் பணிக்கப் பட்டவாறாக இது தொடர்பான அங் கீகாரத்திற்காக அமைச்சரவைக்குக்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	தொடர்பாக, உரிய அங்கீகாரம் பெறப்படாது, ஒரு தனித்த வாகன மானது 6 உத்தியோகத்தர்களுக்காக வழங்கப்பட்டிருப்பதுடன், ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் எரிபொருள் படியாக ரூபா 12,000 செலுத்தப் பட்டுள்ளது.	கோரிக்கை மனுவொன்று சமர்ப் பிக்கப்பட்டுள்ளதாக CAO/AO குறிப் பிட்டதானால், இவ்விடயத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் தேவை யில்லை எனவும் பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் அங்கீ காரத்தைக் கொடுக்க முடியும் எனக் குழு கருத்துக் கொண்டிருந்ததுடன் அங்கீகாரத்தை மிக விரைவில் பெற்றுக்கொள்ள AO இணங்கினார்.

உபகுழு II இனால்

பரீட்சிக்கப்பட்ட நிறுவனங்கள்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை **தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சு**	**2014 பெப்ரவரி 18**
1.	வேண்டியளவு எண்ணிக்கையான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் ஏன் 2013 இல் நடாத்தப்படவில்லையெனக் குழு விசாரித்தது.	பணிப்பாளர்கள் சபையை நியமிப் பதில் ஒரு தாமதம் இருந்தமையினால் 2013 ஆம் ஆண்டின் இறுதி இரண்டு காலாண்டுகளுக்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்களை அவர்களால் நடாத்த முடியவில்லை எனவும் எதிர்காலத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை ஒழுங்குக் கிரமமாக நடத்துவதாகவும் CAO/AO குறிப்பிட்டார்.
2.	ஒரு வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிக்கு 2008-2012 காலப்பகுதிக்கு வழங்கப்பட்ட 26,715 மில்லியன் கடனிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய 20 மில்லியன் வட்டியானது கணக்கிலே பெற்றுக்கொள்ளப்படாதிருப்பதைக் காட்டுவதைக் குழு அவதானித்தது. அத்துடன் வட்டியில்லாது, அதே கம்பனிக்கு 2004 இல் கொடுக்கப்பட்ட 31.55 மில்லியன் கடனும் மீளப் பெற்றுக்கொள்ளப் படாமலுள்ளது.	மிக அண்மையில் கலைக்கப்படவிருக் கின்ற பிபிசி கம்பனியிடமிருந்தே இத்தொகை வரவேண்டியுள்ளதாக CAO/AO விளக்கமளித்தார். இந்தக் கம்பனியானது கலைக்கப்படும் செயன்முறையின்பொழுது வட்டி தவிர்ந்த முதல் தொகையைச் செலுத்தும் என்பதுடன் அதற்கான திறைசேரி அங்கீகாரம் நாடப்படும் எனவும் CAO/AO தெரிவித்தார்.
3.	2006ஆம் ஆண்டில், ஆறு மாதங்களுக் குள் செலுத்தப்பட வேண்டிய, ஒரு கம்பனிக்கு வழங்கப்பட்ட ரூபா 2 மில்லியன் தொகை வட்டியற்ற கடன் ஒன்றின் தற்போதைய நிலை குறித்துக் குழு விசாரித்தது.	ரூபா 550,000 பெற்றுக்கொள்ளப் பட்டிருப்பதாகவும் மீதியைப் பெற்றுக் கொள்ள சட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் CAO/AO விளக்க மளித்தார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
4.	வட்டி உட்பட ரூபா 1,664,769 ஆகிய ஒரு பிழையாக ஒதுக்கப்பட்ட தொகை யானது சம்பந்தப்பட்ட உத்தியோகத் தரிடமிருந்து 1998 இலிருந்து ஏன் பெற்றுக்கொள்ளப்படவில்லை எனக் குழு கேள்வி எழுப்பியது.	சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் வெளி நாடு சென்று விட்டதுடன் குறித்த தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப் படவில்லையென CAO/AO தெரிவித் தார். எதிர்காலத்தில் அவ்வண்ணமான தவறுகளைத் தவிர்ப்பதற்கு நட வடிக்கை எடுக்கவேண்டும்.
5.	அரச பெருந்தோட்டக் கூட்டுத் தாபனத்திற்குக் கட்டிடத்தைக் குத்த கைக்கு விட்ட வாடகையாக அதிகார சபை பெற்றுக்கொள்ள வேண்டிய ரூபா1,650,000 தொகை குறித்துக் குழு கேள்வி எழுப்பியது.	மாதாந்தத் தவணைக் கட்டண அடிப்படையில் அத்தொகை பெற்றுக் கொள்ளப்படுவதாக CAO/AO குறிப் பிட்டார்.
6.	தென்னை மற்றும் கொப்பரா ஏலவிற்பனைகளுடன் தொடர்புடைய நில வாடகையாகத் துருவப்பட்ட தேங்காய் ஆலை உரிமையாளர் களிடமிருந்து பெற வேண்டிய ரூபா 2,931,691 தொகை குறித்துக் குழு கேள்வி எழுப்பியது.	அத்தொகையின் ஒரு பகுதியானது ஆலைகள் அபிவிருத்தி நிதியத்திலி ருந்து பெறப்பட்டுள்ளதாகவும் மிகு திியைப் பெற்றுக்கொள்வதற்கு எல்லா அத்தியவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் CAO/AO தெரிவித்தார்.
7.	தேங்காயெண்ணெய் ஆலை உரிமை யாளர்களைப் பதிவு செய்து கொள்ளத் தூண்ட வேண்டியதன் அவசியம் குறித்தும் குழு விபரமாகக் கலந்து ரையாடியதுடன் தேங்காயெண் ணெய்யின் தரத்தையும் நியமத்தையும் முன்னேற்றுவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் குழு கலந்துரையாடியது.	எண்ணெய் ஆலை உரிமையாளர் களைப் பதிவு செய்யத் தூண்டு வதற்கான நடவடிக்கைகளையும், தேங்காயெண்ணெய்யின் தரத்தையும் நியமத்தையும் முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளையும், தாம் ஏற்கனவே எடுத்துவிட்டதாக CAO/AO குறிப்பிட்டார்.
8.	துருவப்பட்ட தேங்காய் ஆலை அபிவிருத்தி நிதியமானது ஏன் உறங்குநிலையில் விடப்பட்டுள்ளது	தாம் அதன் முந்திய தவறுகளைத் திருத்திக் கொண்டதாகவும், நிதி யத்திலுள்ள பணமானது தற்போது

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	எனக் குழு கேள்வி எழுப்பியது.	வினைத்திறனான முறையில் பயன் படுத்தப்படுவதாகவும் CAO/AO குறிப்பிட்டார்.
9.	மூலதனச் செலவினங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா 5 மில்லியன் ஆனது மீண்டெழும் செலவினங்களின் கீழ் பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் குழு அவதானித்தது.	துன்கன்னாவ என்னும் இடத்தில் உள்ள தும்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்திலுள்ள சமயாசமய பணியாளர்களின் சம்பளக் கொடுப்பனவிற்காக மூலதன நிதியம் பயன்படுத்தப்பட்டதாக CAO/AO குறிப்பிட்டார். இந்நிலையமானது தென்னை அபிவிருத்தி நிறுவகத்திற்கு 21.01.2014 அன்று கையளிக்கப்பட்டு விட்டதாகவும் அவ்வாறான தவறுகள் திரும்ப இடம்பெறாதென்றும் உறுதி யளித்தார்.
10.	ரூபா 2.18 மில்லியன் செலவழிக்கப் பட்டுத் தென்னை தொடர்புடைய உற்பத்திகளை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களின் தகவல்கள் சேகரிப்பதற்கான ஒரு தரவுதளத்தை, பதப்படுத்தல் அபிவிருத்திப் பிரிவு மற்றும் பிராந்திய அலுவலகங்களின் வலையமைப்பினால் அமுல்ப்படுத்து வதானது இடம்பெறாதமை குறித்துக் குழு கேள்வியெழுப்பியது.	கருத்திட்டத்தை அவர்கள் கைவிட வேண்டியிருப்பதாக CAO/AO வெளிப் படுத்தினார்.
	தெங்கு பயிற்செய்கைச் சபை **தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சு**	**2014 பெப்ரவரி 18**
1.	மகாயாய மாதிரி தென்னந் தோட்டத்தின் முட்டை உற்பத்தி அலகில் ஏற்பட்ட ரூபா 1.7 மில்லியன் இழப்புத் தொடர்பாக மேற்கொள்ளப்	பறவைக் காய்ச்சல் பரவியதைத் தொடர்ந்த காலப்பகுதியின்பொழுது விற்பனை வீழ்ச்சியடைந்ததன் நிமித்தம் இது ஏற்பட்டதினால்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	பட்ட விசாரணை குறித்துக் குழு விசாரித்தது.	இழப்புக்குப் பொறுப்பாக ஒருவரும் இருக்கவில்லை என CAO/AO குறிப்பிட்டார்.
2.	வெலிகம இலைச் சோர்வு நோயின் தற்போதைய நிலை குறித்துக் கலந்துரையாடப்பட்டது.	நோயின் 95% கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகவும் அப்புறப் படுத்தப்பட்ட மரங்களுக்காக நட்ட ஈடுகள் செலுத்தப்பட்டதாகவும் CAO/AO குறிப்பிட்டார்.
3.	உத்தேச தென்னை உல்லாசப் பயணத்துறைக் கருத்திட்டம் குறித்து விபரிக்கும்படி குழு வேண்டிக் கொண்டது.	அநேகமான தோட்டங்கள் உல்லாசப் பயணிகள் வருகைதரும் இடங்களுக்கு மிகவும் அண்மித்துள்ளமையினால் தமது சில தோட்டங்களை உல்லாசப் பயணிகள் தங்குமிடங்களாக விருத்தி செய்வதற்குத் தாம் திட்டமிட்டுள் ளதாக CAO/AO குறிப்பிட்டார். இதன் பிரகாரம் பலவித தென்னை உற்பத்திப் பொருட்களினாலான நினைவுப்பொருள் கடைகள், கலாசாரக் காட்சிகள், விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் என்பனவற்றை இக்கருத்திட்டத்தில் உள்ளடக்க எதிர்பார்க்கப்படுகிறது.
	இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் **கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு**	**2014 பெப்ரவரி 18**
01.	2010 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை எனக் குழு அவதானித்தது.	2010 நிதிக்கூற்றுக்களில் உள்ள சில குறைபாடுகளின் நிமித்தமாக வரு டாந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் ஒரு தாமதம் ஏற்பட்டதாகவும் தற் போது 2010 மற்றும் 2011 வருடாந்த

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		அறிக்கைகளை அமைச்சரவை அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் CAO/AO குறிப்பிட்டார். 2012 ஆம் ஆண்டு வருடாந்த அறிக்கை தயாரிப்பானது 2014 ஏப்ரல் இறுதியில் முடிவடையும் என அவர் மேலும் குறிப்பிட்டார். 2012 மற்றும் 2013 வருடாந்த அறிக்கைகளை விரைவில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதை உறுதிப்படுத்தும்படி குழு CAO/AO வைப் பணித்தது.
02.	கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களத்திற்குக் கணக்குகளைச் சமர்ப்பிப்பதில் தாமதங்கள் இருந்ததாகவும் அதனால் உரிய நேரத்திற்குக் கணக்காய்வு செய்வது அவர்களுக்குச் சிரமமாக இருந்ததாகவும் குழுவுக்குக் கணக்காய்வாளர் நாயகம் அறிவித்தார்.	2010 கணக்குகளில் சில குறைபாடுகள் இருந்தமையால் கணக்காய்வாளர் நாயகத்தினால் இறுதிக் COPE கூட்டத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டவாறாகக் கணக்குகள் திரும்பப் பெறப்பட்டு மீளாய்வு செய்யப்பட்டு மீளச் சமர்ப்பிக்கப்பட்டதாக CAO/AO குறிப்பிட்டார். இதன் நிமித்தமாக 2010 மற்றும் 2011 கணக்குகளைச் சமர்ப்பிப்பதில் தாமதங்கள் இருந்ததாக CAO/AO குறிப்பிட்டார். 2012 நிதிக்கூற்றுக்கள் இன்று மாத்திரமே கிடைக்கப் பெற்றதாகவும், 2013 கணக்குகள் கணக்காய்விற்காக இரண்டு மாத காலப்பகுதிக்குக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் படுவதைக் கவனித்துக்கொள்ளும் படியும் கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்தார். 2013 கணக்குகளைக் கணக்காய்விற்காக 2014 மார்ச் 31 அளவில் சமர்ப்பிக்கும்படி குழு CAO/AO வைப் பணித்தது.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
03.	2013 ஆம் ஆண்டுக்காக வழங்கப்பட்ட கணக்காய்வுக் கேள்விகளில் 09 பதிலளிக்கப்படாதிருந்திருப்பதாகக் குழு அவதானித்தது.	தாமதத்தை ஏற்றுக்கொண்ட CAO/AO இப்பசீலனைத் தினத்தில் தான் அவர்கள் பதில்களைச் சமர்ப்பித்த தாகத் தெரிவித்தார். கணக்காய்வுக் கேள்விகளுக்கான பதில்கள் தாமதமின்றிச் சமர்ப்பிக்கப்படுவதை உறுதிப்படுத்தும்படி குழு CAO/AO வைப் பணித்தது.
04.	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1015இற்கு மிதமிச்சமாக 618 பணியாட்டொகுதியினர் ஏன் இருந்துள்ளனர் எனக்குழு விசாரித்தது.	அந்தப் பணியாளர்கள் கூட்டுத் தாபனப் பதவியணிக்குள்ளும் உள் ளடக்கப்பட்டவர்கள் எனவும், கூட்டுத் தாபனமானது கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சின் கீழ் வரும் எல்லா நிறுவனங்களுக்கும் 1996 ஆம் ஆண்டு அமைச்சரவைத் தீர்மானத் தின் பிரகாரம் பாதுகாப்புச் சேவை களை வழங்கப் பணிக்கப்பட்டுள் ளதாகவும் CAO/AO தெரிவித்தார். மேலும் அவர்களின் புள்ளி விபரங்களின் பிரகாரம் 61 மிதமிஞ்சிய பணியாட்டொகுதியினரே இருந்துள் ளனர் எனவும் தெரிவித்தார். பாதுகாப்புப் பணியாட்டொகுதியினர் சம்பளங்கள் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுவதாகவும் பின்பு அவை உரிய நிறுவனங்களிடமிருந்து மீளப் பெற்றுக்கொள்ளப்படுவதாகவும் தெரி வித்தார். சம்பளங்களைச் செலுத்து வதற்குத் திறைசேரியால் 9 மில்லியனுக்கான ஒரு ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்படுவதாகவும் மிகு தியான கிட்டத்தட்ட 28 மில்லியன் ஆனது அவர்களது ஈட்டப்பட்ட நிதியங்களால் தாங்கப்பட வேண்டி யிருப்பதாகவும் CAO/AO மேலும் விசாரிக்கப்பட்டபொழுது தெரிவித் தார். பதவியணியினரின் சரியான

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		நிலை குறித்துக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கும்படி குழு CAO/AO வைப் பணித்தது.
05.	கூட்டுத்தாபனத்தின் நட்டமானது 2012 ஆம் ஆண்டில் ரூபா 255 மில்லியனாக அதிகரித்திருப்பதையும் 20 மீன்பிடித் துறைமுகங்களில் 12 துறைமுகங்களில் நட்டம் ஏற்படுவதையும் குழு அவதானித்தது.	புதிதாக அமைக்கப்பட்ட 5 துறைமுகங்களிலிருந்து உடனடியாக இலாபத்தைக் காட்ட இன்னும் காலம் தேவையெனவும், சேவைகளை வழங்குவதற்காகவே ஆரம்பத்தில் அவர்கள் மீன்பிடித் துறைமுகங்களை அமைத்துள்ளதாகவும் நட்டத்தைக் குறைப்பதற்கு மற்றும் இலாபத்தைக் காட்டுவதற்கும் அல்லது இலாப நட்டமற்ற நிலை மட்டத்தை விரைவில் எட்டுவதற்கு அவர்கள் எதிர்காலத் திட்டங்களைக் கைக்கொண்டதாகவும் CAO/AO குறிப்பிட்டார். போகமற்ற காலங்களில் மீன்பிடித்துறைமுகங்களிலிருந்து எந்த வருமானத்தையும் அவர்களால் ஈட்ட முடியாது போனதாகவும் CAO/AO குறிப்பிட்டார். அரசாங்கத்திற்குச் சுமையாக இல்லாமல், இலாப நட்டமற்ற ஒரு மட்டத்திற்கு ஆகக் குறைந்தது வருவதனால், ஏதும் ஒரு நல்ல முன்னேற்றத்தைக் காட்டும் முகமாக, அவ்வண்ணமான எல்லாப் பிரச்சனைகளையும் பரிசீலிப்பதனால் போகமற்ற காலப்பகுதிகளில் அவர்களின் பணியாட்களினை வரையறுப்பதுடன் ஒரு கூட்டுத்திட்டத்தைத் தயார்ப்படுத்துவது தொடர்பிலும் குழு சுட்டிக்காட்டியது.
06.	காணிகள் கட்டிடங்களதும் குத்தகை வாடகைகளை அதிகரிக்குமுன்பாகப் பிரதம மதிப்பீட்டாளரிடமிருந்து ஒரு மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கு எந்த நடவடிக்கையும்	கடந்த COPE கூட்டத்தில் பணிக்கப்பட்டவாறாக இது தொடர்பாக அவர்கள் மதிப்பீட்டாளருக்கு எழுதியதாகவும், பிராந்திய மட்டத்தில்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	எடுக்கப்பட்டிருக்கவில்லை எனக் குழு அவதானித்தது.	கூட்டுத்தாபனத்தின் சொத்துக்கள் குறித்த ஒரு விபரமான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு அவர் அவர்களுக்கு மதியுரை வழங்கியதாகவும் CAO/AO குறிப்பிட்டார். தற்பொழுது குத்தகை வாடகைகள் நிலவும் சந்தை நிலைமைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக CAO/AO மேலும் குறிப்பிட்டார். விடயத்தைத் துரிதப்படுத்துமாறு குழு CAO/AO வைப் பணித்தது.
07.	கூட்டுத்தாபனமானது 2007 ஆம் ஆண்டில் ஒரு தனியார் கம்பனிக்கு 6 எண்ணெய்த் தாங்கிகளை ரூபா 5,065,075 செலவில் நிர்மாணிப்பதற்காக முற்பணமாக 2,791,215 ரூபாவை வழங்கியதுடன், அத்தாங்கிகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கவும் இல்லை. முற்பணம் திருப்பிச் செலுத்தப்பட்டிருக்கவும் இல்லை எனக் குழு அவதானித்தது.	முற்பணமான ரூபா 3 மில்லியன் ஆனது ஒரு கம்பனிக்கு ஒப்பந்தமின்றி வழங்கப்பட்டுள்ளது என்பதையும், ஆனாலும் அந்தநேரத்தில் சட்ட உத்தியோகத்தரின் இடையீட்டுடன் அவர்களால் ரூபா 1 மில்லியனைத் திரும்பப் பெற்றுக்கொள்ளமுடிந்தது எனவும் CAO/AO ஏற்றுக்கொண்டார். மேலும் அந்தத் தனியார் கம்பனிக்கும் அதனுடைய காப்புறுதியாளர் சிலிங்கோ இன்சூரன்சுக்கும் எதிராக இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக CAO/AO மேலும் தெரிவித்தார். இந்தத் தனியார் கம்பனியின் பெயரானது பதிவுப்புத்தகத்திலிருந்து அழிக்கப்பட்டிருப்பதால் கம்பனிக்கெதிராக மேலதிக செயல் நடவடிக்கைகள் எடுக்க முடியாதிருப்பதாகவும், ஆனால் சிலிங்கோவிற்கெதிராகப் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் விசாரிக்கப்படுவதாகவும் மேலும் CAO/AO தெரிவித்தார். அந்த நேரத்தில் வழங்கல் முகாமையாளராக இருந்தவரின் மதியுரையின் மீதே தனியார் கம்பனிக்கு முற்பணம் வழங்கப்பட்டதாகவும் அதன் நிமித்தம்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		அவர் வேலையிலிருந்து நீக்கப் பட்டுள்ளதாகவும்; CID யிடம் அவருக் கெதிராக முறைப்பாடு செய்யப் பட்டுள்ளதாகவும் மேலதிக விசா ரணையின்மீது CAO/AO குறிப் பிட்டார். CID யினரின் விசாரணை அறிக்கையானது சட்டமா அதிபரின் மேலதிக மதியுரைக்காக அவருக்கு ஆற்றுப்படுத்தப்பட்டிருந்தது.
08.	கூட்டுத்தாபனத்துடன் இணைந்திருந்த 31 பணியாளர்கள் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படா மல் தொடர்புடைய அமைச்சுக்கு எவ்வாறு விடுவிக்கப்பட்டார்கள் எனக் குழு விசாரித்தது.	இதற்கான அங்கீகாரத்தை நாடி அவர்கள் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு எழுதியிருந்ததாக CAO/AO தெரிவித்தார். மேற்படி பணியாட்டொகுதியினர் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப் பட்டிருந்ததாகவும் ஒப்பந்த முடிவின் பின்பு அவர்களின் சேவைகள் முடிவுக்கு கொண்டுவரப்படும் எனவும் CAO/AO தெரிவித்தார். இந்தப் பணியாளர்களுக்குக் கூட்டுத்தாபனத் தால் சம்பளங்கள் வழங்கப்படுவதால் இவ்விடயம் மீது கவனம் செலுத்துமாறு குழு CAO/AO வைப் பணித்தது.
09.	மொரட்டுவ மீன்பிடித்துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்ட படகின் மொத்த நங்கூரமிடப்பட்ட கட்டணமாக ரூபா 10,520,113 பெறப்பட வேண்டியிருந்த பொழுது ரூபா 4,844,734 ஐ மாத்திரம் பெற்றுக்கொண்டு விடுவிக்கப்பட்டது ஏன் எனக் குழு விசாரித்தது.	இந்தப் படகானது 2007 ஆம் ஆண்டிலிருந்து நங்கூரமிடப்பட்டிருந்த தாகவும், இது அப்பலோ மரின் நிறுவனத்துக்குச் சொந்தமானதென வும், ஆனால் பின்பு 2010 இல் இப் படகானது வேறொரு ஆளால் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் CAO/AO குறிப்பிட்டார். படகை அகற்றுவதற்கான இந்த ஆளின் வேண்டுகோளின் பேரில், அவர் கொள்வனவு செய்த திகதியிலிருந்து,

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		நங்கூரமிடப்பட்ட கட்டணம் ஆகிய 4.8 மில்லியன் தொகை பெறப்பட்டு, அதற்குப் பின்பு படகானது அவருக்கு விடுவிக்கப்பட்டது. மிகுதியான தொகையைப் பெற்றுக்கொள்வதற்குக் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.
10.	ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பு அனுப்புவதில் தாமதத்திற்கான தண்டக்கட்டணமாக ரூபா 4,505,835 ஐக் கூட்டுத்தாபனம் செலுத்தியிருப்பதையும் 2012 டிசெம்பரில் செலுத்த வேண்டிய பங்களிப்புகளின் மிகுதியாக ரூபா 22,639,568 இருந்ததையும் குழு அவதானித்தது.	இவ்விடயத்தில் கவனம் செலுத்து மாறு CAO/AO பணிக்கப்பட்டார்.
11.	2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத 60 ஆம் இலக்க PED சுற்றுநிருபத்திற்கு முரணான வகையில் அமைச்சரவை அங்கீகாரமின்றி 60 வயதிற்கு மேற்பட்ட 18 பணியாளர்களுக்குச் சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது குழுவால் வெளிப்படுத்தப்பட்டது.	விசேட சேவைகள் அவர்களுக்கு தேவைப்பட்டதினால் அப்பணியாளர்களுக்கு ஒப்படை அல்லது ஒப்பந்த அடிப்படையில் சேவை விஸ்தரிப்பு வழங்கப்பட்டதாகவும், வேண்டிய தகைமைகளுடன் பணியாட்கள் வேலைக்கு ஆட்சேர்ப்புச் செய்து கொள்ளப்பட்டதும் அவர்களுடைய சேவைகள் முடிவுறுத்தப்படும் எனவும் CAO/AO தெரிவித்தார். அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கும் படி குழு CAO/AO வைப் பணித்தது
12.	தலைமைச் செயலகத்திற்கும் மீன்பிடித் துறைமுகங்களுக்குமான இன்ரநெற் இணைப்புடன் கூடிய நேரடித் தொலைபேசி முறைமையை நிறுவு	மேற்படி முறைமையானது தற்போது நடைமுறையில் இல்லாத ஒன்று என்பதுடன் தற்பொழுது அவை

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	வதற்கும் மற்றும் சேவைக்கட்டணங் களாகவும் முறையே ரூபா 13,455,059 மற்றும் ரூபா 14,597,250 செலவழிக் கப்பட்டிருந்ததைக் குழு அவதானித் தது. கூட்டுத்தாபனத்தால் தொலை பேசி முறைமை பயன்படுத்தப் படாமையினால் இச்செலவீனமானது பயனற்றதாகியுள்ளது.	இலாபகரமான ADSL முறைமைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் 7 துறை முகங்கள் ஏற்கனவே ஒருங் கிணைப்பை ஆரம்பித்து விட்டதா கவும் ஏனைய துறைமுகங்கள் இவ்வருடம் டிசெம்பர் ADSL முறைக்கு மாற்றப்படும் எனவும் CAO/AO தெரிவித்தார்.
13.	புதிதாகச் சேர்க்கப்பட்ட பணியாளர் கள் திறைசேரி சுற்றுநிருபங்களுக்கு முரணான வகையில் வேறுபட்ட சம்பள அளவுத்திட்டங்களில் ஏன் வைக்கப்பட்டுள்ளனர் எனக்குழு விசாரித்தது. தகுதிகாண் காலப்பகுதி பூர்த்தியாவதற்கு முன்னமே அவர் களுக்கு 6 சம்பள அதிகரிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதாக அது அவ தானித்தது.	நிலவும் தற்போதைய சம்பள அளவுத் திட்டங்களின் நிமித்தம் உயர்பதவி நிலைகளுக்கான பணியாட்டொகுதி யினரை ஆட்சேர்ப்புச் செய்வதில் அவர்கள் சிரமத்தை அனுபவித்ததாக CAO/AO விளக்கமளித்தார். அதன் நிமித்தம் கல்வி மற்றும் தொழில் வாண்மைத் தகைமைகள் மற்றும் அனுபவங்களின் பிரகாரம் அப் பணியாட்டொகுதியினர் வேறுபட்ட சம்பள நிலைகளில் வைக்கப்பட்டனர். கூட்டுத்தாபனத்தில் தொடர்ந்து அவர் களை வைத்திருப்பதற்காகக் கூட்டுத் தாபனம் சம்பள அதிகரிப்புக்கள் கொடுக்க வேண்டிய சந்தர்ப்பங்களும் இருந்துள்ளன. பொருத்தமான சம்பள அளவுத்திட்டங்களுடனான புதிய SOR ஐக் கூட்டுத்தாபனம் முன்வைக்க வேண்டுமெனவும் அதனை அங்கீ கரித்துக்கொள்ள வேண்டுமெனவும் அல்லது நிலவுகின்ற தற்போதுள்ள சுற்றுநிருபங்களுக்கு முரணான வகையில் பணியாட்டொகுதியினரை ஆட்சேர்ப்புச் செய்ய அவர்களுக்கு தேவையிருப்பின் அமைச்சரவை யிடமிருந்து விசேட அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் குழு கருத்துக்கொண்டிருந்தது.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
14.	தலமை அலுவலக வளாகத்திற்குள்ளே அமைந்துள்ள வெளிப்புற நிறுவனங் களுக்குப் பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காகக் கூட்டுத்தாபனத் தால் ரூபா 7,565,194 தொகை பெற்றுக்கொள்ள வேண்டியிருந்ததைக் குழு அவதானித்தது.	பரிசீலனைத் திகதியன்று அவர்க ளால் குறித்த தொகையில் 50%ஐப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த தாகவும் பாதுகாப்புப் பணியாளர் களுக்குக் கூட்டுத்தாபனங்கள் சம் பளத்தை வழங்குவதும், அந்த நிறுவனங்கள் வரும் மாதத்தில் அவைகளை மீளப் பெற்றுக் கொடுப்பதாகவும் CAO/AO தெரிவித்தார். கொடுப்பனவுகளைத் தாமதிக்கச் செய்யும் நிறுவனங்களுக்கு மேலும் தாமதிக்கச் செய்வதானது பாதுகாப்புச் சேவைகளில் பார பட்சத்தை ஏற்றுபடுத்துமென அறி வித்து எழுதியுள்ளதாக CAO/AO மேலும் தெரிவித்தார்.
15.	கூட்டுத்தாபனத்திற்காக மேலும் 3 சட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் ஒரு சட்ட ஆலோசகர் கிடைக்கக் கூடியதாக இருந்த அதேநேரத்தில் ரூபா 1,608,205 தொகையை வெளிப்புற சட்டத்தரணிகளுக்காக 2012ஆம் ஆண்டில் ஏன் கூட்டுத்தாபனம் செலுத்தியுள்ளது எனக் குழு விசாரித்தது.	வழக்குகளை வெல்வதற்காக அனு பவப்பட்ட சட்டத்தரணிகளின் சேவை களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள் இருந்தன. ஆகவே கூட்டுத்தாபனமானது செலவழித்த தொகையை விடக் கூடிய நன்மை களைப் பெற்றுக்கொள்ள முடிந்ததாக CAO/AO தெரிவித்தார்.
16.	பல்வேறு நோக்கங்களுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங் களைச் செலுத்துவதில் உள்ள தாமதங்கள் குறித்துக் குழு அவ தானித்ததுடன் தற்போதைய நிலை குறித்தும் விசாரித்தது.	முற்பணங்களை மீளப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் களால் 20 மில்லியன் ரூபாய்களை பெற்றுக்கொள்ள முடிந்ததாகவும் CAO/AO தெரிவித்தார். மேற்படி விடயத்தினால் உள்ள முன்னேற்றங் கள் குறித்து ஒரு மாதத்திற்குள் குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு CAO/AO வைக் குழு பணித்தது.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
17.	திறைசேரி உத்தியோகத்தர்கள் பின் வரும் குறைகளைச் சுட்டிக்காட்டினர். அநேகமான எரிபொருள் நிலையங்கள் நட்டத்தில் இயங்கிக்கொண்டிருந்தன. எல்லாத் துறைமுகங்களிலும் ஒரு கிலோவுக்கு ஒரு ரூபா கட்டணம் அறவிடல் கொள்கையை அமுல்ப் படுத்துவதற்குத் தவறியமை. ஊழியர் சேமலாபநிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியக் கொடுப்பனவுகள் மீதான கவனம் செலுத்துதல்.	குறைபாடுகளைப் பரிசீலிப்புக்கு எடுத்து ஒரு வியாபாரத் திட்டத்தைத் தயாரிக்கும்படியும் அவைகளை இல்லாதொழிப்பதற்குப் பரிகார நடவடிக்கைகள் எடுக்கும்படியும் குழு பணித்தது.
18.	கூட்டுத்தாபனமானது தொடர்ச்சியாக நட்டத்தை ஏற்படுத்துவதனால் நட்டம் ஏற்படுவதற்கான காரணங்களைக் கண்டுபிடிப்பதற்குப் பொறுப்பான ஒரு உத்தியோகத்தர் அல்லது குழு நியமிக்கப்பட வேண்டுமெனவும் குறைபாட்டுச் சூழ்நிலையைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் படியும் குழு உறுப்பினர்களில் ஒருவர் ஆலோசனை தெரிவித்தார்.	குழு உறுப்பினர்கள் தமது முன்மொழிவை CAO வுடன் கலந்துரையாடி அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு குழு உறுப்பினர்களை COPE தவிசாளர் பணித்தார்.
19.		கூட்டுத்தாபனமானது 2014 ஆகஸ்டில் மீள அழைக்கப்படுமெனவும் அடுத்த பரிசீலனைக்கு முன்பாக குழுவால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளையெல்லாம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் குழு CAO/AO க்கு அறிவித்தது.
	சுகததாச தேசிய விளையாட்டுத்தொகுதி அதிகாரசபை **விளையாட்டுத்துறை அமைச்சு**	**2014 மார்ச் 18**
1.	2014 ஆம் ஆண்டுக்கான அதிகார சபையின் செயற்திட்டத்தினை, பரிசீலனைத் திகதியன்று கூட	2014 ஆம் ஆண்டுக்கான செயற்றிட்டமானது ஏற்கனவே தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையிடமிருந்து அங்கீ

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	சமர்ப்பிக்காததற்கான காரணங்கள் பற்றிக் குழு கேள்வி எழுப்பியது.	காரம் பெறப்பட்டுவிட்டது என CAO/AO குறிப்பிட்டார். அதனைக் கணக்காய்வாளர் நாயகத்திற்கு ஒரு வாரத்திற்குள்ளாக சமர்ப்பிக்கும்படி குழு பணித்தது.
2.	இலங்கைக் கிரிக்கட் சபையிடமிருந்து நிலுவையாக நிற்கும் ரூபா 25 மில்லியனைப் பெற்றுக்கொள்வதில் உள்ள முன்னேற்றம் குறித்துக் குழு விசாரித்தது.	நிலுவையாக உள்ள தொகையானது மாதாந்தம் தவணைக்கட்டமான ரூபா 200,000 என்ற அளவில் மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டுவருவதாக CAO/AO குறிப்பிட்டார். நிலுவைப் பணத்தை முழுமையாகப் பெற்றுக் கொள்வதற்கு 10 வருடங்கள் எடுக்கும் என்பதால் பெறப்படும் கட்டண விகிதம் குறித்துக் குழு திருப்தியடைவில்லை. ஆகவே மீள் பேச்சுவார்த்தை நடாத்தித் தவணைக் கட்டணத்தை அதிகரிக்குமாறு CAO/AO வைக் குழு பணித்தது
3.	கடன்பட்டோர் நிலுவைகளை மீளப் பெற்றுக்கொள்வது குறித்துக் குழு கேள்வி எழுப்பியது.	கிட்டத்தட்ட ரூபா 65 மில்லியனாக முன்னதாக இருந்த கடன்பட்டோர் நிலுவையில் 60% ஐ மீளப்பெற்றுக் கொண்டு விட்டதாக CAO/AO குறிப்பிட்டார். மிகுதியாக உள்ள நிலுவையை மீளப் பெற்றுக் கொள்வதற்குரிய எல்லா நடவடிக்கை யும் எடுக்கப்பட்டிருந்ததென அவர் மேலும் தெரிவித்தார். முடியுமான வரையில் அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் அந்தக் கடனாளி களின் பெயர்கள், காலப்பகுதி, கடன்தொகைகள் என்பன தொடர் பான விபரங்களடங்கிய ஒரு அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு குழு CAO/AO வைப் பணித்தது.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
4.	மின்னியல் தடுப்பு இயந்திர மொன்றைக் கொள்வனவு செய்வதற் காக ரூ.4,912,403/- ஐ அதிகாரசபை செலவிட்டிருந்த போதிலும் அது முறையாக இயங்கவில்லை என்பதைக் குழு அவதானித்தது.	இக்கொடுக்கல் வாங்கல் தொடர்பில் சுயாதீன விசாரணையொன்றை அவர் கள் மேற்கொண்டதாகவும், அது தொடர்பில் அவர்கள் மேலதிக நடவடிக்கை எடுக்குமுகமாக, அறி வுரையைப் பெற்றுக்கொள்வதற்காக அந்த அறிக்கையைச் சட்டத்துறைத் தலைமை அதிபதிக்கு அனுப்பிய தாகவும், CAO/AO குறிப்பிட்டார். சுயாதீன விசாரணை அறிக்கையைக் குழுவிற்கு அனுப்பிவைக்கும்படியும், அத்தோடு இயந்திரத்தை மதிப்பீடு செய்த தரப்பினருக்கும் செயலாற் றுகை முறி போன்றன அற்ற நிலையில் கொடுப்பனவுகளை மேற் கொண்ட தரப்பினருக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற் கொள்ளும்படி குழு பணித்தது. மேலும் இவ்விடயத்தை இரண்டு மாதத்தினுள் முடிவுறுத்தும்படியும் பணித்தது.
5.	மாதாந்த வாடகையாக ரூ.760,000/- ஐ மூன்று வருடங்களுக்குப் பெற்றுத் தரக்கூடிய சாத்தியப்பாடுள்ள விளை யாட்டுக் ஹோட்டல் (Sports Hotel) குத்தகை ஒப்பந்தத்தை இரத்துச் செய்த காரணத்தினால் அதிகாரசபைக்கு ரூ.2,158,239 நட்டம் ஏற்பட்டதென்ற மதிப்பீடு தொடர்பாகவும் குழு விசாரித்தது.	குத்தகைக்கான வாய்ப்பு வெற்றி கரமாக அமையாததால் அதிகார சபையே ஹோட்டலைப் பேண வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும், எதிர்காலத்தில் கூடிய விலையில் ஹோட்டலைக் குத்தகைக்கு வழங்கு வதற்கு அவசியமான ஏற்பாடுகளை மேற்கொள்வதாகவும் CAO/AO உறுதி யளித்தார். விளையாட்டுப் போட்டி களின் நிமித்தம் கொழும்பிற்கு வரும் மாணவர்களுக்குச் சலுகை அடிப் படையில் வசதிகளை வழங்கும்படி குழு பிரேரித்தது.
6.	2005இல் தெற்காசிய (சார்க்) விளையாட்டுப் போட்டிக்கென ரூ.44	ரூ.150,000/- செலவில் அண்மையில் இவ்வியந்திரம் திருத்தப்பட்டிருந்த

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட மின்னியல் நேரக் கணிப்புக் கருவி, 2010 இலிருந்து செயற்படுத்தப்படாமலிருந்தமைக்கான காரணம் என்னவெனக் குழு வினவியது.	தெனவும், இவ்வியந்திரத்தில் காணப் படும் கணனியிலுள்ள மென்பொருள் இன்னும் இரண்டு வருடத்தில் வழக்கொழிந்துவிடும் என்பதால் அதனை மேலும் இரண்டு வருடங் களுக்கே பயன்படுத்த முடியுமென CAO/AO குறிப்பிட்டார். இவ் வியந்திரக் கொள்வனவுடன் தொடர் புடைய கொடுக்கல் வாங்கல்களின் வெளிப்படைத்தன்மையில் திருப்தி யடையாத குழு, கொள்வனவு எவ்வாறு இடம்பெற்றது என்பது பற்றிய விபரமான அறிக்கை யொன்றை அனுப்பிவைக்கும்படி பணித்தது. அமைச்சின் சொத்துப் பதிவுப் புத்தகத்தில் இவ்வியந்திரம் உள் ளடக்கப்பட்டதாக CAO/AO மேலும் குறிப்பிட்டார்.
7.	விளையாட்டரங்கினுடனான குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் ஸ்ரீலங்கா கிரிக்கெட்டினால் ஆட் சேர்ப்பு செய்யப்படவேண்டிய 17 ஊழியர்களுக்காக ரூ.4,004,430/- ஐ அதிகாரசபை செலுத்தியது ஏன் எனக் குழு வினவியது.	அவர்களுக்கான வெற்றிடங்கள் அதிகாரசபையில் காணப்பட் டமையினால் அந்த ஊழியர்கள் அதிகாரசபையின் பதவியணியில் உள்ளீர்க்கப்பட்டனர் என CAO/AO குறிப்பிட்டார்.
8.	ஆர். பிரேமதாச விளையாட்டரங்குக் குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம், ஸ்ரீலங்கா கிரிக்கெட்டினால் முழுமையாகப் பெற்றிருக்கவேண்டிய காப்புறுதிக் காப்பீடு அவ்வாறு பெறப்படாமைக்கான காரணம் என்ன எனக் குழு வினவியது.	2014இல் பொருத்தமான காப்புறுதிக் காப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற் கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருந்ததாக CAO/AO குறிப் பிட்டார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	**COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்**
9.	ஆர். பிரேமதாச விளையாட்டரங்கின் செயற்கை ஓடுபாதையில் காணப்படும் குறைபாட்டிற்கான காரணங்கள் என்னவெனவும் குழு விசாரித்தது.	இவ்வொப்பந்தம் தொடர்பில் கேட்பு முறியொன்று காணப்பட்டதாகவும், ஐ.எப்.எப்.ஏ.(IFFA) இடமிருந்து ஓடு பாதைக்கான சான்றுப்படுத்தல் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு விற்குக் கிடைத்திருந்ததாகவும் CAO/AO குறிப்பிட்டார். அவ்விதக் குறைபாடுகளைக் குறிப்பிடுகின்ற தொழில்நுட்ப அறிக்கை தமக்குக் கிடைக்கப் பெற்றதன் பின்னர் அது தொடர்பான சட்ட நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதாக CAO குறிப்பிட்டார். நிர்மாணப் பணிகள் அனுபவம் வாய்ந்த கம்பனி யொன்றிற்கு வழங்கப்பட்டிருக் காமையாலும், தொழில்நுட்ப மதிப் பீட்டுக் குழுவானது இவ்வித ஓடுபாதைகள் சார்ந்த அறிவு படைத்த போதியளவு உறுப்பினர்களைக் கொண்டிருக்காமையினாலும் கொள் வனவு தொடர்பில் குழு திருப்தி யடையவில்லை. எனவே சட்ட நடவடிக்கைகளைத் தொடரும்படியும் அது தொடர்பான விபரமான அறிக்கையை மூன்று மாத காலப் பகுதியினுள் குழுவிற்கு அனுப்பிவைக் கும்படியும் குழு பணித்தது.
	இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபை **பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**	**2014 மார்ச் 18**
1.	கடந்த அ.பொ.மு.கு. கூட்டத்தில் குறிப்பிடப்பட்ட பல விடயங்களை நிறுவனம் ஒழுங்குபடுத்தியிருக்க வில்லை.	பாராளுமன்றக் குழுவொன்றினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளை நிறைவேற்றத் தவறியமையானது பாராளுமன்றத்தை அவமதிக்கும் செயலாகும் என எடுத்துரைத்ததுடன்,

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		இவ்விடயங்களைச் சீர் செய்வதற்காக மேலும் மூன்று மாதகாலம் வழங்கப்பட்டது.
2.	ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு தொடர்பான செயற்பாடுகள் போதிய ளவு வெளிப்படைத்தன்மையைக் காட் டியிருக்கவில்லையெனவும், முகாமைத் துவத்திலுள்ள பல்வேறு மட்டங் களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு திருப்திகரமாகக் காணப்படவில்லை யெனவும், இது நிறுவனத்தின் நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள படு மோசமான நிலையை உணர்த்துவ தாகவும், கணக்காய்வாளர் தலைமை யதிபதி அறிக்கையிட்டிருந்தார்.	
3.	நிறுவனமானது முறையான மதிப் பீடொன்றை மேற்கொள்ளாததன் கார ணமாகவும், உண்மையான பெறுமதிக் கான காப்புறுதிக் காப்பீட்டைப் பெற்றுக்கொள்ளாததின் காரணமாக வும், இதன் தொழிற்சாலையொன்றில் ஏற்பட்ட தீயினால் அழிந்த சுமார் 75 இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களுக்கான நட்டஈட்டுத் தொகையாக ரூ.930,000/-ஐ மாத்தி ரமே இதனால் பெறமுடிந்தது.	கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கையிட்டதன் பிரகாரம், இவ் விபத்து ஏற்பட்ட சமயத்தில் சூளையை இயக்குவதற்குப் பயிற்றப் பட்ட தொழிலாளியொருவர் இன்மை, தரக்குறைவான விறகைப் பயன்படுத் தியமை ஆகியன தீ ஏற்பட்டதற்கான காரணமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அரசாங்கப் பகுப்பாய்வாளரின் அறிக்கை வழங்கப்பட்டதன் பின்னர், இவ்விடயம் தொடர்பிலான அறிக்கை யொன்றை அனுப்பிவைக்கும்படி CAO/AO வைக் குழு பணித்தது.
4.	இறப்பர் பால் தொடர்பில் வங்கியில் வைப்பிலிடப்பட்டிருந்த பாதுகாப்பு வைப்பு 2013 மே 10ஆம் திகதியுடன் காலாவதியான பொழுதிலும், நிறு வனத்தின் இறப்பர் பால் தொடர்ந்தும் அதே வழங்குனருக்கு விற்பனை	இவ்விடயத்தை ஒழுங்குபடுத்தும்படி CAO/AO பணிக்கப்பட்டார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	செய்யப்பட்டு வருவதைக் குழு அவதானித்தது.	
	தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம் **பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**	**2014 மார்ச் 18**
1.	2013 ஒக்டோபர் 19இலிருந்து பணிப் பாளர் நாயகத்திற்கான பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது. மேலும் மத்திய முகாமைத்துவப் பதவிக்காக 01 வெற்றிடமும், கனிஷ்ட முகாமைத்துவப் பதவிக்காக மூன்று வெற்றிடங்களும் காணப்பட்டன.	வெற்றிடங்கள் தொடர்பில் இருமுறை விளம்பரங்களை மேற்கொண்ட போதி லும், தேவையான தகைமையுடைய பொருத்தமான நபர்கள் யாரும் அதற்கென விண்ணப்பிக்கவில்லை. அதன்காரணமாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஒப்புதலுடன் வயதெல்லை 55 ஆக அதிகரிக்கப்பட்டதென AO பதிலளித் தார். மேலும் இந்நிறுவனம் அமைந்துள்ள இடம் (அத்துருகிரிய) மற்றும் தற்போதைய குறைவான சம்பள அளவுத்திட்டம் ஆகியன இவ்வெற்றிடங்களை நிரப்பும் செயற் பாட்டில் தாக்கம் செலுத்தின எனவும் அவர் குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பில் கௌரவ. அமைச்சருடன் கலந்துரையாடி அதனை இயலுமானவரை விரை வாகத் தீர்க்கும்படி CAO/AO பணிக்கப்பட்டார்.
2.	தேசியப் பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகத்துடன் இணைந்து பல்கலைக் கழகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட விஞ்ஞான இளமானிப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கென அப்போது 9வது தொகுதி மாணவர்கள் சேர்க்கப்	பல்கலைக்கழகத்துடன் ஏற்கனவே கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்த தாகவும், வெகுவிரைவில் புரிந் துணர்வு உடன்படிக்கை கையொப் பமிடப்படுமெனவும் CAO/AO தெரிவித்தார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	பட்டிருந்த போதிலும், இவ்விடயம் தொடர்பில் வயம்ப பல்கலைக் கழகத்துடன் உடன்படிக்கை யொன்றை நிறுவகம் மேற்கொண் டிருக்கவில்லை.	
3.	நிறுவகத்தின் நிதி நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடப் பட்டது.	கணக்கீட்டுக் கொடைகளுக்கெனத் துல்லியமான கணக்கீட்டுத் தரா தரங்கள் பேணப்பட்டிருக்கும் பட்சத் தில் அவர்களால் குறைவான குறை பாடுகளைக் காட்டியிருக்க முடியு மெனக் கணக்காய்வாளர் தலைமை யதிபதி தெரிவித்தார். நிதிக் குறை பாடுகளின்றிச் சிறப்பான முகாமைத்து வத்தை மேற்கொண்டமைக்காக நிறுவகத்தைக் குழு பாராட்டியது.

உபகுழு 3 இனால்
பரீட்சிக்கப்பட்ட நிறுவனங்கள்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	இலங்கை புடவைகள், ஆடைகள் நிறுவகம் **கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு**	**2014 ஏப்பிரல் 08**
1.	கடந்த அ.பொ.மு.கு. கூட்டத்தின் பொழுது உள்ளகக் கணக்காய்வுகளை வலுப்படுத்துவது தொடர்பாகக் குழு கலந்துரையாடிய போதிலும், இவ் வாராய்வு நடைபெற்ற திகதிவரை நிறுவகத்திற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப் பட்டிருக்கவில்லை.	சம்பளங்கள், பதவியணி ஆணைக் குழுவினால் ஆட்சேர்ப்புத் திட்டத் திற்கு ஒப்புதல் அளிக்கும்வரை கணக்காய்வுச் செயற்பாடுகளை மேற் கொள்வதற்காக அமைச்சிலிருந்து தற்காலிகமாக அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டிருந்ததாகக் குறிப்பிடப் பட்டது. இருப்பினும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்படாமை தொடர்பில் தனது அதிருப்தியை வெளிப்படுத்திய குழு, இவ் விடயத்தைத் துரிதப்படுத்தும்படி CAO/AO வைப் பணித்தது.
2.	பின்வரும் விடயங்கள் தொடர்பில் குழு கலந்துரையாடல்களை மேற்கொண்டது. (i) ஆடைக் கைத்தொழில் தொடர்பான விஞ்ஞான ஆராய்ச்சிகளின் தற்போதைய நிலை. (ii) சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பல்வேறு பிரிவுகளின் செயற்பாடுகள். (iii) நாட்டின் நெசவுசார் உற்பத்திகள்.	நிறுவகத்தின் செயலாற்றுகைகளை மேலும் மேம்படுத்துவதற்கு அவசிய மான சாத்தியப்பாடுள்ள சகல படி முறைகளையும் மேற்கொள்ளும்படி CAO/AO விடம் குழு தெரிவித்தது.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
3.	2012ஆம் ஆண்டிற்கான ஆண்ட றிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்பட்டிருக்கவில்லை.	அதனை விரைவாகச் சமர்ப்பிக்கும்படி CAO/AO வைக் குழு பணித்தது.
4.	குழு பின்வரும் ஆலோசனைகளைத் தெரிவித்தது. (i) சேவைகளை இலகுவாகப் பெற்றுக்கொள்ளும் முகமாக இலத்திரனியல் கற்றல் வசதிகளை அறிமுகம் செய்வது தொடர்பில் அவதானத்தைச் செலுத்துதல். (ii) கல்வி அமைச்சுடன் இணைந்து பாடசாலைகளில் உயர்தரத் தொழில்நுட்பப் பாடங்கள் பிரிவில், நெசவுக் கைத்தொழில் தொழில் நுட்பத்தை ஒரு பாடமாக உள்ளடக்குவதற்கான சாத்தியப் பாடுகளை ஆராய்தல்.	இவ்விடயம் தொடர்பில் கவனிப் பதற்கு CAO/AO இணங்கினார்.
5.	ஆராய்வுகளை மேற்கொண்ட திகதிவரை 43 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை.	தோல் ஆடைகளுக்கான புதிய பிரிவு தாபிக்கப்படும்வரை இது தாமதிக்கப் பட்டதாகவும், பொருத்தமான ஆளணியினரை ஆட்சேர்ப்பதற்கான ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டில் அவர்கள் ஈடு பட்டிருந்ததாகவும் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.
6.	பொல்காவலையிலுள்ள நூல் சாய மூட்டும் நிலையத்திற்காக 2011ஆம் ஆண்டு ரூ.8 மில்லியன் செலவில் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப் பட்டபோதிலும், 2014ஆம் ஆண்டு ஆரம்பத்தில் கூடக் கொதிகலன்	"தேசத்திற்கு மகுடம்" நிகழ்ச்சிக்கு சமாந்தரமாக மாகாண சபையினால் செயற்பாடுகள் ஆரம்பிக்கப் பட்டிருந்தன.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	செயற்படுத்துனரொருவர் ஆட் சேர்ப்புச் செய்யப்படாததன் காரண மாக, நூல் சாயமூட்டும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை.	
7.	ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகியவற்றுக்கான பங்களிப்புத் தொகைகள் உரிய நேரத்தில் செலுத்தப்பட்டிருக்காத காரணத்தினால் நிறுவகத்தால் 895,698 ரூபா தண்டப்பணம் ஒன்று செலுத்தப்படவேண்டியிருந்தமை.	இரண்டு நிறுவனங்களையும் ஒன் றாகக் கூட்டிணைப்பதற்கு முன்னர், ஒரு நிறுவனம் நட்டத்தில் இயங்கிய தன் காரணமாக அந்தப் பங்களிப் புகளை உரிய நேரத்தில் செலுத் தியிருக்கவில்லை. அதன் காரண மாகவே தண்டப்பணம் செலுத்த வேண்டி ஏற்பட்டது.
8.	இலங்கை மின்சார சபைக்கு (இ.மி.ச) செலுத்துகின்ற மின்கட்டணத்தை, வர்த்தகரீதியான மின்கட்டண முறை யிலிருந்து கைத்தொழில் ரீதியான மின்கட்டண முறைக்கு மாற்றுமுகமாக ரூ.6,133,865/- செலவில் மின்சார முறை நவீனப்படுத்தப்பட்ட போதி லும், அச்செயல் பயனற்றதாகவே காணப்பட்டது. ஏனெனில் கைத் தொழில் சார் வகையில் இந் நிறுவனத்தைப் பரிசீலிக்க முடி யாதென இ.மி.ச. அறிவித்திருந்தது.	அவர்கள் மீண்டுமொரு கோரிக்கை விடுத்ததன் பிரகாரம், இ.மி.ச. பொறியியலாளர்கள் அண்மையில் நிறுவனத்திற்கு விஜயம் செய்த தாகவும் மேலும் இவ்விடயம் தொடர்பில் இ.மி.ச. தவிசாளருடன் தனிப்பட்ட முறையில்தான் கலந் துரையாடியதாகவும் CAO/AO குறிப்பிட்டார்.
9.	தற்போதைய சட்ட ஏற்பாடுகளின்படி அமைச்சின் செயலாளரே நிறுவனத் தின் தவிசாளராக இருப்பது அவசியமாகும். இருப்பினும் நிறு வனத்தின் செயற்பாடுகளை மேற் பார்வை செய்வதைவிட உயர்வான நிலையை உடையவராகவே இவர்	குழு நடைபெற்ற தினத்திற்கு அடுத்தநாள் தவிசாளர் பதவியை இராஜினாமா செய்வதற்குத் தான் தீர்மானித்திருந்ததாகவும், சட்டத்தில் ஏற்பாடுகள் இருப்பதன் காரணமாகப் பொருத்தமான நபரொருவரை இப்பதவிக்கு நியமிப்பதாகவும்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	இருத்தல் வேண்டுமென்ற கருத்தைக் குழு கொண்டிருந்தது.	CAO குறிப்பிட்டார்.
	இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் **பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**	**2014 ஏப்பிரல் 08**
1.	ஐக்கிய இராச்சிய (UK) அலுவலகத் துடன் தொடர்புடைய அனுசரணை வருமானமாகிய ரூ.2,428,920/- ஐ அதற்குப் பொறுப்பான அதிகாரியி டமிருந்து அறவிடுவதற்கான நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	இத்தொகையைச் செலுத்துமாறு சம்பந்தப்பட்ட நிறவனத்திற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்த தாகவும், தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுமெனவும் இது தொடர்பில் ஆரம்பக் கட்ட விசாரணைகளை நிறுவனம் முன்னெடுத்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டது. இது தொடர்பான அறிக்கையொன்றை அ.பொ.மு.கு. இற்கு அனுப்பிவைக்கும்படி குழு பணித்தது.
2.	ஊடகவியலாளர்களின் வருகையுடன் தொடர்புடைய நடைமுறைப்படுத்தப் பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஏற்பட்ட செலவாகிய, ஏழு இனங்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல் தொகையாகிய ரூ.167,416,107/- ஐ நிரூபிப்பதற்கு ஏற்ற சான்றுகள் அற்ற நிலையில் கணக்குகளில் அது உள்ளடக்கப்பட்டிருந்தது.	2013ஆம் வருடத்திற்கான கணக்காய் வுகளை மேற்கொள்கின்ற கணக்காய் வாளருக்கு அவ்வறிக்கையின் பிரதி யொன்றை அனுப்பிவைக்கும்படி குழு பணித்தது.
3.	உபரி பணத்தொகையான ரூ.500 மில்லியன் திரட்டிய நிதியத்தில் வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை, இது 2011, PED 56 ஆம் இலக்க சுற்றுநிரூபத்தின் பணிப்புரைகளை	இரண்டு வருடங்களில் பணியகத் தினால் திட்டமிடப்பட்ட சுற்றுலா மேம்பாட்டுச் செயற்பாடுகளை நிறைவுசெய்ய முடியவில்லையெனவும்,

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	மீறிய செயலாகும்.	இப்பணமானது அத்தகைய செயற்பாடுகளை நிறைவு செய்வதற்காக 2012, 2013 இல் பயன் படுத்தப்பட்டதெனவும், திறைசேரி யின் ஒப்புதலுக்காகக் காத்திருக் கின்ற நிலையில், உபரிப்பணமானது ஏற்கனவே இலங்கை வங்கியில் முதலீடு செய்யப்பட்டுள்ளதாகவும் CAO/AO குறிப்பிட்டார்.
4.	உபரி பணத்தொகையான ரூ.1020 மில்லியனை முதலீடு செய்வதற்குப் பணியகம் தவறியிருந்தது. இதன் காரணமாக ரூ.134 மில்லியன் நட்டம் பணியகத்திற்கு ஏற்பட்டது.	இவ்விடயம் அறிவிக்கப்பட்டவுடன் பணத்தை வங்கியில் வைப்பிலிடு வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டதாகவும், அதற்குரிய வட்டி யும் கிடைக்கப்பெற்றதாகவும் CAO/AO குறிப்பிட்டார்.
	இலங்கை மாநாட்டுப் பணியகம் **பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**	**2014 ஏப்பிரல் 08**
1.	இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து அறவிடப் படாமல் காணப்பட்ட ரூ.7,150,286/- மற்றும் 17,500,000/- தொடர்பில் குழு விசாரித்தது.	அத்தொகைகளைச் செலுத்துவதற்கு அதிகாரசபை தனது இணக்கப் பாட்டைத் தெரிவித்துள்ளது.
2.	2009 மற்றும் 2010இல் ஸ்திரத்தன்மை மிக்க சுற்றுலாக் கருத்திட்டத்திற்கென ரூ.170,960/- மற்றும் ரூ.921,602/- ஆகிய தொகைகளைப் பணியகம் செலவிட்டிருந்த போதிலும் ரூ.180,289/- மாத்திரமே கிடைக்கப் பெற்றிருந்தது.	2008இல் இக்கருத்திட்டம் ஆரம்பிக் கப்பட்டது. 2010இல் இது முழு மையாக இயங்கவில்லை. அக்காலப் பகுதியில் அதனை அமுல்ப்படுத்தும் முகவராகச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை காணப்பட்டது. அக்கருத்திட்டத்தை மீள ஆரம்பிப்பதற்காக 2010இல்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		மாநாட்டுப் பணியகத்திடம் பொறுப் பளிக்கப்பட்டது. அவர்களுக்குத் தொடங்கு பணம் தேவைப்பட்டது. அதற்கான ஒப்புதலைப் பணிப்பாளர் சபை வழங்கியிருந்தது. அப்பணத்தில் குறிப்பிடக்கூடியளவு தொகை அக் கருத்திட்டப் பணியாட்டொகுதி யினருக்காகச் செலவு செய்யப் பட்டிருந்தது. மேலும், சாத்தியப்பாடு அறிக்கையொன்றைப் பணியகம் தயாரித்திருந்த போதிலும் அதற்கான பணத்தை உலக வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியவில்லை யெனக் குறிப்பிடப்பட்டது.
3.	பொதுத் திறைசேரியின் ஒப்புதலைப் பெறாமல் சிரேஷ்ட முகாமை யாளருக்கு வாகன வாடகையாகவும் எரிபொருள் கொடுப்பனவாகவும் முறையே ரூ.360,000/- மற்றும் ரூ.194,800/- செலுத்தப்பட்டிருந்தது.	சுற்றுலாச் சபை இயங்கிய காலப் பகுதியில் சகல அதிகாரிகளும் இந்த வசதிக்கு அருகதையுடையவர்களாகக் காணப்பட்டனர். பணியகமானது அமைச்சினூடாகப் பல்வேறு சந்தர்ப் பங்களில் இது தொடர்பில் திறை சேரிக்கு எழுதியது. அதற்குப் பல பதில்களும் கிடைக்கப்பெற்றன. அந்தப் பதில்களைத் தீர் வொன்றினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக் கப்பட்ட போதிலும், இதுவரை அதனால் தீர்மானமொன்றை எட்ட முடியாமலுள்ளது.
4.	விமானப் பயணத்திற்காக ரூ.512,450/- செலவிடப்பட்டிருந்தது. பணியகத்தின் குறிக்கோள்களுக்கும் இதற்கும் எவ்விதப்பொருத்தப்பாடும் இல்லை.	சார்க் நிதி அமைச்சர்களுக்கான மாநாடு நடைபெற்ற சமயத்தில், பங்களாதேஷ் நிதி அமைச்சர் அவர்கள் மத்தள விமான நிலையத்திற்கும், அம்பாந்தோட்டை மாநாட்டு மண்டபத்திற்கும் விமானம் மூலம் விஜயம் செய்வதற்காக நிதி

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		அமைச்சின் கோரிக்கையின் பிரகாரம் இத்தொகை இலங்கை விமானப் படைக்குச் செலுத்தப்பட்டது.
	தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் **இடர் முகாமைத்துவ அமைச்சு**	**2014 ஏப்பிரல் 08**
1.	அனர்த்தங்களைத் தணிக்கும் நோக்குடன் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட மண்சரிவு இடர் பிரதேசங்களை வரை படமாக வரைதல் செயற்பாட்டின் முன்னேற்றம் தொடர்பாகக் குழு விசாரித்தது.	1:50000 என்ற அளவுத் திட்டத்தில் 10 மாவட்டங்களுக்கான வரைபடம் வரைதல் பூரணப்படுத்தப்பட்டுள்ள தாகவும், குருநாகல், கம்பஹா ஆகிய இரண்டு மாவட்டங்கள் பின்னர் மேற்படி விடயத்துடன் சேர்க்கப் பட்டதாகவும், 1:10000 என்ற அளவுத்திட்டத்தில் 07 மாவட்டங் களுக்கான வரைபடம் வரைதல் பூரணப்படுத்தப்பட்டுள்ளதாகவும் CAO குறிப்பிட்டார்.
2.	அமைப்பின் கடன் அறவிடலின் தற்போதைய நிலை பற்றிக் குழு விசாரித்தது.	2001.12.31இல் ரூ.24 மில்லியனாகக் காணப்பட்ட கடன் நிலுவைத் தொகையை, 2013.12.31இல் 11 மில்லியன் வரை குறைக்க முடிந்த தெனவும், 1.25 மில்லியன் மாத்திரமே பதிவழிக்கப்பட்டதெனவும் CAO/AO குறிப்பிட்டார். 2013.12.31இல் கடன் நிலுவையான ரூ.9 மில்லியனைக் குறைப்பதற்கு மேலும் நடவடிக்கை களை மேற்கொள்ளும்படி குழு பணித்தது.
3.	371(5) நிதிப் பிரமாணங்களுக்கு முரணாக 2013.12.31இல்	இந்நிலைமையை எதிர்காலத்தில் குறைப்பதாக CAO/AO

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	தீர்க்கப்படாத முற்பணத் தொகையான ரூ.465,177/- அதிகரித்தமை தொடர்பாகவும் குழு விசாரித்தது.	உறுதியளித்தார்.
4.	2013ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் இதுவரை திறை சேரியிடமிருந்து கிடைக்கவேண்டிய நிலுவைத் தொகையாக ரூ.10.5 மில்லியன் குறிப்பிடப்பட்டிருந் தமைக்கான காரணத்தைக் குழு வினவியது.	2011 காலப்பகுதியில் மண்சரிவு இடர் பிரதேசங்களை வரைபடமாக வரைந் தது தொடர்பில் இச்செலவு ஏற் பட்டதாகவும், இத்தொகையைத் தீர்க்கும்படி கோரிக்கைகள் திறை சேரிக்கு விடுக்கப்பட்டிருந்ததாகவும் CAO குறிப்பிட்டார். திறைசேரியின் ஒப்புதலுடன் இத்தொகையைப் பதி வழிப்பதற்கு அவசியமான நட வடிக்கைகளை மேற்கொள்ளும்படி குழு பணித்தது.
5.	தே.க.ஆ.அ. இனால் நிராகரிக்கப்பட்ட கட்டிடப்பொருட்களை, நாட்டில் மற்றுமொரு நிர்மாணத்திற்காகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப் பதற்கேற்ற வகையில் காணப் படுகின்ற பொறிமுறைகள் தொடர் பாகவும் குழு விசாரித்தது.	பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் தே.க.ஆ.அ. கூட்டிணைக்கப்பட்டதன் பின்னர் அவ்வாறு செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளதாக CAO உறுதியளித்தார்.
	இலங்கைக் காப்புறுதிச் சபை **நிதி, திட்டமிடல் அமைச்சு**	**2014 ஏப்பிரல் 08**
1.	நாட்டிலுள்ள காப்புறுதி நிறுவனங் களை ஒழுங்கமைக்கும் அமைப்பு என்ற முறையில், விவசாயிகள் ஓய்வூதியத் திட்டம் போன்ற சில காப்புறுதித் திட்டங்கள் எதிர் கொள்கின்ற பிரச்சனைகள் தொடர் பில் காத்திரமாக இது செயற்பட வேண்டியுள்ளது. ஏனெனில்	இவ்விடயம் தொடர்பில் அமைச்சு மட்டத்தில் கூட்டமொன்றை நடத்து வதற்கு CAO/AO இணங்கினார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	அத்தகைய திட்டங்கள் மூலம் வாக்குறுதியளிக்கப்பட்ட நன்மைகள் கிடைக்காத காரணத்தினால் பல பயனாளிகள் அதிருப்தியுற்றவர் களாகக் காணப்படுவதுடன், அத்தகைய திட்டங்கள் மீது நம்பிக்கையிழந்தவர்களாகவும் உள்ளனர்.	
2.	2010இல் கடந்த முகாமைத்துவத்தின் பொழுது 17 அதிகாரிகளுக்கு ஒழுங்கீ னமான முறையில் வழங்கப்பட்ட சம்பள ஏற்றங்கள் தொடர்பில் திறைசேரியின் ஒப்புதல் பெறப் பட்டிருக்கவில்லை.	அப்போதைய பணிப்பாளர் சபையின் ஒப்புதலின் கீழ், அத்தகைய அதிகாரி களின் செயலாற்றுகைக்காகச் செலுத்தப்பட்டதை மீள அறவிடும் நிலையில் நிறுவனம் இல்லையென CAO/AO குறிப்பிட்ட போது, கடந்த முகாமைத்துவத்தின் காலத்தில் இடம் பெற்ற முறைகேடு என்பதற்காக, இதற்கெதிராக நடவடிக்கை எடுக்கும் தற்போதைய நிறுவனத்தின் பொறுப்பு, இல்லாதொழிக்கப்பட வில்லை என வலியுறுத்திக் கூறிய குழு, இவ்விடயம் தொடர்பில் திறைசேரிக்கு எழுதி, அதன் அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்ளும்படி CAO/AO வைப் பணித்தது.
3.	நிறுவனத்தின் 33 ஊழியர்களையும் அவர்களது குடும்ப உறுப்பினர் களையும் காப்புறுதி செய்தமைக்காக ஏற்பட்ட செலவுத் தொகையான ரூ.513,713/- தொடர்பில் திறைசேரியின் ஒப்புதல் பெறப்பட்டிருக்கவில்லை.	இவ்விடயத்தை ஒழுங்கமைக்கும்படி CAO/AO பணிக்கப்பட்டார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
4.	குறைபாடுகளுக்கு மத்தியில் இயங்கு கின்ற நிறுவனம் என்ற முறையில், ஒருவருக்கு ரூ.1000/- என்ற வரையறையை விஞ்சி அதிகமான தொகையை வெகுமதியாகச் செலுத்தி யதன் காரணமாக 2013ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிரூபத்தை இது மீறியுள்ளது. இதன் காரணமாக 2010, 2011, 2012 ஆகிய மூன்று ஆண்டு களுக்காகச் செலுத்தப்படவேண்டிய ரூ.94,000/- இற்குப் பதிலாக ரூ.3,717,751/- செலுத்தப்பட்டிருந்தது.	நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட இவ்வித நடைமுறைசார் பிழைகள் தொடர்பில் குழுவிற்கு விதப்புரை களை வழங்கும்படி திறைசேரியைக் குழு பணித்தது.
	இலங்கைச் சமூக பாதுகாப்புச் சபை நிதி, திட்டமிடல் அமைச்சு	**2014 ஏப்பிரல் 08**
1.	06 மாதங்களுக்கு முன்னர் முன் கூட்டிய அறிவித்தல் கொடுக்காமல், தலைமையக வளவாகப் பயன் படுத்திய கட்டிடத்தைவிட்டு, உரிய காலத்திற்கு முன்னர் வெளியேறியதன் காரணமாக, எஞ்சிய 07 மாதங் களுக்கான வாடகையாக ரூ.5,090,906/- செலுத்தவேண்டி ஏற்பட்டது.	சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் உடமையாக்கப்பட்ட காலப் பகுதியிலிருந்து, இக்கட்டிடத்திலேயே இந்நிறுவனம் அமைந்திருந்ததாகவும், மேற்படி திணைக்களமே குத்தகைக்கு விடுபவருடனான உடன்படிக்கையை மேற்கொண்டதாகவும் CAO/AO குறிப்பிட்டார். அதன் பிரகாரம் அதிக இடவசதியுடைய இடமொன்றிற்குச் செல்வதன் அவசியம் பற்றித் திணைக்களத்திற்கு நிறுவனம் அறி வித்திருந்ததாக அவர் குறிப்பிட்டார்.
2.	திட்டத்திற்குப் புதிய உறுப்பினர் களைச் சேர்த்துக்கொள்வதில் குறிப் பிடக்கூடியளவு வீழ்ச்சி காணப் பட்டதையும், தற்போதைய உறுப்	புதிய திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர், தற்போதைய திட்டங்கள் மீது மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துமுகமாக, முறைமையுடன்

	அடையாளங்காணப்பட்ட பிரதான விடயங்களும் பிரச்சனைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	பாண்மையில் கூட 75% உறுப் பினர்கள் செயற்றிறமையற்றவர் களாகக் காணப்படுவதையும் குழு அவதானித்தது.	கூடிய முறையான காப்பீட்டு ஆய்வொன்றின் முக்கியத்துவம் பற்றிக் குழு குறிப்பிட்டது.
3.	தலைமை அலுவலகத்தை நிறுவு வதற்காக ரூ.195 மில்லியனுக்குக் கட்டிடமொன்றை ராஜகிரியவில் நிறுவனம் கொள்வனவு செய்திருந்தது. இது தொடர்பில் திறைசேரிப் பிரதிநிதி ஆட்சேபனை தெரிவித்திருந்தும், இதன் பெறுமதி ரூ.165 மில்லியன் என அரசாங்க மதிப்பீட்டாளர் மதிப்பிட்டிருந்தும் கூட இந் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருந்தது.	முறையற்ற கொடுக்கல் வாங்கல் தொடர்பாகத் திறைசேரியின் பிரதிச் செயலாளருக்குத் திறைசேரியின் பிரதிநிதி எழுத்துமூலம் அறிவித்ததன் பின்னர், திறைசேரியினால் மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் உள்ளடங்கலாக இக்கொடுக்கல் வாங்கல் தொடர்பான அறிக்கையை அனுப்பிவைக்கும்படி திறைசேரியைக் குழு பணித்தது.

சுட்டி

அ

அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனம் – 6
அரச ஈட்டு, முதலீட்டு வங்கி - 46

இ

இலங்கை அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடட் – 34
இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் – 87
இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபை – 127
இலங்கை உள்ளூராட்சி நிறுவகம் – 74
இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் - 114
இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் – 136
இலங்கை நியமங்கள் நிறுவகம் – 31
இலங்கை புடவைகள், ஆடைகள் நிறுவகம் - 133
இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம் – 98
இலங்கை மாநாட்டுப் பணியகம் – 137
இலங்கை மின்சார சபை – 82
இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகம் – 57
இலங்கை வாழ்க்கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை – 102
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் – 61
இலங்கைக் கடற்றொழில் கூட்டுத்தாபனம் – 12
இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் – 71
இலங்கைக் காப்புறுதிச் சபை – 140
இலங்கைச் சமூக பாதுகாப்புச் சபை - 142
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் - 17

ஊ

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை - 1

எ

எச்.டி.எப்.சி. வங்கி - 50

கூ

கூட்டுறவு மொத்த விற்பனவுத்தாபனம் (CWE) - 80

கை

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் - 3

கொ

கொழும்புப் பல்கலைக்கழகம் - 40

சு

சுகததாச தேசிய விளையாட்டுத்தொகுதி அதிகாரசபை - 123

தெ

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை - 111
தெங்கு பயிற்செய்கைச் சபை - 113

தே

தேசிய இடர்முகாமைத்துவ நிலையம் - 5
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் – 21
தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் - 139
தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை - 9
தேசிய சேமிப்பு வங்கி – 63
தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம் - 129
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு – 78
தேசியக் கல்வி நிறுவகம் - 54

ந

நகர அபிவிருத்தி அதிகார சபை - 25

நு

நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை - 66

பா

பாளி, பௌத்த பட்டப்பின்படிப்பு நிறுவகம் - 100

பு

புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம் - 46

ம

மத்திய சுற்றாடல் அதிகாரசபை - 36

மா

மானுடவியல், சமூக விஞ்ஞானம் ஆகிய உயர் கற்கைகளுக்கான தேசிய நிலையம் - 97

மூ

மூன்றாம்நிலைத் தொலைக்கல்வி ஆணைக்குழு - 107

வ

வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா – 60
வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா -84
வாழ்க்கைத்தொழில் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் - 106

ஸ்ரீ

ஸ்ரீ லங்கா ரெலிகொம் - 92